# பூரணி

## இலக்கிய சஞ்சிகை

## இதழ் இரண்டு

ஆசிரியர்: கி.கிருபானந்தா

# போற்றுகின்றேன்.

பூரணியாம் சஞ்சிகையின் பிரதி இரண்டைப்
போற்றுகிறேன் கிருபாநீர் புரியுந் தொண்டைச்
சீரணியாய் அதனமைப்பில் திகழக் கண்ட
சிறப்புக்கள் பலபலவாம் என்னை ஈர்க்கக்
காரணியாய் அமைந்தபல கட்டு ரை,பா,
கதைகளுடன் நேர்காணல் ஆய பலவும்
தாரணியில் தக்கபயன் தருமென் றெண்ணி
தாய்நயினை பூரணியைப் போற்று வேனே.

நம்பணிகள் நற்பணியாய் நாளு மோங்க
நல்லதொரு சஞ்சிகையைத் தலைமேற் கொண்டு
நம்கிருபா மிகநல்ல உறுதி யோடு
நல்லறிஞர் மெச்சுவகை நயக்கு மாறு
நம்நயினை பூஷணியை நெஞ்ச மிருத்தி
நாளுமேநன் மலராலே வணக்கஞ் செய்யும்
அம்பிகைநல் அருளென்றும் அருள்க என்று
அன்னைமலர்ப் பாதமது வணக்கஞ் செய்வாம்.

—சேந்தன்.

# பூரணி

## இலக்கிய சஞ்சிகை

## இதழ் இரண்டு



உ
சிவமயம்

# இலக்கிய உலகைப் பணிந்து நிற்கின்றேன்

"பூரணி" இதழ் இரண்டில் தங்களைச் சந்திப்பதில் பேருவகை கொள்கின்றேன். இம்மலரில் முத்தமிழ்த்துறை முறையில் பயின்ற உத்தமர்கள் எழுதியுள்ளார்கள்; திகைத்து நிற்கின்றேன். இச் சிறுபுல்லையும் ஏற்கும் அவர்கள் அருள்திறன் கண்டு வணங்கி நிற்கின்றது என்மனம். இந்த ஏழைக்கு பிச்சையாய் இட்டது பெருஞ் சொத்தாகி மலர்கின்றது.

நான் தமிழை முறைப்படி பயின்றவன் அல்ல. தமிழ்ப் பண்டிதனுமல்ல. தமிழ்மேற் கொண்ட பற்றினால் நானாய்த் தேடிய சிலவும் என் குருநாதர்கள் போட்ட பிச்சையுமே என் கைச்சரக்கு. இந்நிலையில் நூலாக்கப் பணியில் என்னை அமிழ்த்தி பின் ஒருவாறாய் கரையேற்றிய பெரியார்களை உளமிருத்தி உவகை கொள்கின்றேன்.

பல சஞ்சிகைகள் இன்று வெளிவந்துள்ளன. அப்பெருவிருந்தில் சிறியேன் சமைத்ததையும் பக்தியோடு படைக்கின்றேன். அன்பினால் இட்ட இந்த அமுதை ஏற்கவேண்டி இலக்கிய உலகைப் பணிந்து நிற்கின்றேன்.

**அன்பன்**
**கி. கிருபானந்தா**

521/9 பருத்தித்துறை வீதி,
நல்லூர்



# வாலி, சுக்கிரீவன் முதலானோர் குரங்குகளா, வானரர்களா?

தமிழ்மணி அகளங்கன்.

கல்வியிற் பெரியவன், கவியிற் பெரியவன், கவிச்சக்கரவர்த்தி என்றெல்லாம் புகழப்படும் கம்பனின் இராமாயணத்தில், கம்பனுக்கே சவாலாக அமைந்த பிரச்சினை வாலி வதை என்று சொன்னால் அது மிகையானதல்ல.

வான்மீகியின் வாலி மோட்சத்தைக் கம்பன் வாலி வதையாக்கி, வாலிக்கும் இராமனுக்கும் இடையே வாதப்பிரதி வாதங்களை நடத்திச் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறான்.

தன்னோடு போர் செய்யாதவனும் நிராயுதபாணியாக நின்றவனுமாகிய வாலிக்கு இராமன் மறைந்து நின்று அம்பெய்ததை நியாயப்படுத்துவதற்காக இப்பகுதியை விரிவுபடுத்திய கம்பன், வாலியை மிகப்பெரிய பலங்கொண்டவனாகவும் பல சிறந்த வரங்களைப் பெற்றவனாகவும் காட்டுகிறான்.

தேவர்களும் அசுரர்களும் ஒன்றாகச் சேர்ந்தும் கடைய முடியாதிருந்த பாற்கடலைத் தனியொருவனாகக் கடைந்தவன் என்றும் தன்முன்னால் நின்று போர் புரிபவரின் வரத்திலும் பலத்திலும் பாதியைப் பெற்றுக்கொள்ளும் வரபலம் படைத்தவன் என்றும், இராவணனைத் தனது வாலிலே கட்டி வலியழித்தவன் என்றும் பலவாறாக வாலியின் சிறப்புக்களைக் கம்பன் காட்டுகிறான்.

கம்பன் தனது இராமாயணத்தில் கவிக் கூற்றாகவும் பாத்திரங்களின் கூற்றாகவும் வாலி, சுக்கிரீவன், அனுமான், தாரை போன்றவர்களைக் குரங்குகள் என்றும் வானரர்கள் என்றும் இருவிதமாக அழைக்கிறான்.

இராமன் வாலியைக் குரங்கல்ல என்று நிருபிக்க முயல்வதும் வாலி தங்களைக் குரங்குகள் என்று நிருபிக்க முயல்வதும் இராமனே வாலியை விலங்கு என்றும் விலங்கல்ல என்றும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு சொல்லிக்கொள்வதும் வாலி வதைச் சிக்கல்களுக்கு அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன.

கம்பராமாயணத்தை ஆழமாக, நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால் இவர்கள் குரங்குகள் அல்லர் என்பது தெளிவாகப் புரியும். இவர்கள் உண்மையில் வாலுள்ள மனிதர்களே.

நரர் என்றால் மனிதர் என்று பொருள். வாலுள்ள நரர் வானரர் என அழைக்கப்பட்டனர் என எண்ணத் தோன்றுகிறது.

சகல வகையிலும் மனிதரைப் போன்ற உடலமைப்பைக் கொண்டு, வாலை மட்டும் மேலதிகமான உறுப்பாகக் கொண்டவர்களாக இவர்களைக் கருதிக் கொள்ளலாம் என்பதற்குப் போதிய சான்றுகள் பல கம்பராமாயணத்தில் உண்டு.

வாலியை வாலுள்ள மனிதனாக, உயர்திணையிலே வைத்துப் பார்க்கும்பொழுது மட்டுமேதான் குற்றவாளியாக, கொல்லப்பட வேண்டியவனாக இராமனாலே வாதாடமுடியும்.

வாலியைக் குரங்காக, விலங்காகக் கருதினால் அவன் குற்றவாளியாகவே மாட்டான் என்பது இராமனுக்கும் தெரிந்திருந்தது.

வாலி,சுக்கிரீவன் முதலானவர்களைக் குரங்குகளாகவேதான் ஆதிகவி வான்மீகி காட்டிச் செல்கிறார். தன்னை மறைந்திருந்து அம்பெய்தது தவறு என்று சொல்லும் வாலிக்கு விலங்குகளை மறைந்திருந்து கொல்லுதல் வேந்தர்க்கு மரபு என்று இராமனைச் சொல்ல வைத்து, இராமனின் செய்கையை நியாயப்படுத்துகின்றார் வான்மீகி. கம்பனோ இதற்கு மாறாக இராமாயணத்தை நடத்திச் செல்கிறான்.

## வாலி, சுக்கிரீவன், அனுமான்

வாலி, சுக்கிரீவன் ஆகிய இருவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். "இங்கு வருபவர் யாவரும் பெண் வடிவமடைக" எனச் சாபமிடப்பட்டிருந்த இடத்துக்குச் சென்ற ருக்ஷரஜஸ் என்னும் வானரராஜன் பெண்ணாக மாற, அதாவது வானரப் பெண்ணகாக மாற, அவ்வானர வனிதையின் வாலின் அழகைக் கண்டு காமுற்ற தேவேந்திரன் மூலமாக வாலியும் கழுத்தினழகைக் கண்டு காமுற்ற சூரியன் மூலமாகச் சுக்கிரீவனும் பிறந்தார்கள் என்று வான்மீகி இவர்களது பிறப்புப் பற்றிக் கூறுகிறார்.

எனவே வாலி, சுக்கிரீவர்கள் வானரப் பெண்ணுக்குத் தேவர்கள் மூலமாகப் பிறந்த பிள்ளைகளாவர். வாலியோ தங்கள் தாயை வானரம் என்று கூறலாம். குரங்கு என்று கூறி, தாங்கள் குரங்குகள் என்பதால் தனது செய்கையில் குற்றமில்லை என்று வாதிடுகிறான். இராமனும் உங்கள் தாய் குரங்காக இருந்தாலும் நீங்கள் தேவர்களுக்குப் பிள்ளைகளாகப் பிறந்தீர்கள். அதுமட்டுமன்றித் தெளிவாக நல்லற நெறியைக் கற்றிருக்கிறீர்கள். அதனால் நீங்கள் விலங்குகளில்லை (குரங்களில்லை) என்று வாதிடுகிறான்.

**நலங்கொள் தேவரில் தோன்றி நவையறக்**
**கலங்காது அற நன்னெறி காண்டலின்**
**விலங்கு அலாமை விளங்கியது.............**

(கிட். வாலி-107)

கம்பனும் இராமனும் வாலியை உருவத்தில் விலங்கு என்றும் அவன் பேரறிவு படைத்திருந்ததால் அவ்விலங்குத் தன்மை அகன்றுவிட்டது என்றும்

திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். விலங்குகளுக்குள்ளும் உயர்திணை உண்டு. மனிதர்களுக்குள்ளும் அஃறிணை உண்டு என்றெல்லாம் திணைப்பாகுபாட்டையும் காட்டுகிறார்கள்.

வாலி, சுக்கிரீவன் முதலியோரை அரிக்குலம் என்றும் குரங்கு இனம் என்றும் கவிக்குலம் என்றும் மாறிமாறிச் சொல்கிறார்களேயன்றி வானரம் எனச் சொல்வதைத் தவிர்க்கிறார்கள்.

அனுமான், கேசரி என்னும் வானரராஜனது மனைவியான அஞ்சனா தேவிக்கு வாயு பகவானின் அனுக்கிரகத்தால் பிறந்தவன் "நான் காற்றின் வேந்தற்கு அஞ்சனை வயிற்றில் வந்தேன். நாமமும் அனுமன்" என்று அனுமான் தன்னை இராமனுக்கு அறிமுகப்படுத்துகிறான்.

இராமனோடு அனுமான் உரையாடிய முதற் சந்திப்பிலேயே அனுமானின் சொல்லாற்றலை இராமன் புகழ்கின்றான். "சொல்லின் செல்வன்" என்று பட்டமும் வழங்குகின்றான்.

அனுமானின் கல்விச் சிறப்பைப் புகழ்ந்து இவன் கல்லாத கலையும் வேதமும் எந்த உலகத்திலுமில்லை. இவன் பிரம்மதேவனோ அன்றிச் சிவபெருமான் தானோ? இவனது அறிவாற்றல் இவனது சொல்லாலே வெளிப்படுகின்றதே என்று இராமன் இலக்குவனுக்குச் சொல்கின்றான்.

**இல்லாத உலகத் தெங்கும் ஈங்கிவன் இசைகள் கூரக்**
**கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி**
**சொல்லாலே தோன்றிற் றன்றே யார்கொல்இச் சொல்லின் செல்வன்**
**வில்லார்தோள் இளைய வீர விரிஞ்சனோ விடைவல் லானோ.**

(கிட்-அனு-20)

இதுமட்டுமன்றி, பிரமச்சாரி வடிவத்தோடு வந்து தன்னோடு உரையாடிய அனுமானின் அறிவாற்றலை இராமன் புகழ்ந்து, "இவ்வுலகத்திலுள்ள முனிவர்கள், மேலுலகத்திலுள்ள தேவர்கள் ஆகியோரில், இவனுக்கொப்பான சொல்லாற்றல் படைத்தவர் யார் இருக்கிறார்கள். வேதங்களின் கூட்டமெல்லாவற்றையும் முழுவதுமறிந்த இப்பிரமச்சாரியின் சொல்லுக்கு எதிரில் திரிமூர்த்திகளுக்கும் வல்லமை அரிது" என்று இலக்குவனுக்குச் சொல்கிறான்.

**மற்றுமிவ் வுலகத் துள்ள முனிவர் வானவர்கள் ஆர்இச்**
**சொற்றிறம் உடையார் மற்றுச் சுருதியின் தொகுதி யாவும்**
**முற்றறி தரும்இம் மாணி மொழிக்கெதிர் முதல் வராய**
**பெற்றியர் மூவர்க் கேயும் பேராற்றல் அரிது மன்னோ.**

(கிட். அனு-22)

வாலியும் இராமனோடு வாதிடும் போது பேரறிஞன் போலவே வாதிடுகிறான். இராமனின் வரலாற்றைத் தெரிந்துவைத்திருந்த வாலி இராமனைத் தெய்வமாகக் கருதித் தன் மனைவியான தாரைக்கு இராமனின் புகழை எடுத்துச் சொல்கிறான். மனுதர்ம சாத்திரம் பற்றியும் யுத்ததர்மம் பற்றியும் அரசியல் நெறிபற்றியும் மனித ஒழுக்கம், விலங்கொழுக்கம் என்பவற்றின் வேறுபாடுகள் பற்றியும் கற்பொழுக்கம் பற்றியும் எல்லாம் மிகச்சிறப்பாக எடுத்துச் சொல்லி இராமனோடு வாதிக்கிறான்.

ஆன்மீக அறிவும் உணர்வும் மிக்கவனாகவும் சிறந்த சிவபக்தனாகவும் அன்புமிக்க கணவனாகவும் பாசம் மிகுந்த தந்தையாகவும் அவன் விளங்குகின்றான். "நிரம்பினான் ஒருவன் காத்த நிறையரசு" என வாலியின் அறிவையும் அவனது ஆட்சிச் சிறப்பையும் இராமனே புகழ்கிறான். இத்தோடு "நல்லது தீயது என்ற வேறுபாடு தெரியாத நல்லறிவு இல்லாது வாழ்வதுதான் விலங்கின் இயல்பு. நிலைபெற்ற சன்மார்க்கங்களுள் நீ அறியாத நெறியும் உண்டோ. உன் வாய்ச் சொற்கள் உன்னை யாவும் அறிந்தவனாகக் காட்டிவிட்டனவே" என்று இராமன் வாலியைப் புகழ்கின்றான்.

**நன்று தீதென்று இயல்தெரி நல்லறிவு**
**இன்றி வாழ்வ தன்றோ விலங்கின் இயல்**
**நின்ற சின்னெறி நீயறியா நெறி**
**ஒன்றும் இன்னம் உன் வாய்மை உணர்த்துமால்**

(கிட். அனு-111)

வாலிக்கு மனைவி, மகன் என மகிழ்ச்சிகரமான பாசப்பிணைப்புமிக்க குடும்பமும் வாய்த்திருந்தது. சுக்கிரீவனுக்கும் இவனைப் போலவே உருமை என்ற பெண்ணோடு குடும்ப வாழ்க்கை அமைந்திருந்தது. விருந்தோம்பற் பண்பும் அவர்களிடையயே இருந்திருக்கிறது.

இராம இலக்குவரை அழைத்து வந்து விருந்து வைக்கிறான் சுக்கிரீவன். அவ்விருந்தைச் சுக்கிரீவனின் மனைவி பரிமாறாததைக் கண்ட இராமன் "நீயும் என்னைப் போல் மனைவியைப் பிரிந்தாயோ" என்று கேட்கிறான்.

**பொருந்து நன்மனைக்கு உரிய பூவையைப்**
**பிரிந்துளாய் கொலோ நீயும்.....**

(கிட். நட்-32)

இல்லற தர்மம் வானரர்கள் வீட்டிலும் இருந்ததையே இது காட்டுகிறது. வாலியின் மனைவியான தாரை என்பவளைக் கம்பன் காட்டும் விதம், அவளை ஒரு குரங்குப் பெண்ணாக - மந்திக் குரங்காக நினைத்துப் பார்க்கவே முடியாதபடி அமைந்திருக்கின்றது.

சுக்கிரீவன் இராமரின் ஆலோசனைப்படி வாலியை அறைகூவிப் போருக்கு அழைக்கிறான். மதம்பிடித்த யானையின் பிளிறல் ஒலியைச் சிங்கம் கேட்டு மகிழ்ச்சியும் கோபமும் அடைகின்ற நிலையில் வாலி கேட்டு "வந்தேன் வந்தேன்" என்று சத்தமிட்டுக் கத்தியபடி புறப்படுகிறான்.

அப்பொழுது அவனது மனைவியான தாரை என்பவள் அவனைத் தடுக்கிறாள். கம்ப இராமாயணத்தில் கம்பன் தாரையை அறிமுகப்படுத்தும் இடமே இதுதான். கம்பன் அக்காட்சியில்,

**ஆயிடைத் தாரைஎன்று அமிழ்தில் தோன்றிய**
**வேயிடைத் தோளினாள் இடை விலக்கினாள்**
**வாயிடைப் புகைவர வாலி கண்வரும்**
**தீயிடைத் தன்நெடுங் கூந்தல் தீகின்றாள்.**

(கிட். வாலி - 13)

என்று அவளை அறிமுகஞ் செய்கின்றான். தாரையைத் தேவாமிர்தம் போலக் காணப்படுபவள் என்றும் மூங்கிலைப் போன்ற தோள்களைக் கொண்டவள் என்றும் சொல்லி, வாலியின் கண்களிலிருந்து வரும் கோபாக்கினியில் தனது நீண்ட கூந்தல் எரிந்து போகின்றவளாக வர்ணிக்கின்றான்.

தாரையின் கூந்தலை தாழ்குழல், வார்குழல், கனகுழல், விரைக்குழல், புரிகுழல், நெடுங்கூந்தல் என்று சொல்வதோடு அவளது கண்களை வேல்விழி என்றும் கழுத்தைப் பூகக் கழுத்து அதாவது, கழுகு போன்ற கழுத்து என்றும் தோள்களை மூங்கிலைப் போன்ற தோள்கள் என்றும் இடையை நுண்ணிடை என்றும் வர்ணிப்பது தாரையை மானிடப் பெண்ணாகவே கற்போரைக் காணச்செய்கின்றது. இச்சொற்கள் ஆகுபெயராக அன்றி நேரடி வர்ணனைகளாக வந்திருக்கின்றன.

அவர்கள் காலிலே நூபுரம் என்னும் அணிகலனை அணிந்திருந்தாள், இடையிலே மேகலை என்னும் அணிகலனை அணிந்திருந்தாள் என்றும் கம்பன் காட்டுகின்றான்.

அத்தோடு அவளது குரலைக் குயில் போன்றது என்னும் பொருளிளில் "குயில் மொழி" என்றும் சொல்வதோடு "இசையிலும் இனிய சொல்லாள்" என்றும், புல்லாங்குழல், யாழ், நல்ல வீணை என்பவற்றின் ஓசையைவிடச் சிறந்த இனிமையான ஓசையோடு வாலியின் இறப்புக்கு இரங்கி அழுதாள் என்றும் கம்பன் காட்டுவது கவனிக்கத் தக்கது. இவையொல்லாம் ஒரு மந்திக் குரங்குக்குரிய இலட்சணங்களாகத் தெரியவில்லை.

பாத்திரங்களின் வாயிலாகப் பார்க்கும் போது வாலி தன் மனைவி தாரையை "மலைக்குல மயில்" என்றும் "மயிலியற் குயின்மொழி" என்றும் அழைப்பதைக் காணலாம். பெண்களை மயிலுக்கு உவமிப்பது மயிலின் தோகை போன்ற நீண்ட கூந்தலைக் கொண்டிருப்பதனாலேயே ஆகும்.

தாரை மங்கல அணி அணிந்திருந்தாள் என்பதை வாலி இறந்தபின்பு மங்கல அணியை நீக்கி, மற்றும் சுமங்கலிக்குரிய ஆடை ஆபரணங்களை விலக்கி, மலர்சூடுதல் முதலாகத் தன்னை அலங்கரிப்பதைத் தவிர்த்திருந்தாள் என்பதையும் கம்பராமாயணத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது.

கார்காலம் முடிந்ததும் சீதையைத் தேடுவதற்காக வந்து சந்திப்பதாகக் கூறிய சுக்கிரீவன் வராது அரசபோகத்தில் ஆழ்ந்திருந்தபோது, கோபங்கொண்ட இராமன் இலக்குவனைக் கிஷ்கிந்தைக்கு அனுப்புகிறான்.

கோபாவேசத்தோடு வரும் இலக்குவனைச் சாந்தப்படுத்தத் தாரை, வானரப் பெண்களை அழைத்துச் சென்று வழிமறிக்கிறாள். அவர்கள் எல்லோரையும் மானிடப் பெண்களாகக் கண்டு இலக்குவன் தொடர்ந்து செல்ல நாணமுற்றுக் குனிந்து நிற்கிறான். அவர்களிலே தாரையின் தோற்றம் பற்றிக் கம்பன் பின்வருமாறு கூறுகிறான்.

மங்கல அணியை நீக்கி மணியணி துறந்து, வாசக்
கொங்கலர் கோதை மாற்றிக், குங்குமம் சாந்தங் கொட்டாப்
பொங்குவெம் முலைகள் பூகக் கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல் நயனங்கள் பனிப்ப நைந்தான்.

(கிட். கிட் - 52)

மங்கல அணி, மற்றும் இரத்தினாபரணங்கள் அணியாது, வாசனை வீசுகின்ற பூமாலையைக் கூந்தலிலே சூடாது, குங்குமம் சந்தனம் என்பவை அணியப்படாத மார்பகங்களைக் கமுகு போன்ற கழுத்தோடும் நன்றாகப் போர்த்திய முந்தானையோடு நின்ற தாரையைக் கண்ட இலக்குவன் கண்களில் நீர்த்துளிகள் தோன்றக் கவலைப்பட்டு நின்றான் என்கிறான் கம்பன்.

தாரையைப் பார்க்கும் போது இலக்குவனுக்குத் தனது தாயரின் நினைப்பு வந்ததாம். தனது தந்தை தசரதன் இறந்த பின்பு தனது தாயாகிய சுமித்திரையும் பெரிய தாயாகிய கோசலையும் இருக்கின்ற அமங்கலித் தோற்றமாகிய விதவைத் தோற்றம் போல இருந்தது அவனுக்கு.

இனையராம் என்னை ஈன்ற
இருவரும் என்ன வந்த
நினைவினால் அயர்ப்புச் சென்ற
நெஞ்சினன் நெடிது நின்றான்

(கிட். கிட்-53)

என்கிறான் கம்பன் கைகேயிமேல் இலக்குவன் கொண்ட கோபத்தினால் இருவரை மட்டுமே நினைத்துக் கவலை கொள்கிறான். எனவே, தாரையின் கோலம் மானுடப் பெண்களின் விதவைக் கோலம் போலவே தான் இருந்திருக்கிறது.

அதற்கு முன்பாக தாரையை இலக்குவன் நிமிர்ந்து பார்ப்பதற்கு முன்பாக, தன்னை வழிமறித்த வானரப்பெண்களை முழுக்க முழுக்க அழகிய மானுடப் பெண்களாகவே நினைத்து, நிமிர்ந்து பார்க்கவும் நாணம் கொண்டு தலைகுனிந்து நின்றான் என்பதைக் கம்பன் பின்வரும் பாடலடிகள் மூலம் காட்டுகின்றான்.

தாமரை வதனம் சாய்த்துத்
தனுநெடுந் தரையில் ஊன்றி
மாமியர் குழுவில் வந்தா
னாமென மைந்தன் நிற்ப ..........

(கிட். கிட் - 48)

அதாவது தாமரை போன்ற தனது முகத்தைச் சரித்துக் குனிந்தபடி வில்லைத் தரையில் ஊன்றிக் கொண்டு, மாமியர் கூட்டத்திற்குள்ளே வந்த ஒரு உத்தமமான ஆண்மகன் என்று சொல்லக் கூடிய வகையில் நாணிக் கோணி நின்றான் என்கிறான் கம்பன்.

குரங்குப் பெண்களை அதாவது மந்திக் குரங்குகளைக் கண்டு யாராவது நாணமடைவார்களா? எனவே இலக்குவனுக்குத் தாரையையும் ஏனைய வானரப் பெண்களையும் பார்க்கும் போது மானிடப் பெண்களைப் போன்ற காட்சியே தென்படுகிறது என்பதற்கு இதுவே போதிய சான்றாகும்.

இவ்விதமாக வானரக் கூட்டத்தார் மனிதர்களைப் போன்ற தோற்றங் கொண்டவர்களாகவும் ஆடை ஆபரணங்களை அணிபவர்களாகவும் மனிதப்பண்பாடு பொருந்தியவர்களாகவும் இல்லற வாழ்வு நடாத்தியவர்களாகவும் நல்லறிவும் புத்திக் கூர்மையும் பெற்றிருந்ததாகவும் காட்டப்பட்ட அதேவேளை அவர்களைக் குரங்குகளாகவும் கம்பன் காட்டுகிறான்.

## குரங்குகளாக

வாலி பல இடங்களில் தம்மைக் குரங்கு என்று கூறுவதாகவே கம்பன் காட்டுகின்றான். வாலி இராமனோடு வாதிடும் போது,

**அரக்கர்ஓர் அழிவு செய்து கழிவரேல் அதற்கு வேறோர்**
**குரங்கினத்து அரசைக் கொல்ல மனுநெறி கூறிற் றுண்டோ.**

(கிட். வாலி - 79)

என்று தொடங்குகின்றான். "அரக்கனான இராவணன் செய்த அநியாயத்திற்குக் குரங்கினத்து அரசனைக் கொல்லும்படியா மனுதர்ம சாத்திரம் கூறுகிறது?" என்று இராமனைக் கேட்கிறான் வாலி. அதுமட்டுமில்லாமல் இராமன் சுக்கிரீவனுக்குத் துணையாக வந்திருக்கிறான் என்று தாரை வாலிக்கு அறிவுரை கூற, இராமன் "புன்தொழிற் குரங்கொடும் புணரும் நட்பனோ" என்று சுக்கிரீவன் முதலானோரை அற்ப காரியஞ் செய்யும் குரங்குகள் என்றே சொல்கிறான் வாலி.

இதேபோலத் தன்மார்பைத் துளைத்தது இராமபாணம் என்பதை அறிந்து கொண்ட பின்பு, "இராமன் நெறிதவறிவிட்டான். இராமனே நெறிதவறி மறைந்து நின்று, தன்னோடு போர்செய்யாத, நிராயுதனாகிய எனக்கு அம்பெய்ததற்கு என்ன காரணம் இருக்க முடியும். இது கலிகாலத்தில் தான் நடக்கக் கூடிய அநியாயம்.

கடவுளே தவறு செய்தால் அதற்குக் காலப்பிழையே அன்றி வேறென்ன பிழைசொல்ல முடியும் என்று நினைத்து, அந்தக் கலிகாலம் ஊர்ந்து திரிகின்ற குரங்குகளாகிய எம்மிடத்தில்தான் தோன்றிப் பரந்து விட்டதோ" என்று நினைக்கின்றான் வாலி.

**ஓலிகடல் உலகம் தன்னில் ஊர்தரு குரங்கின் மாடே**
**கலியது காலம் வந்து பரந்ததோ...............................**

(கிட். வாலி- 80)

இராமனின் அறிவுரையால் நல்லறிவு வரப் பெற்ற பின்பும் வாலி "யாவதும் எண்ணல் தேற்றாக் குரங்கெனக் கருதி......." என்றும் "தொல்லைச் சிற்றினக் குரங்கினோடும்....." என்றும் பலவாறாகத் தம்மைக் குரங்காகவே குறிப்பிடுகின்றான்.

"மற்றிலன் எனினும் மாய அரக்கனை வாலிபற்றிக் கொற்றவ நின்கட் டந்து குரக்கியற் றொழிலும் காட்டப் பெற்றிலன்" என்று இராமனிடமும், "மதவியல் குரக்குச் செய்கை மயர்வொடும் மாற்றி வள்ளல் உதவியை

உன்னி .....'' எனச் சுக்கிரீவனுக்கு அறிவுரை கூறும்போதும் வாலி தம்மைக் குரங்காகவே கூறுகிறான்.

இவை மட்டுமல்லாமல் "தம்பியின் மனைவியை நீ தாரமாக்கிக் கொண்டாய் இது நியாயமா'' என்று இராமன் வாலிமேல் குற்றம் சாட்ட வாலி, "எமக்கு மறைநெறிவந்த திருமணம் இல்லை" என்று கூறுகிறான். விரும்பியபடி வாழ்வதே தங்கள் பிறப்பொழுக்கம் என்கிறான்.

"உங்கள் மனிதகுலப் பெண்களைப் போன்று எங்கள் பெண்களுக்குக் கற்பொழுக்கம் இல்லை என்றும் எங்கள் குரங்கினத்தில் ஆண்களைப் போன்றே பெண்களும் கிடைத்தால் கிடைத்தபடி அனுபவித்து வாழும் படியே பிரம்மதேவன் படைத்துள்ளான். அதுவே குலஒழுக்கம்'' என்றும் கூறுகிறான். "உணர்வு சென்ற வழிச்செல்லும் விலங்கொழுக்கமே எம் ஒழுக்கம்'' என்று வாதிடுகிறான்.

இவையெல்லாம் கம்பன் வாலிமூலம் வானரர்களைக் குரங்குகளாகக் காட்டுகின்ற முயற்சி என்றே காணக்கூடியதாக இருக்கின்றது.

இதுமட்டுமன்றி இன்னொன்றையும் பார்ப்போம். சீதையைத் தேடிப் பெறுவதற்குத் துணையாக அமையக் கூடியவன் சுக்கிரீவனே எனச் சபரியும் கவந்தனும் இராமனுக்குக் கூறும் போது சுக்கிரீவனின் மனைவியை வாலி கவர்ந்து வைத்திருக்கும் செய்தியைச் சொல்லவே இல்லை.

அனுமான் இராம இலக்குவரை முதன் முதற்கண்டு சுக்கிரீவனைப் பற்றிச் சொல்லும் போதும் வாலி சுக்கிரீவனை அடித்துத் துன்புறுத்திக் கொல்ல முயன்றான் என்றும் தப்பியோடிய சுக்கிரீவன் இரலையங்குன்றில் வந்து மறைந்திருக்கின்றான் என்றும் மதங்க முனிவரின் சாபத்தினால் அம்மலைக்கு வாலி வரமுடியாததால் உயிர்வாழ்கிறான் என்றும் கூறுகிறான்.

சுக்கிரீவனிடம் விருந்துண்ட இராமன் "நீயும் மனைவியைப் பிரிந்தாயோ'' என்று கவர்மன் கேட்டபின்தான் அனுமான், வாலி சுக்கிரீவனின் மனைவியைக் கவர்ந்து வைத்திருப்பதைக் கூறுகிறான்.

எனவே மனைவியைக் கவர்ந்து சென்ற விடயம் அவர்களுக்கு ஒரு பெரிய விடயமாக இல்லாதிருப்பது அவர்களது குரங்கு ஒழுக்கத்தையே காட்டுகின்றது.

இராமனைத் தம் பிரச்சினையோடு உணர்வு பூர்வமாக ஒன்றச் செய்வதற்காகவே தான் சுக்கிரீவனின் மனைவியை வாலி வலிந்து கவர்ந்து தன் மனைவியாக்கிக் கொண்டான் என்று சொல்லப்படுகின்றது எனக் கொள்ளலாம்.

இவ்வானரர்களின் போர்முறை அற்பக் குரங்குகளின் சண்டையாகவே காட்டப்படுகின்றது. நகங்களால் கிழிபடுதல், பற்களால் கடிபடுதல், வாலினால் ஒருவரை ஒருவர் வரிந்து கட்டி இழுபடுதல், பெரிய கல்மலைகளைப் பெயர்த்து ஒருவர் மேல் ஒருவர் வீசி எறிபடுதல், மரங்களைப் பிடுங்கி அடிபடுதல் என இவர்களின் யுத்தமுறை காட்டப்படுகின்றது.

மனிதர்களைப் போல ஆயுதம் எடுத்துப் போர் புரிந்ததாக இராமாயணத்தில் எங்குமே காட்டப்படவில்லை. இராவணனை அனுமான் குத்துச் சண்டைக்கு அழைத்ததாகத்தான் யுத்தகாண்டம் கூறுகிறது. இந்த வகையில் வானரர்களைக் குரங்குகளாகக் காட்டுகிறான் கம்பன்.

வாலி இராமனோடு வாதிடும் போது தாம் குரங்குகள் என்றே வாதிடுகிறான். ஆனால், இராமனோ அவனைப்பார்த்து நீங்கள் தோற்றத்தில் குரங்குகளாக இருந்தாலும் குரங்குகளில்லை என்று சொல்லி, மானுட ஒழுக்கப்படி பார்த்தே வாலிமேற் குற்றம் சாட்டுகின்றான். உயர்திணை அஃறிணைப் பாகுபாடு உருவத்தைப் பொறுத்ததல்ல என்றும் சீதையைக் காக்கத் தன் உயிர் கொடுத்த சடாயுவும் முதலையிடமிருந்து தன்னைக் காப்பாற்றும்படி மகாவிஷ்ணு மூர்த்தியைக் கூறி அழைத்த யானையும் (கஜேந்திரன்) அஃறிணையல்ல என்றும் ஆதாரங்காட்டி வாலியை உயர்திணையாக நிறுவுகிறார்.

ஆனால் சுக்கிரீவனோடு போர் செய்யவந்த வாலியை இலக்குவனுக்குக் காட்டி, அவனது தோற்றத்தை இராமன் புகழ்ந்தபோது, வாலியை மறைந்து நின்று அம்பெய்து இராமன் கொல்வதில் உடன்பாடில்லாத இலக்குவன் சுக்கிரீவன் நம்பத்தகாதவன். அண்ணனையே கொல்ல முனைபவன் என்று கூற இராமன் அவனுக்குப் பதில் கூறும் போது ''இப்பித்தாய விலங்கின் ஒழுக்கினைப் பேசலாமோ'' எனச் சுக்கிரீவனைப் பித்துப் பிடித்த விலங்கு என்றே குறிப்பிடுகிறான்.

ஆனால் அதே வேளை கிஷ்கிந்தையை நகரமாகவும் தாய்க்குக் கொடுத்த வாக்குப்படி தான் அங்கு வரமுடியாதென்றும் இராமன் சொல்லி, இலக்குவன் மூலமாகவே தான் சுக்கிரீவனுக்கு முடிசூட்டுகிறான் இராமன், முடிசூட்டு விழா ஒரு சத்திரிய அரசனது முடிசூட்டு விழாபோன்றே நடைபெறுகிறது.

கிஷ்கிந்தை நகரைப் பற்றி இராமன் குறிப்பிடுகையில் அது சுவர்க்க லோகத்திலும் சிறந்ததாக, சுவர்க்க அரசு என்று சொல்லும்படியாக இருக்கின்றது என்றும் அங்கேயுள்ள குறை என்ன வென்றால் குரங்குகள் வசிக்கின்ற இடமாகும் என்பது மட்டுமே தான் என்கின்றான்.

**குரங்குறை இருக்கை என்னும் குற்றமே குறறம் அல்லால்**
**அரங்குறு துறக்க நாட்டுக்கு அரசுஎனல் ஆகு மன்றே**

(கிட். அர-17)

## தாரையும் மகளிரும்

இலக்குவனை வழிமறித்த தாரையோடு கூட இருந்த குரங்குப் பெண்களைக் கம்பன் வர்ணிக்கும் விதம் அவர்களைக் குரங்குப் பெண்களாக எண்ணிப் பார்க்கவே முடியாதிருக்கிறது. கம்பன் அவர்களைப் பின்வருமாறு வர்ணிக்கிறான்.

அயில்விழிக் குமுதச் செவ்வாய்ச்
சிலைநுதல் அன்னைப் போக்கின்
மயிலியற் கொடித்தேர் அல்குன்
மணிநகைத் திணிவேய் மென்றோள்
குயின்மொழிக் கலசக் கொங்கை
மின்னிடை குமிழேர் மூக்கின்
புயலியற் கூந்தன் மாதர்
குழாத்தொடுந் தாரை போனாள்

(கிட். கிட் -77)

வேல் போன்ற கண்கள், செவ்வாம்பல் மலர்போன்ற சிவந்த வாய், வில்போன்ற புருவம், அன்னம் போன்ற நடை, மயிலைப்போன்ற சாயல், கொடியையுடைய தேர் போன்ற அல்குல், முத்துப் போன்ற பற்கள், வலிய மூங்கில் போன்ற மெல்லிய தோள்கள், குயிலின் குரலையொத்த குரல் பொற்கலசத்தோடொத்த தனங்கள், மின்னல் போன்ற இடை, குமிழமலர் போன்ற மூக்கு, மழைமேகத்தைப் போன்ற கூந்தல் பொருந்திய பெண்கள் தாரையோடு இருந்தார்கள் என்கிறான் கம்பன். இவையெல்லாம் குரங்குகளுக்குரிய சாமுத்திரிகா இலட்சணங்களல்ல. அழகிய மானிடப் பெண்களுக்கே உரியவை என்பது புலனாகின்றது.

## அனுமான்

சீதையை இராவணன் எங்கே கொண்டுபோய் வைத்திருக்கிறான் என்பதை நாங்கள் இங்கிருந்தபடி எப்படி அறிந்து கொள்ளமுடியும். நாங்கள் தேவர்களில்லையே. தேவர்களாக இருந்தால் இருந்த இடத்தில் இருந்தபடி அறிவின் வன்மையால் எல்லா உலகங்களிலும் நடப்பதை அறிந்து கொள்ளலாம். ஆனால் நாங்கள் குறைபாடு பொருந்திய மனிதர்களாயிற்றே எப்படி அறிந்து கொள்வோம் என்று அனுமான் இராமனிடம் கூறுவதாக கம்பன் பின்வருமாறு பாடுகிறான்.

வானதோ மண்ணதோ மற்று வெற்பதோ
ஏனைமா நாகர்தம் இருக்கைப் பாலதோ
தேனுலாந் தெரியலாய் தெளிவ தன்றுநாம்
ஊனுடை மானிடம் ஆனது உண்மையால்

(கிட். கலன் - 29)

இங்கு அனுமான் தம்மை ஊனுடை மானிடம் என்று குறிப்பிடுவது பலருக்கு வியப்பை ஏற்படுத்த வல்லது. இத்தகைய குழப்பங்கள் வாலிவதைப் படலத்திலும் ஏனைய படலங்களிலும் காணப்படுகின்றன.

## வால் - நரர்கள்

உண்மையில் இவ்வானரர்களின் முகங்கள் கூடக் குரங்குகளின் முகங்களைப் போன்றவையல்ல. அனுமானின் முகம் மட்டுமே தான் மனித முகத்திற்குரிய இலட்சணங்களற்ற குரங்கு முகம் போல விளங்கியது.

உருத்திர அம்சமாகிய அனுமான் குழந்தைப் பருவத்திலே இளஞ்சூரியனைக் கனிந்த பழம் என்று பிடிக்கப் பாய்ந்த பொழுது, அதனை அறிந்து கோபித்த இந்திரன் தனது வச்சிராயுதத்தினால் முகத்திலே அடித்தான்.

இந்திரனின் வச்சிராயுதம் அடிபட்ட கன்னமும் பூமியிலே வந்து மோதுண்ட கன்னமுமாக் இருகன்னங்களும் சிதைந்துபோய் முக அழகிழந்தவனாக அனுமான் மாறினான். அனுமான் என்பது "கன்னம் சிதைந்து போனவன்" என்ற பொருளைக் கொண்ட வடமொழிச் சொல்லாகும். இந்திரனிடம் அடிவாங்கிய பழி தீர்க்கத்தான் இந்திரகுமாரனாகிய வாலியைக் கொல்ல சுக்கிரீவனோடு சேர்ந்து இராமனை இவன் தூண்டினானோ என எண்ணத் தோன்றுகின்றதல்லவா?

முகம் சிதைந்து போனதனாலேயே அழகிழந்து குரங்கின் முகத்தைப் போன்ற முகம் அனுமானுக்கு ஏற்பட்டது. அனுமான் இராமாயணத்தில் பெரும் புகழ் பெற்றதன் காரணமாகவும், அனுமான் வானரக் கூட்டத்தில் ஒருவன் என்பதனாலும் வானரர்களின் முகங்கள் எல்லாம் அனுமானின் முகத்தைப் போலவே இருக்கும் என்று கருதி வானரர்களைக் குரங்கு முகங் கொண்டவர்களாகக் கருதுகின்ற வழக்கம் ஏற்பட்டிருக்கலாம். இதனால் வானரர்கள் குரங்குகள் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். பிற்காலத்தில் குரங்களுக்கு வானரர்கள் என்ற பெயர் ஏற்பட்டு இரண்டும் ஒன்றே என்ற எண்ணத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

கம்பனின் இராமாயணப்படி இவ்வானரக் கூட்டத்தார் குரங்குகளா, மனிதர்களா என்பதைத் திடமாகச் சொல்ல முடியாத சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இக்குழப்பம் கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்குமே இருந்திருக்கிறது.

வானரர்கள் வாலுள்ள நரர்களே அதாவது வாலுள்ள மனிதர்களே, வாலை மட்டும் மேலதிக உறுப்பாகக் கொண்ட ஒரு மனித கூட்டமே வானரர். அப்படிப் பார்க்கும்போதுதான் வாலிவதையில் அர்த்தம் இருக்க முடியும் என்பது எனது அபிப்பிராயம்.

## நகையினால் விளைந்த காவியங்கள்

நகைதான் பல பெருங் காவியங்களுக்கெல்லாம் காரணமாய் இருந்திருக்கின்றது. மஹாகவி காளிதாசரின் சாகுந்தலம் என்ற காவியம் துஷ்யந்தன் என்ற மன்னன் காட்டிலே கண்டு காதலித்து, மணந்து விட்டுப் பிரியும்போது கொடுத்துச்சென்ற 'கணையாழி'யை சகுந்தலை தொலைத்ததால் ஏற்பட்டது.

காற் 'சிலம்பை' விற்கச் சென்ற கோவலனை காவலர்கள் பிடித்து, கள்வனென்று வெட்டியதால் கண்ணகியின் கற்புக் கனல் மதுரை மூதூரைக் கரித்தது. அதனால் சிலப்பதிகாரம் தோன்றியது.

இராசசூய யாகத்திற்கு வந்த துரியோதனன் பளிங்கை நீரென்றும் நீரைப்பளிங்கென்றும் எண்ணி ஏமாற அதனைப் பார்த்துத் திரௌபதி நகைத்ததால் பாரதயுத்தம் ஏற்பட்டது.

இதிகாசங்களில் மற்றொன்றான இராமாயணம் நடைபெற்றதற்குக் காரணமும் நகைதான். இது என்ன நகை தெரியுமா? சூர்ப்பனகை காட்டிலே இராமனைக் கண்டு மோகித்து மூக்கறுந்ததால் தான் இராமாயண யுத்தம் ஏற்பட்டது. காவியமும் கிடைத்தது.



# தமிழிலக்கியத்தில் பெண்களின் இழிதகைமைகள்

*கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்.*

பெண்கள் பற்றிய ஆய்வுகள் இன்று வையகமெங்கும் பரவலாக நடைபெற்று வருகின்றன. எமது தமிழ் இலக்கியங்களும் பெண்கள் பற்றிய செய்திகளை விரிவாகவே பாடல்களிற் கூறுகின்றன. அச்செய்திகள் பற்றிய மதிப்பீடுகளும், கணிப்பீடுகளும் இன்று பிறமொழியாளர்களாலும் செய்யப்படுகின்றன. தமிழ்ப் பெண்களின் மரபான வாழ்க்கையைப் பற்றிய செய்திகளைத் தமிழ் இலக்கியங்களே தெளிவாகத் தருகின்றன என அவர்கள் எண்ணுகின்றனர். ஆனால், பெண்களைப் பற்றிய தமிழ் இலக்கியங்களின் செய்திகளைச் சற்று ஆழமாக ஆராய்ந்து பார்க்கும்போது நமது சமூக மரபு எவ்வாறு பெண்களைப் பெரிதும் இழிதகைமைக்கு ஆளாக்கியது என்பதும் தெளிவாகிறது. எனவே பெண்களின் நிலையை நாம் ஆழமாக எண்ணிப் பார்க்கின்ற காலகட்டத்தில் அச்செய்திகளை மற்றவர் அறியவைக்கவும் வேண்டியுள்ளது.

## இலக்கியத்தில் ஆணும் பெண்ணும்

தமிழ்ப் பெண்களின் தொடக்ககால வாழ்வு நிலைக்கும் இன்றைய வாழ்வு நிலைக்கும் வேறுபாடு இருப்பது போலத் தோன்றிலும் உண்மையில் அடிப்படையான நடைமுறைகளில் வேறுபாடில்லை என்பதையும் இந்த இலக்கியச் செய்திகளே எமக்கு உணர்த்துகின்றன. கால அடிப்படையிலே தோன்றிய இலக்கியங்கள் பல. அவற்றிலே தனிச் செய்யுட்கள், தொடர்நிலைச் செய்யுட்கள், பதிகநிலைச் செய்யுட்கள், காப்பியச் செய்யுட்கள், சிற்றிலக்கிய வடிவச் செய்யுட்கள், நாட்டார் பாடல்கள், உரைநடை இலக்கியங்கள், புதுக்கவிதைகள் என பலவகையான இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இவற்றிலே பெண்களைப் பற்றிய செய்திகள், பெண்களின் தோற்றப்பாடு, குண இயல்புகள், தொடர்பு நிலைகள், சிறப்பு நிலைகள் என பல வகையாக விரித்துக் கூறப்பட்டுள்ளன. இலக்கியங்களிலே கூறப்பட்ட பெண்ணுக்குரிய இலக்கணம் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களிலும் வரையறை செய்யப்பட்ட இலக்கணங்களாக அமைந்தன. அவையே பிற்காலத்திலே மரபாகப் பேணப்பட்டன. எடுத்துக்காட்டாகத் தொல்காப்பியர் ஆணுக்கு வகுத்துக் கூறிய இலக்கணத்தையும், பெண்ணுக்கு வகுத்துக் கூறிய இலக்கணத்தையும் இங்கு நோக்குதல் தெளிவுதரும்.

"பெருமையும் உரனும் ஆடுஉ மேன"
(தொல்:1041)
"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப"
(தொல்:1042)

முதலாவது எடுத்துக்காட்டு ஆண்களுக்கு அறிவும் ஆற்றலும், புகழும், கொடையும், ஆராய்தலும், பண்பும், நண்பும், பழிபாவமஞ்சுதலும் முதலியனவாய் மேற்படும் பெருமையும் அவற்றிலே உறுதியாய் இருப்பதால் ஏற்படும் உரனும் சிறப்பான குணங்களாகும் என விளக்குகிறது. இரண்டாவது எடுத்துக்காட்டு அச்சம், நாணம், மடம் என்னும் மூன்று பண்புகளும் பெண்களுக்கு எப்போதும் உரிய குணங்களாகும் என்று விளக்குகிறது. தொல்காப்பியம் கூறுகின்ற இக்குண இயல்புகளே தற்காலம் வரையும் மரபாகப் பேணப்பட்டு வருகின்றன. தொல்காப்பியரது காலத்தில் ஆண், பெண்ணுக்குரிய சிறப்பியல்பு இவ்வாறு வேறுபடுத்தப்பட்டது. ஆண்கள் வெளிவாழ்க்கையோடு தொடர்பட்டவர்களாகவும் பெண்கள் வீட்டு வாழ்க்கையில் மட்டும் தொடர்புற்றவர்களாகவும் இருந்தனர். பெண்களை ஆண் கடல் கடந்து அழைத்துச் செல்லும் வழக்கமே இருக்கவில்லை. 'முந்நீர்வழக்கம் மகடுவோடில்லை' என்னும் தொல்காப்பிய சூத்திரம் இதற்குச் சான்று பகர்கின்றது. விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலுமே பெண்ணுக்குரிய மாண்புகளாக விளங்கின. இத்தகைய பெண்களைப் பற்றிய வரைவிலக்கணம் தொல்காப்பியரது காலத்திற்கு முன்னரும் இருந்துள்ளது போலத் தெரிகிறது.

## பெண்களின் பண்புகள்

தமிழ் இலக்கியங்களிலே காலத்தால் முற்பட்ட இலக்கியங்களாக இன்று எமக்குக் கிடைக்கின்ற சங்க இலக்கியப் பாடல்களிலும் பெண்களின் பண்புகள் வேறுபடப்பேசப்படுகின்றன. புறநானூற்றுப் பாடல் ஒன்று பெண்களின் வீரம் பற்றி வியந்துரைக்கும் வேளையில் 'கெடுக சிந்தை கடிதிவள் துணிவே' எனப்பெருமையாய்க் கூறுகிறது. ஆனால் பெண் குற்றமற்ற கற்புள்ளவளாகவும் இருந்ததால் மனைக்கு விளக்காகப் பெருமைப்படுத்தப்பட்ட செய்தியையும் கூறுகிறது. கணவனுடைய பண்புகூறுமிடத்து 'செயிர்தீர் கற்பின் சேயிழைகணவ', 'மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவ', என்று புறநானூறும், 'நறுநுதல் சேயிழைகணவ' 'புரையோள் கணவ' எனப் பதிற்றுப்பத்தும் கூறுகின்றன. இவ்வாறு பெருமைப்படுத்தப்பட்ட பெண்கள் மட்டுமன்றி இன்னோர் வகையான இழிநிலைப்படுத்தப்பட்ட பெண்களைப் பற்றியும் சங்க இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன. விலைமகள், குலமகள் எனப் பெண்கள் இருவகையாக வாழ்வு நடத்தியமை கூறப்படுகிறது. பரத்தையர் என்ற குழுநிலைப்பட்ட பெண்கள் பிறவழிகளிலே பொருளீட்ட முடியாதவர்களாக ஆண்களை மயக்கியே பொருளீட்டுகின்ற இழிதொழில் செய்பவர்களாகப் பேசப்பட்டுள்ளனர். பொருள் வளம் பெற்ற ஆடவனைப் பெறுவதில் பெண்களிடையே போட்டிநிலை இருந்ததாக நற்றிணைப் பாடல் (30) ஒன்று கூறுகிறது. தெருவிலே வருகின்ற ஆடவனைக் கண்ட பரத்தையர் ஒவ்வொரு பக்கமாக அவன் கைகளைப் பற்றி இழுத்தபடி நிற்கின்றனராம். அதனால் ஆண்மகனும் யாருடன் செல்வது என்று தெரியாமல் துன்பப்பட்டு நிற்கின்றானாம். இங்கு ஆடவர் முன்னால் பெண்கள் இழிதகைமை பெற்றவராக மதிக்கப்பட்டமை விளக்கம் பெறுகிறது.

திருமணம் செய்த ஆடவர் மீண்டும் பரத்தையை வீட்டிற்கு அழைத்துச் சென்று மணம் செய்கின்ற வழக்கமும் இருந்துள்ளது. ஐங்குறுநூற்றுப் பாடல் (292)ஒன்று குழந்தைப் பேறு வேண்டி ஆண் மறுமணம் செய்வதைக் கூறுகின்றது. ஆணின் இச் செய்கைக்கு அவனது முதல் மனைவி எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்க முடியாதவளாகவே இருந்துள்ளாள்.

பெண்ணுக்கு ஆண்தான் உயிராக விளங்கினான் எனக் குறுந்தொகைப் பாடல் அடிகள் விளக்கம் தருகின்றன.

**'வினையே ஆடவர்க்கு உயிர் வாள்நுதல்**
**மனைஉறை மகளிர்க்கு ஆடவர்உயிர்'** (குறு:135)

இது பெண் ஆணிலேயே தங்கியிருக்க வேண்டியவள் என்பதை வரையறை செய்வது போல அமைந்துள்ளது. பெண்ணுக்குத் தனித்தியங்கும் ஆற்றல் இல்லை. அப்படி இயங்கினால் அது உயிரற்ற உடல் இயங்குவது போலவே இருக்கும் என அக்காலத்துச் சமூகத்தவர் எண்ணியிருந்தனர். பரிபாடலில் வழிபாட்டு நடைமுறைகளினூடாகப் பெண்களின் பண்பு குறைத்துப் பேசப்படுகிறது. கன்னிப்பெண்களும், திருமணம் செய்த பெண்களும் முருகன் இருக்கின்ற குன்றத்திலே வழிபாடும் செய்கிறார்கள். முருகனது கொடியை ஏற்றி யானையின் கும்பத்தைக் குங்குமத்தால் அலங்கரித்துப் பூவும் நீரும் தெளிக்கின்றனர். சேவிக்க வரிகளைச் சார்த்திப் பவளக்காம்புடைய பொற்குடையை மேலே கவித்துக் கல்யாணமான மகளிரும் கன்னிப் பெண்களும் முருகனை வழிபடுவர். இவ்வழிபாட்டிலே யானையுண்ட கவளத்தின் மிகுதியை அவர்கள் விரும்பி உண்ண வேண்டும். அப்படி உண்ணாவிட்டால் மகளிர் தம்முடைய காதலருடைய சிறந்த அன்பைப் பெறமாட்டார்கள். கன்னிப்பெண்கள் குறைவற்ற மணமகனைப் பெறமாட்டார்கள் என்ற நம்பிக்கை அக்காலத்திலே வழக்கிலிருந்ததைப் பரிபாடல் ஆவணப்படுத்தியுள்ளது.

பெண்ணினுடைய பயன்பாடு பற்றிக் கலித்தொகைப் பாடல் ஒன்று விளக்கம் தருகின்றது. பெண் பிறந்த வீட்டிற்குப் பயன்தருபவள் அல்லள். அவள் ஆடவன் ஒருவனோடு இணைந்தால் பயன் உடையவளாவாள். சந்தனம் மலையிலே வளர்ந்தாலும் அது அந்த மலைக்குப் பயன்படுவதில்லை. தன்னை அரைத்துப் பூசிக் கொள்பவருக்கே பயன்படுகிறது. முத்து கடலிலே விளைந்தாலும் அது அந்தக் கடலுக்கு எவ்விதப் பயனையும் தருவதில்லை. தன்னை மாலையாக்கி அணிபவருக்கே பயன்தருகின்றது. இசையானது யாழிலிருந்து தோன்றினாலும் அந்த யாழுக்கு அதனால் எவ்வித பயனுமில்லை. அதனைக் கேட்பவர்க்கே பயன்தருகின்றது. இது போலத்தான் பெண்ணும் தான் தோன்றிய இடத்திலே பயன் தருபவள் அல்லள் என்ற கருத்துக் கூறப்பட்டுள்ளது. இயற்கைநிலையிலே சந்தனம், முத்து, யாழ் மூன்றும் தத்தம் நிலையிலே இயங்க வாய்ப்பற்றவை. ஆனால், பெண்ணோ அப்படிப்பட்டவள் அல்லள். அவளுக்கு இயற்கைநிலையிலே இயங்கும் ஆற்றல் உண்டு. ஆனால் பெண் வீடு என்ற நிலையிலே குறுகிய வட்டத்துள் மட்டுமே இயங்கவேண்டியவளாகவும் பயன்தருபவளாகவும் இருக்க வேண்டுமென அக்காலத்தவர் எண்ணினர். கணவனோடு அவள் வாழும் நிலையிலேதான் சிறப்புப் பெறுவாள் என வலிந்துரைக்க முற்பட்டனர். குடும்பம் என்ற நிலையிலே அவளுடைய திறமைகள் ஒடுக்கப்பட்டன. பெண்ணின் பேராற்றல்

வெளிப்படுவதற்கு ஆணின் ஒத்துழைப்பு மிக இன்றியமையாதது எனவும் எண்ணினர். இதனால் 'கற்பு' என்னும் சிறப்புடைப்பண்பு பெண்ணுக்கு ஏற்றிச் சொல்லப்பட்டது. கற்பு என்ற சொல்லின் பொருள் 'கற்றபடி ஒழுகுதல்' என்ற பொருள் தருவது. இப்பொருள் நிலையிலே அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானதாகவே கொள்ளப்பட வேண்டியது. ஆனால் அக்காலத்து ஆண்கள் கற்பு பெண்ணுக்கே உரிய ஒரு அணிகலம் என வரையறை செய்து அதனை மரபாகவும் ஆக்கிவிட்டனர். ஆணின் பரத்தமை ஒழுக்கத்தைக் கண்டிக்காமல் பொறுத்திருக்கும் பெண் கற்புடையவள் எனப்போற்றப்பட்டாள். பரிபாடலில்(20) வரும் செய்தி மூலம் இதனை விளக்கமுடிகிறது.

**"சேக்கை யினியார்பாற் செல்வான் மனையாளாற்**
**காக்கை கடிந்தொழுகல் கூடுமோ கூடா**
**தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்**
**இகழினுங் கேள்வரை யேத்தி யிறைஞ்சுவர்"**

மேற்காட்டிய பாடல் அடிகள் ஆண் பரத்தையிடம் சென்றுவிட்டால் அதற்காக அவனைக் கடிந்துரைப்பதும், நீக்கி வாழ்தலும் மனைவியாற் செய்ய முடியாதவை. சால்புடைய கற்புடைய பெண்கள் தம்மைக் கணவர் இவ்வாறு இகழ்ந்தாலும் அவரைப் போற்றியே வாழ்பவர் என விளக்கங் கூறுகின்றது. நற்றிணை 247ம் பாடலிலும் இதே போன்று ஆணை ஏத்தி வழிபட வேண்டியவள் பெண் எனக் கூறப்படுகின்றது.

## பெண்ணும் இழிதகைமையும்

பெண்ணின் கற்புநிலை சமூக நிலையிலே பல்வேறுபட்ட செயல்களோடு தொடர்புறுத்திப் பேசப்படலாயிற்று. பெண்ணின் பேராற்றல் அதுவேயெனவும் வரையறை செய்யப்படலாயிற்று. கற்பு நிலையிலும் தலைக்கற்பு, இடைக்கற்பு, கடைக்கற்பு எனத் தரம் பிரிக்கப்பட்டது. ஒரு பெண் கணவன் இறந்தவுடன் தன்னுயிரையும் நீப்பது தலைக்கற்பெனப்பட்டது. அவனோடு உடன் கட்டையேறல் இடைக்கற்பெனப்பட்டது. கைம்மை நோன்பு ஏற்று வாழ்வது கடைக்கற்பெனப்பட்டது. கணவன் இறந்தால் பெண் சமூகத்தில் வாழ்வது தவிர்க்கப்பட வேண்டியதொன்றாக எண்ணப்பட்டது. அவள் உயிருடன் இருப்பதால் பல இடையூறுகள் சமூகத்திற்கு நேரலாம் என எண்ணிக் கைம்மை நோன்புக்கென சில விதிமுறைகள் அமைக்கப்பட்டன. கூந்தல் களைந்து, ஆபரணங்களையும் விடுத்து, உணவைச் சுருக்கி, தம்மை அழகுபடுத்தாமலும் பிற ஆடவர் கண்களிலே தென்படாமலும் பெண் ஒதுங்கி மூலையிலே வாழ வேண்டும் என்னும் எழுதாமறை தோன்றியது. அதற்கு அணி செய்யும் வகையிலே புதிய மரபுகளும் தோன்றின. கணவனை இழந்தபின் பெண்ணின் தோற்றம் மாறியதால் அது விழிவிசேடத்துக்கு உகந்தது அல்ல என ஒதுக்கப்பட்டது. புறநானூற்றுப் பாடல்கள் பல இக்கைம்மை நோன்பு நோற்கும் பெண்டிரைப் பற்றியும் அவர் வாழ்க்கைநிலை பற்றியும் எடுத்துக் கூறுகின்றன. அழகுப் போர்வையால் பெண்ணின் அறிவாற்றலை நீக்கிய சமூகம் கணவன் இறப்பின் பின் அவள் அழகையே குலைத்துவிட வேண்டும் என விதிமுறை சொல்லிற்று. சிலப்பதிகாரம் என்னும் காப்பியம் இதனை நீண்ட செய்யுள் வடிவிலே விரிவாக ஆவணப்படுத்தியது. சங்க இலக்கியப் பாடல்களிலே

சிறிய விளக்கநிலையிலே இருந்த பெண்ணின் கற்பு சிலப்பதிகாரத்தில் பெரியதொரு வரலாறாக மூன்று நாடுகள் தழுவிய பெருங்கதையாக எழுதப்பட்டது. ஆணின் பரத்தமை ஒழுக்கத்தைப் பெண் கண்டிப்பதற்கு ஆற்றல் அற்றவள் என்ற மரபும் தொடர்வதாயிற்று. மாதவியிடம் சென்ற கோவலனை யாருமே கண்டிக்க முற்படவில்லை. பொருள்வளம் பெற்ற ஆண் எதையும் செய்யலாம் என்ற நிலை பேணப்பட்டது. அவனால் ஏற்படும் சமூகத்தின் சிதைவை ஆரம்பத்திலே களையாமல் முற்றிய நிலையிலேயே பெண்ணின் கற்பு என்னும் கருத்து வளர்க்கப்பட வாயப்பளிக்கப்பட்டது.

சிலப்பதிகாரத்திற்குப் பின்னர் எழுந்த மணிமேகலையிலும் பரத்தமை ஆடவர்க்கு இயல்பான ஒழுக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டமை பெறப்படுகிறது. பரத்தமை ஒழுக்கமுடைய கணவன் புகழப்படுகிறான். பரத்தமை ஒழுக்கமுடைய கணவனை ஆதிரை, கண்மணி போன்றவன் என்று புகழுகின்றாள். பரத்தமையை ஒழிப்பதற்குப் பெண்கள் துறவு பூணுவதே வழியெனப்படுகின்றது. ஆண்களின் பெண் மோகத்திற்கு ஊழ்வினையே ஏதுவாகும் என்று போலி விளக்கமும் கூறப்படுகின்றது. இவ்வுலக வாழ்க்கை நிலையிலே அறிவும் பொருள் வளமும் கொண்ட ஆண்மகனின் ஒழுக்கச் சீர்கேட்டிற்கு அவனது மனஅடக்கமின்மையே காரணமாகும். ஆனால், அதை இலக்கியங்கள் எடுத்துக் கூறமுற்படவில்லை. ஆணின் குற்றத்திற்குப் பெண்ணே ஏதுவாகக் கொள்ளப்பட்டாள். பெண்ணின் அழகுதான் ஆண்களின் ஒழுக்கச் சீர்கேட்டிற்கு வழிவகுத்தது என விளக்கம் கூறப்பட்டது. இதனால் பெண்களை வெறுக்க வேண்டும் என்ற ஒரு அறிவுரைகூட ஆண்களுக்கு கொடுக்கப்பட்டது.

இரட்டைக் காப்பியங்களுக்குப் பின்னர் தோன்றிய நீதிநெறி புகட்டும் இலக்கியங்கள் பெண்கள் மேலும் இழிவுபடுத்தப் பல செய்திகளைத் தொகுத்துக் கூறின, திருக்குறளில் பெண்வழிச் சேறல் என்னும் பகுதியில் உள்ள குறள்கள் பெண்களை இழிவுபடுத்துவனவாக உள்ளன.

**'அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்**
**பெண்ஏவல் செய்வார்கள் இல்'**

என்ற குறள் உச்சநிலையில் பெண்ணுக்கு ஏவல் செய்யும் ஆணைப் பழித்துரைக்கின்றது. பெண்ணின் தலைமைத்துவம் அக்காலத்தில் இழிவு செய்யப்பட்டுள்ளது. இல்லாளுக்குத் தாழ்ந்து நடக்கக்கூடாது என்று திருக்குறள் நீதி பேசுகின்றது. வாழ்க்கைத்துணை நலம் எனப் பெண்ணைப் புகழ்ந்து பேசிய குறளில் பெண்ணை இழிவுபடுத்தும் கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன. பெண்ணுக்குக் கற்பின் திண்மையே பெருமை எனக்கூறும் குறள் 'கூடாநட்பு' என்னும் பகுதியில் அவளை இழித்துரைக்கின்றது.

**"இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்**
**மனம்போல வேறு படும்"**

தடுமாறக்கூடிய மனமுடையோராகப் பெண்களை இக்குறள் பழித்துரைக்கின்றது. வரைவின் மகளிர் என்னும் பகுதியில் வள்ளுவர் ஒழுக்கத்திலே வரையறையில்லாத பெண்கள் எனச் சாடுகின்றார். ஆனால், அத்தகைய பெண்கள் உருவாவதற்கு ஏதுவாக இருந்த ஆண்களைத் திருத்துவதற்கு சமூகம் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் திருக்குறள் கூறமுற்படவில்லை.

திருக்குறளைப் பின்பற்றியே பின்வந்த நீதி இலக்கியங்கள் பெண் நலத்துக்கு ஆதரவுக்குரல் கொடுத்தாலும் பெண்களின் இழிதகைமைகளைக் கண்டித்துப் பேச முற்படவில்லை. பெண்மையின் மரபான பண்புகளையே விரித்துப் பேசுவதாய் அமைந்தன. நாலடியார் செய்யுள் ஒன்று பெண் கல்வியைப் பற்றிக் கூறுகிறது.

**"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி யழகே அழகு"**

தலைமயிரின் அழகும் கோடிய ஆடையினது கொடுந்திரையின் அழகும் மஞ்சளால் வந்த அழகும் அழகல்ல. நெஞ்சத்தின் கண்ணுள்ள நடுவுநிலைமையால் நல்லேம் யாமென்று தாந்தம்மை அறியப்படுங்கல்வி அழகே ஒருவர்க்கு உண்மையான அழகாகும். இதே கருத்தினை ஏலாதி என்ற நூலும் எடுத்துரைத்துள்ளது.

**"இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்**
**நடைவனப்பு நாணின் வனப்பும் - புடைசால்**
**கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோடு**
**எழுத்தின் வனப்பே வனப்பு"**

ஆனால் பெண்ணுக்குக் கல்வி வேண்டும் என்று பேசிய நாலடியாரே பெண்களை இழிவுபடுத்தும் வகையில் 'பொதுமகளிர்' என்னும் பகுதியில் பெண்களைப் பற்றிக் கடுமையாக விமர்சனஞ் செய்கிறது. குலமகளிர், பொதுமகளிர் எனப் பெண்களைப் பகுத்துக் காட்டுகின்றது. பெண்களின் நட்பை மிகவும் இழிமைப் படுத்துவதாக நாலடியாரில் ஒரு பாடல் அமைந்துள்ளது.

**"புதுப்புனலும் பூங்குழையார் நட்பும் இரண்டும்**
**விதுப்பற நாடின்வே றல்ல - புதுப்புனலும்**
**மாரி அறவே அறுமே அவரன்பும்**
**வாரி அறவே அறம்"**

பொருளுக்காகவே பெண்கள் ஆண்களோடு தொடர்பு கொள்வர் என்ற கருத்து பிற்கால இலக்கியங்களிலும் ஒரு மரபாகப் பேணப்படுவதற்கு இத்தகைய செய்யுட்களும் ஏதுக்களாயமைந்தனவெனலாம். பெண்ணுடைய கல்வியானது அவளுக்குப் பொருளாதார உரிமையைக் கொடுப்பதற்குப் பயன்படவில்லை. பெண்கள் எப்போதும் ஆண்களையே சார்ந்து வாழ வேண்டியவர்களாகவே கணிக்கப்பட்டனர்.

பெண்ணின் தொடர்பு ஆணுக்குத் துன்பந்தருவது என்னும் எண்ணம் சமூகத்திலே ஆழமாகப் பதிந்து போனமையால் அதனையே பொதுவான கருத்தாகவும் பலரும் கொள்ள இடமுண்டாயிற்று. ஆசாரக்கோவையில் வரும் பாடல் ஒன்று ஆண் பெண் தொடர்புநிலையில் ஒரு மிக இழிவான கருத்தை வெளியிட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**"ஈன்றாள் மகள்தன் உடன்பிறந்தா ளாயினும்**
**சான்றார் தமித்தா உறையற்க ஐம்புலனும்**
**தாங்கற் கரிதாக லான்"**

உலகத்துப் பெண்கள் எல்லோரையுமே இழிவான நிலைக்கு இப்பாடல் தள்ளுகிறது. சான்றோர் எனப்பாராட்டப்படுபவர் பெண்களிடம் அடக்கமாக நடந்துகொள்ளமாட்டார்கள் என்ற இப்பாடலின் கருத்து ஆசாரக்கோவையில் இடம்பெற்றிருப்பது பெண்களின் இழிதகைமைகள் பிற்காலத்தில் அவர்களுக்கு ஆண்களாலேயே கொடுக்கப்பட்டன என்பதைச் சான்றுகாட்டி நிற்கின்றது. தனது தாயையும், மகளையும் உடன்பிறந்தவளையும் உரிய உறவுநிலையிலே பேணமுடியாத ஆணைக் கண்டிக்க எந்த இலக்கியமுமே முன்வரவில்லை. அதற்கு மாறாக மனை வாழ்க்கையே தேவையில்லை என்ற கருத்தே பரவலாயிற்று.

பக்தி இலக்கியங்களிலே பெண்கள் இறைவனைச் சென்றடைவதற்கு ஆண்களைத் தடுக்கின்றவர்களாகக் காட்டப்படுகின்றனர். தொண்டரடிப்பொடி, மதுரகவி, திருமங்கை போன்ற ஆழ்வார்கள் பெண் உறவு இறையருளையடையத் தடையானது என்று பாடுகின்றனர். மணிவாசகரும் பாடிய திருவாசகங்களிலே இதனையே பலபாடல்களில் குறிப்பிட்டுள்ளார். பக்தி இலக்கியங்களிலே இவ்வாறு பெண்கள் ஆன்ம ஈடேற்றத்திற்கே தடையானவர்கள் என்று பேசப்பட்டதால் பிற்பட்ட காவியங்களிலும் பெண்கள் இழித்துரைக்கப்பட ஏதுவாயிற்று. சீவகசிந்தாமணியிலே பெண் பந்தயப் பொருளாக்கப்படுகின்றாள். ஆணுக்கு அடிமையாக வாழ வேண்டியவளாகின்றாள். கம்பராமாயணம் பாலகாண்டப் பாடல்களிலே பெண்மையின் இழிவு பரவலாகப் பேசப்படுகிறது. பேதமை, அழுகை என்பன பெண்ணின் பண்புகளாகத் திருப்பித் திருப்பிக் கூறப்படுகின்றன. சீதையைப் பிரிந்த இராமன் மனநிலை எட்டுப்பாடல்களிலே கூறப்பட இராமனைப் பிரிந்த சீதையின் நிலை பலபாடல்களிலே விரிவாகப் பேசப்படுகிறது. பெண்களின் உடல் உறுப்பு வர்ணனைகள் மிகவும் கீழ்த்தரமான நிலையிலே அமைந்துள்ளன. பெரியபுராணம் மனைவியையே இன்னொருவருக்கும் கொடுக்கும் நடைமுறையைக் காட்டுகிறது. கலியநாயனார் மனைவியை விற்க முயற்சி செய்கிறார். பெண்ணின் உடலழகு கணவன் இல்லாவிடில் நீக்கப்பட வேண்டியதெனக் கருதப்பட்டது. அரிச்சந்திர புராணம் பெண் பிறப்பே இழிவான பிறப்பு எனப் பேசுகிறது. திருவிளையாடற் புராணத்திலே உடல்நிலையான கொடுமைகள் பற்றிய செய்திகள் உள்ளன. பெண் குழந்தையையே வெறுக்கின்ற நிலைமை மலையத்துவசன் வரலாற்றின் மூலம் கூறப்படுகிறது. தடாதகை தன் திருமணத்திற்கு நாடும் செல்வமும் தந்து திருமணம் செய்த வரலாறு திருவிளையாடற்புராணத்திற் கூறப்படுகின்றது.

பின்னர்த்தோன்றிய சிற்றிலக்கியங்களும், இதே மரபினைப் பின்பற்றி உலாக்காட்சிகள் மூலம் பெண்களின் பண்புகளை இழிதகைமைக்காளாக்கின. கலிங்கத்துப்பரணி, நந்திக்கலம்பகம், அம்பிகாபதிக்கோவை போன்ற சிற்றிலக்கியங்களிலே பல பாடல்களை இதற்குச் சான்றாகக் காட்டலாம். இதே வழியிலே பிற்பட்ட காலத்துச் சித்தர்களும், பட்டினத்தார், அருணகிரிநாதர் போன்றவர்கள் பெண்ணுறவு மாயை, மறலிவிட்டதூது, மாயப்பிசாசு, மயங்கும் பண்புடையது என்றெல்லாம் இழித்துப் பாடிச் சென்றுள்ளனர்.

**"முட்டற்ற மஞ்சளை எண்ணெயிற் கூட்டி முகமிறுக்கி**
**மொட்டிட்டுப் பொட்டிட்டுப் பித்தளை ஓலை விளக்கியிட்டுப்**
**பட்டப் பகலில் வெளிமயக் கேசெயும் பாவையர்மேல்**
**இட்டத்தை நீதவிர்ப் பாயிறை வாகச்சி ஏகம்பனே"**

என்னும் பட்டினத்தார் பாடல் பெண்கள் தம்மை அழகுசெய்வதையே இழித்துப் பேசுகிறது.

**"பெண்ணாகி வந்தொரு மாயப் பிசாசும் பிடித்திட்டென்னைக்**
**கண்ணால் வெருட்டி முலையால் மயக்கிக் கடிதடத்துப்**
**புண்ணாங் குழியிடைத் தள்ளியென் போதப்பொருள் பறிக்க**
**எண்ணா துனைமறந் தேனிறை வாகச்சி ஏகம்பனே"**

என்னும் பட்டினத்தார் பாடல் பெண்ணை மாயப்பிசாசு என உருவகிக்கின்றது. பெண்களை இழித்துப் பாடுவதன் மூலம் தமது புலனடக்கத்திற்கு வழி தேடியவர்களாகவே இவர்கள் விளங்கினர். காமவயப்பட்டோர் அறிவால் அதை அடக்கும் வல்லமை பெற்றிருக்கவேண்டும். இல்லாவிடில் அவரை அறிவுடையோரெனக் கொள்ளமுடியாது. சித்தர்களது பாடல்களிலே பெண்ணாசை என்ற நிலைபற்றி அதிகம் பேசப்பட்டுள்ளது. மனிதன் மண், பொன், பெண் என்ற மூன்றின் மீதும் ஆவலாக இருப்பின் நல்ல நிலையை அடையமாட்டான். இவற்றைக் கண்டு ஆசைப்படாது ஒதுங்கி வாழும் ஆற்றல் அற்ற ஆண்மகன் பெண்ணைப் பேய் என்றும் பிசாசென்றும் கூறித் தூற்றத் தொடங்கினான்.

பெண்கள் பற்றிய இழிதகைமை இவ்வாறு சமூகத்திலே காலங்காலமாகப் பேணப்படலாயிற்று. இலக்கியங்களிலே நேரடியாகவும் மறைமுகமாகவும் இவை பேசப்பட்டுள்ளன. பெண்ணின் தோற்றநிலையிலே இயற்கைக்கு மாறான தன்மைகளையும் இலக்கியங்கள் கற்பித்துக் கூறியுள்ளன. ஆண்மைக் கலப்புச் சேர்ந்த பெண் வடிவங்களும், தோற்றங்களும் பாடல்களிலே விரிவாக விளக்கப்பட்டுள்ளன. பெண்ணை அணங்கு, சூர், பேய், பரத்தை, வஞ்சகி என அழைக்கின்ற மரபும் ஏற்பட்டது. பெண் ஆணுடைய ஆக்க நிலையான செயற்பாடுகளுக்கு இடையூறு செய்பவள் என்ற பிழையான முடிவு முற்காலத்தவரால் செய்யப்பட்டுள்ளது. இக்கருத்துக்கள் பெரும்பாலும் ஆண்களாலேயே கூறப்பட்டுள்ளன. எனவே, ஏன் இக்கருத்துக்கள் கூறப்பட்டன என எண்ணிப் பார்ப்பதும் இன்று ஒரு தேவையாகவுள்ளது.

## பெண் இழிநிலை பெறக்காரணம்

பெண்ணின் இழிதகைமை பற்றிப் பேசுவதற்கு முக்கிய காரணியாக அமைந்தது ஆரியப் பண்பாடாகும். ஆரியப் பண்பாட்டில் ஆணே முதன்மையானவன் எனப் போற்றப்பட்டான். மனுதர்ம சாஸ்திரம் பெண் எப்போதும் ஆணால் பாதுகாக்கப்பட வேண்டியவளென்றும் தனித்தியங்க முடியாதவளென்றும் வகுத்துக்கூறி உள்ளது. இதனையே நம்மவரும் கண்மூடிக்கொண்டு பின்பற்றியுள்ளனர். பெரும்பாலும் பெண்ணைப் பற்றிய இழிவான கருத்துக்கள் ஆண்களாலேயே கூறப்பட்டுள்ளன. பிற்காலத்திலே பெண்ணைப்பற்றிய மரபான கருத்துக்களை மாற்றிக்கூறப் புகுந்த பாரதி போன்றவர்களும் முரண்பட்டு நிற்கின்றனர். புதுமைப்பெண் பற்றிப் புரட்சிக் கவிதை பாடிய பாரதியே தனது பாஞ்சாலி சபதத்தில் 'பெட்டைப்புலம்பல்' என்று பாடியுள்ளான். பெண்ணின் குண இயல்புகளையும் ஆற்றல்களையும் சரிவரப் புரிந்து கொள்ளாமல் பெண்ணைப் பற்றிய கருத்துக்களைப் பலர் கூறப்புகுந்துள்ளனர். எடுத்துக்காட்டாக பழைய இலக்கியப் பாடல்களுக்கு உரை செய்தோர் பலர் முரண்பட்ட கருத்துக்களைக் கூறிச் சென்றுள்ளனர். சிறப்பான குணங்கள் யாவும்

ஆண்களுக்கே உரியவை. முரண்பட்ட குணங்கள் பெண்களுக்கே உரியன என்ற கோட்பாட்டை அவர்கள் விட்டுச் சென்றுள்ளனர்.

இயற்கை நிலையிலே பெண் தனக்கெனச் சில பேராற்றல்களைப் பெற்றிருக்கிறாள். குழந்தைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்குகின்ற பொறுப்பை ஏற்றிருக்கிறாள். அதனால் அவளிடம் தலைமைத்துவம் இயற்கையாகவே அமைந்துள்ளது. அந்தத் தலைமைத்துவம் வீட்டிற்கு வெளியே நாட்டிற்கும் பயன்படுமானால் அதன் பயன் பெரிதாகும். ஆணுக்கு விஞ்சி அவர் தலைமைத்துவம் செயற்படும் நிலையும் உருவாகும். இதனை விரும்பாத ஆண்கள் மரபு என்ற போர்வையைப் பெண்ணுக்குப் போர்த்தி அவள் ஆற்றல்களையெல்லாம் வீட்டோடு முடங்க வைத்துவிட எண்ணினர். பெண்ணின் செயற்பாடுகளும் பொறுப்பாள்கையும் வீட்டு நிலையிலே ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் நாட்டு நிலையில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பரந்த அடிப்படையிலேயே பெண்களுடைய தலைமைத்துவம் செயற்பட வேண்டும் என்ற எண்ணமும் அக்காலத்தில் ஆண்களுக்கு இருக்கவில்லை. எனவே தற்போது புதிய மரபு தன்னைத் தோற்றுவிக்க வேண்டியதும் இன்றியமையாததாகவுள்ளது. இல்லாள், மனைவி என்ற சொற்கள் வீட்டில் மட்டுமே பெண்ணின் தலைமைத்துவத்தை எடுத்துக்காட்டுவதாய் அமைகின்றன. பழைய மரபுகளின் போலித்திரையைக் கிழித்தெறியின் பெண்களின் உண்மையான ஆற்றல்கள் வெளிப்படும். அப்போதுதான் பெண்களின் இழிதகைமைகளையும் அகற்ற முடியும்.

பெண்களுக்குத் தேவையான கல்வியூட்டலைச் செய்தால் இந்தப் போலிமரபுப் போர்வையைக் கிழித்துவிட்டு அவர்கள் வெளியேவர முடியும். தமிழர் பண்பாட்டில் பெண் தெய்வமாகப் போற்றப்பட்ட நிலை இன்று மறந்துவிட்ட பண்பாடாகிவிட்டது. தாய்வழி மரபு பேணும் முறை மாறித் தந்தைவழி மரபு பேணும் நிலைமை தமிழர் பண்பாட்டிலே இன்று இடம் பெற்றுவிட்டதாலும் பெண்களை இழிவு செய்யும் மரபும் அழிக்கமுடியாததாயிற்று. பெண் கல்வி பெற்று தன்னுடைய நிலையைத் தானே நன்குணர முற்பட்டால் இலக்கியங்களில் இழித்துப் பேசும் நிலையும் அறவே ஒழியும். பெண்களின் உண்மையான குண இயல்புகளை யாவரும் அறியப் பெண்களே இலக்கியங்களைப் படைக்கவும் முடியும். அதுவே சமூக மாற்றத்தையும் ஏற்படுத்தவல்லது என்பது ஐயமில்லை.

.............................................................................................

**படைப்பு**

அவர் ஒரு குயவர். அழகழகாய் மண் பாத்திரங்கள் செய்து அடுக்கி வைத்திருந்தார். அந்த வழியே சென்ற ஒருவர்: "இந்த ஆட்டை ஏன் கட்டி வைத்திருக்கிறீர்கள்" என்று குயவரிடம் கேட்டார். அவர் "நான் கடவுளை மகிழ்விக்க இதைப் பலி தரப்போகிறேன்." என்றார். "அப்படியா?" எனக் கேட்டுவிட்டு அவர் அங்கிருந்த அழகிய பானைகளையெல்லாம் ஒவ்வொன்றாய்ப் போட்டு உடைக்க ஆரம்பித்தார். பதறிப்போய் ஓடிவந்த குயவர் இறைந்து கத்தினார். அதற்கு "உனக்கு சந்தோஷமாக இருக்குமே" என நினைத்தேன் என்றார் வந்தவர். "நான் செய்த பானைகளை என் முன்னால் போட்டு உடைத்தால் எனக்கு சந்தோஷம் வருமா?" என்றார் அவர் கோபமாக. "நீ மட்டும் இறைவனின் படைப்பை அவர் முன்னால் கொன்றால் அவருக்கு மகிழ்ச்சி கிடைக்கும் என நினைக்கிறாயே" என்றார் வந்தவர். குயவருக்குத் தன் தவறு புரிந்தது.



# எழுதத் தோன்றும் எண்ணம்

**செஞ்சொற் செல்வர்**
**ஆறுதிருமுருகன் அவர்கள்**

அன்னியர் எம் நாட்டை ஆக்கிரமித்து ஆங்கிலமோகமாய் மாற்ற முனைந்தபோது செந்தமிழும் சைவமும் நிலை நிறுத்த பதவியைத் துறந்து வெண்ணீற்றுப் பூச்சுடன் வீதியில் நடந்து எம் மொழி எம் பண்பாடு நிலைக்க பொருள் வளமும் ஆட்சியினரின் செல்வாக்கும் மிக்க மிசனரிமாருக்கு மத்தியில் தனி ஒரு மனிதனாய் நின்று செந்தமிழும் சைவமும் நிலைக்க அரும்பாடுபட்ட ஆறுமுக நாவலரை மறப்பது நியாயமோ?

பதவியைத் துறந்ததனால் வீட்டில் உறவினர் எதிர்ப்பு. பதவி தந்த அதிபர் பார்சிவல் பாதிரியார் எதிர்ப்பு. எதிர்காலத்தில் எம் மொழியும் எம்பண்பாடும் அழியக்கூடாது என்பதற்காக துன்பதுயரங்களுக்கு மத்தியில் தூக்கமின்றி உழைத்து எமக்கென ஓர் பாடசாலையை உருவாக்கிய உத்தமனை உணர்ந்துபாருங்கள்.

ஏட்டில் எம் சொத்துக்கள் அழிவதைக்காக்க படகு ஏறி இந்தியா சென்று பாதம் வலிக்க நடந்து அச்சுயந்திரம் வாங்கி பாய்க்கப்பலில் ஏற்றி அச்சுஇயந்திரசாலையில் தானே காலால் இயக்கி எம் அரிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டு பகல் இரவு பாராது நூல்களை உரை நடையில் வசனமாய் எழுதி வெளியிட்ட அந்த நாட்களின் சுமைகளை எண்ணிப்பாருங்கள்.

ஆலய வாசலில் வாள், கத்தியுடன் ஆடு, கோழி என உயிர்ப்பலி செய்து இரத்த வெள்ளத்தில் ஆடிப் பாடியவர்களை இது ஆன்மீகம் அல்ல-பக்தி என்பது அன்பின் வழியில் ஆண்டவனை நோக்குவது என எடுத்துரைத்து கேள்வி செய்தார் மத்தியில் எத்தனை சோதனைகளைச் சந்தித்துக் கோயிலைப் புனிதமாக்கிய உத்தமனை நீள நினைத்துப்பாருங்கள்.

சிதம்பரத்து திருக்கோயில் முதல் நல்லூரான் முன்றல்வரை கண்டனங்களால் நீதியுரைத்து இன்னல்கள் பல கண்டும் இனியன நடக்க வைத்த உயர்ந்தோனை உணர்ந்துபாருங்கள்.

கல்விச்சாலைகள் நிறுவியும் பசித்தவர், பஞ்சத்தால் துடித்தவர்க்குப் பிடியரிசி எடுத்துக் கஞ்சித்தொட்டி அமைத்தும் பிரசங்க மரபைத் தொடக்கி துன்ப துயரங்களுக்கு மத்தியில் தூக்கமின்றி செந்தமிழும் சைவமும் நின்று நிலைக்க அல்லும் பகலும் அரும்பாடுபட்ட நல்லை நகர் நாவலரை அழிந்தொழிய விடாதீர்கள். என் அருமை உறவுகளே அவர் காத்திரமானவர். அவர் மரபைக் காலமெல்லாம் காத்து களிப்புடன் வாழ்வீராக.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள் ஒருவராகி
விட்ட எனது தாய் மாமன்



நயினாதீவு

அமரர் தம்மையா இலங்கைநாதன்

அவர்கட்கு எனது கண்ணீரைக்
காணிக்கை ஆக்குகின்றேன்.

- ஆசிரியர்



# ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகைகளும் மொழி நடையும்

அருட்கலாநிதி B. ஞானப்பிரகாசம்

ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகைகளைப் பட்டியல்படுத்தி அவற்றை ஆவணப்படுத்த வேண்டும் என்ற முயற்சிகளில் பலர் ஈடுபட்டுவரும் இவ்வேளையில் ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகைகளின் மொழிநடைபற்றிய கருத்துக்களும் அவ்வப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன.

மக்கள் தமிழை ஆக்க இலக்கியங்களில் பயன்படுத்த வேண்டுமென்ற கோட்பாடு 20ம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இருந்து வலுவடையத் தொடங்கியது. இதனால் ஈழத்து இலக்கியங்கள் எங்கள் நாட்டு வாழ்வை உண்மையுடன் பிரதிபலிக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையாகவே மண்வாசனை போன்ற இலக்கியக் கோட்பாடுகள் வலுப்பெற்றன. இவ்வாறான பின்னணியில் இலக்கியங்களைப் படைக்க முற்பட்டோர் மக்கள் பேசுகின்ற மொழியை உபயோகிப்பது எம் நாட்டு மண்வாசனையை வெளிப்படுத்த உதவும் என்ற நோக்கில் பேச்சு மொழியை இலக்கியங்களில் கையாள முற்பட்டனர்.

ஈழத்தைப் பொறுத்தவரை பத்திரிகைத் தமிழ், சஞ்சிகைத் தமிழ் என இனங்காணக் கூடிய வேறுபாடு அதிகம் இல்லையாயினும் இவற்றின் போக்கிற்கும் நோக்கிற்கும் பொருத்தமான மொழிநடை பின்பற்றப்பட்டு வருகின்றது.

ஈழத்தில் தமிழ்ப் பத்திரிகைகளின் தோற்றகாலமாக 19ம் நூற்றாண்டையே குறிப்பிட வேண்டும். ஈழத்தில் எழுத்துத்துறை ஊடகங்களின் வளர்ச்சி அந்நியராட்சியின் விளைவினால் அச்சியந்திரத்தின் அறிமுகத்தோடு, பத்திரிகைத்துறை வளர்ச்சி பெறச் சஞ்சிகைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றின் தோற்றத்தைச் சமய, அரசியல், சமூக காரணிகள் ஊக்கப்படுத்தின எனக் கூறலாம். ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகைகள் பல தனிப்பட்டவர்களின் முயற்சியிலும், சமய ரீதியிலும், நிறுவனங்கள் சார்ந்தும் அவ்வப்போது வெளிவரத் தொடங்கின. இவற்றில் சில தோன்றிய வேகத்திலேயே மறைந்தும்போயின.

ஈழத்தில் தோன்றிய முதலாவது தமிழிதழான உதய தாரகை முதலில் திங்கள் இதழாக வெளிவந்து, பின்னர் திங்கள் இரு இதழ்களாகி, காலப்போக்கில் வாரமொன்றாக வளர்ந்தது. ஆரம்ப காலத்தில் இப்பத்திரிகை தமிழோடு ஆங்கிலமும் கலந்ததாக வெளிவந்தது. சமய நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இவ்விதழ் தூய தமிழ் நடையைக் கையாளவில்லை. கணிசமான அளவில் வடமொழிச் சொற்கள் கலந்ததான ஆக்கங்கள் இதில் வெளிவந்தன.

ஆரம்ப கால ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைகளின் சொல் நெறி சமய, சமூக, இலக்கியங்கள் சார்ந்தனவாகவே காணப்பட்டது. இவ்வாறான எழுத்துலக வளர்ச்சி ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகைகளின் தோற்றத்திற்கு உந்துசத்தியாயிற்று.

1930களில் ஈழத்தில் தோன்றிய வீரகேசரி, ஈழகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகள் தேசிய எழுத்துக்காலத்துடன் தொடர்புபட்டவை. இதனால் தேசிய இலக்கிய பாரம்பரியமொன்று இங்கு வளர வழியேற்பட்டது. பத்திரிகைகள் ஏற்படுத்திய இலக்கிய விழிப்புணர்வு ஆக்க இலக்கியங்களின் வளர்ச்சிக்கு வழிசமைத்தது. ஆக்க இலக்கியங்களின் வளர்ச்சியினால் தமிழ் உரைநடை புதிய வேகம் பெற்றது. இந்த வேகம் தமிழ்ச் சஞ்சிகைகளை வளர்த்தது. இதன்விளைவாக 'மறுமலர்ச்சி' என்ற சிறுசஞ்சிகையொன்று தோற்றம்பெற்றது. இதனைத்தொடர்ந்து காலந்தோறும் சிறுசஞ்சிகைகள் தோன்றத்தொடங்கின.

இவ்வாறாகத் தோற்றம் பெற்றவையே கலைச்செல்வி, விவேகி, வசந்தம், தேனருவி, மல்லிகை, சிரித்திரன், தமிழமுது, அஞ்சலி, களனி, ஊற்று முதலியன. இந்த முயற்சிகள் இன்னும் விரிவடைந்து செல்கின்றன. கல்வி நிறுவனங்கள், கலை நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், தொழில் நிறுவனங்கள், போராட்டக் குழுக்கள் எனப் பலவும் இம் முயற்சிகளில் ஈடுபட்டுவருவதைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஈழத்தில் தமிழர் வாழும் பிரதேசங்களைப் பருமட்டாக வடக்கு, கிழக்கு, மலையகம் எனப் பகுத்து நோக்கலாம். இதனடிப்படையில் ஒவ்வொரு பிரதேசத்திலும் தோன்றும் சஞ்சிகைகள் அவ்வப் பிரதேச வாசனையைப் பிரதிபலிப்பனவாய் அமைகின்றன. இதில் முக்கிய அம்சமாக மொழிநடையைக் குறிப்பிடலாம்.

மொழிநடையைப் பொறுத்தவரை கலை இலக்கியச் சஞ்சிகைகள் இலக்கிய நடையைப் பின்பற்ற வேண்டுமென்ற கோட்பாடு உடையனவாகக் காணப்படினும் இரு வழக்குப் பண்பு தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. என்னவெனில் சிறுகதை, நாவல் போன்றவற்றில் ஆசிரியர் கூற்றுக்கள் இலக்கியத் தமிழிலும், பாத்திரங்களின் கூற்றுக்கள் பேச்சுத்தமிழிலும் அமைந்துவிடுகின்றன.

பேச்சுமொழி இலக்கியங்களில் இடம்பெறுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால் அம்மொழியை எப்படி உபயோகிக்க வேண்டுமென்பதை ஆக்க இலக்கியக்காரர் கவனித்துக்கொள்ளவேண்டும்.

ஜனரஞ்சகமாக இலக்கியங்களைப் படைக்கின்றவர்கள் பொதுமக்கள் சார்ந்த மொழிநடையைப் பின்பற்ற வேண்டுமென்பர். ஆனால் எம்மத்தியில் பிரபல்யமடைந்துள்ள பேச்சுவழக்கு நடையை எழுத்துவழக்கில் அப்படியே கையாளலாமா என்பது பிரைச்சனைக்குரிய விடயந்தான்.

தமிழ்ச் சஞ்சிகைகள் பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக வெளிவருகின்றபோது அந்த விடயங்களுக்கு ஏற்றவாறு பொருத்தமான மொழிநடையைக் கையாளவேண்டிய ஒரு தேவை ஏற்படுகின்றது. உண்மையில் பேச்சுமொழி உயிர்ப்புடையதுதான். இருப்பினும் அப்பேச்சுமொழியை அப்படியே எழுத்துமொழியாக்குவதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுவதில்லை.

சிறுகதை, நாவல், நாடகம் போன்ற படைப்புக்களில் இடம்பெறும் பாத்திரங்கள் வேறுவேறு தன்மைபட்டனவாக இருப்பதனால் அவ்வப் பாத்திரங்களுக்கேற்ற மொழிநடையைக் கையாளவேண்டுமென்ற கோட்பாடுடையவர்களாகச் சில படைப்பாளர் காணப்படுகின்றனர். எவ்வாறிருப்பினும் செம்மையான கொச்சை நீங்கிய மொழிநடையைப் பின்பற்றி எழுதுவது தமிழின் பெருமையைப் பேணுவதாக அமையும்.

தமிழ்ச் செய்யுளுக்குப் புத்துயிர் கொடுத்த பாரதியார் எளிமை, இனிமை இரண்டையும் முக்கியமாக வலியுறுத்தினார். பாரதியின் இலக்கியக் கோட்பாடு அவருக்குப் பின்வந்த இலக்கியக்காரர்களைப் பாதித்தது. தமிழ்மொழி வளர்ச்சிப் போக்கில் தமிழ் நாட்டின் இலக்கியப் போக்கும், எழுத்துச் சாயலும் ஈழத்திலும் அவ்வப்போது தாக்கத்தை ஏற்படுத்துவது வரலாற்றுண்மை. இதனடிப்படையில் தமிழ் நாட்டு மறுமலர்ச்சி எழுத்தாளரது இலக்கியப் போக்கை ஈழத்து எழுத்தாளர்களும் பின்பற்றியிருக்கிறார்கள். எனவே ஈழத்துச் சஞ்சிகைகளிலும் எமது ஆக்க இலக்கியக்காரர் இப்போக்கைப் பின்பற்றியுள்ளனர்.

பிரதேசக் கொள்கை இலக்கியங்களில் பின்பற்றப்பட்டபோது பிரதேச வாசனையையுடைய மொழியையும் இலக்கியங்களில் பின்பற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன் காரணமாகவே பேச்சு மொழியை இலக்கியங்களில் கையாள முற்படுகின்றனர்.

பேச்சு மொழியை இலக்கியங்களில் கையாள்வது பிழையாகாது எனினும் அதனை எப்படி உபயோகிக்க வேண்டுமென்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும். நவீன இலக்கியக் கோட்பாடுகளைத் தமிழ்ச் சஞ்சிகையாளர் கைக்கொள்ளும்போது மொழி வழக்கைப் பொறுத்தவரை நடையியல் துறையை அனுசரித்துப்போவது ஏற்புடையது.

## இரவல்

பௌர்ணமி இரவு நிலவொளியில் ஆங்காங்கே விருந்துகள், கூட்டங்கள், கொண்டாட்டங்கள், முழுநிலவின் அழகை வர்ணிக்கும் கவியரங்குகள், பாடல்கள் அவனுக்குப் புரியவில்லை. பெரியவர் ஒருவரிடம் கேட்டான். "ஞாயிறுதானே நிலவுக்கு ஒளி தருகிறது. ஆனால், ஏன் இவர்கள் நிலவை இப்படிப் புகழ்கிறார்கள்?."

"தம்பி ஒரே மாதிரி இருப்பவர்களுக்கு இந்த உலகில் மரியாதை கிடையாது. தேய்ந்துகொண்டே இருப்பது வளர்ந்து முழுமையாவதில் தான் இவர்களுக்கு ஆச்சரியம். மனிதர்களுக்கு மட்டுமென்ன இரவல் ஜொலிப்புக்களுக்குந் தானே மதிப்பு" என்று பெரியார் பதில் கூறினார்.

## மெய்யாய் ஓரோர் கணம்...........!

எத்தனை பேர் ஆடி
இறங்கிவிட்ட மேடையிலே
இன்றேறி ஆடுதற்கு
நீ வந்தாய், உன் நடனம்
நன்றாயிருக்கும் -
நாள்பட்டுப் போகையிலே...............?

வேறொருத்தி ஆட
விரைந்திட்டால், நீ பிறகு,
விட்டுக் கொடுக்க
விரும்பாய்; எனைப்பழிப்பாய்;
நாட்டியத்தின் அட்சரங்கள்
நானறியேன் என்பாய்.

ஊராரைக் கூட்டி
உமிழ்ந்திடுவாய்; என்னிடத்தில்,
உள்ள குறைகள்
உரைத்திடுவாய், போலியென்பாய்;
சாபமிட்டு, நானிட்ட
சத்தியங்கள் பொய்த்த தென்பாய்.

ஆட வருபவளுக்கு
அறிவுரைகள் சொல்லிடுவாய்.
இப்படித்தான் எல்லாரும்
இறங்கிவிட்டார் ஆடிவிட்டு.

பொய்யாய், மறைவாய்,
புகழுக்காய், ஆசைக்காய்
உள்ளபடியாய் நான்
உரைத்திருக்க வில்லையடி.
மெய்யாய் ஓரோர் கணத்தில்
மேனி சிலிர்த்ததடி.

ஆடப்பிறந்தவளே!
அந்தரங்க மேடையினைத்
தூசுதட்டிப்-பட்டுத்
துணி விரித்து மெய்ம்மறந்து
பார்க்க இருக்கின்றேன்
'பழசு படும் உள்ளதெல்லாம்'.

ஆனாலும் ஆடு
அங்கமெல்லாம் பொங்கியெழ
கூந்தலுடன் கொங்கைகளும்
குலுங்கிச் சதங்கையுடன்,
காலாடக் கையாடக்
கண்விழிகள் பாய்ந்தாட
நெஞ்சாட மஞ்ச
நினைவு எழுந்தாட
ஆடுமயிலே! என்
அரங்கம் முழுவதிலும்
ஓயாமல் ஆடு
உன் கனவு மாயுமட்டும்.

## புகழாரம்

வழியை விடு
இனி ஏமாறமாட்டேன்.

எனது நொண்டிப் படைப்புக்களுக்கு
நீ சார்த்திய புகழாரங்கள்
கருகிவிட்டன.

நான் ஏமாறமாட்டேன்.
என்னை விடு.

எல்லாம் அறிந்தவனாய்
நானும்,
என்னை அறிந்தவனாய்
நீயும்,
போட்ட கூத்தெல்லாம்
போதும்,
ஆளை ஆள்
நன்றாய் ஏமாற்றிக் கொண்டோம்
போதும் விடு.
என்னை விடு

முதுமையின் தனிமைக்கு
உனது புகழாரங்கள்
துணையாகவில்லை.

என் படைப்புக்களுக்கு
நான் விசுவாசமாய் இருந்ததில்
எனக்கு வழி
கிடைத்துவிட்டது.

உனது பாராட்டுதல்களில்
விசுவாசம் இருந்ததா?

உனது இயலாமையை
மறைத்துக் கொள்வதற்கு
வேறு ஆளைப்பார்.
இனி ஏமாறமாட்டேன்.

## சரணாகதி

ஊனச் சதையின் உறுதியும் மாறி
ஓடுங் குருதியின் ஓட்டமும் மாறி
உளையும் மனத்தின் உணர்வும் மாறி
உள்ளும் புறமும் ஆசையும் மாறி
வாழ்வின் பாதை வரட்சியில் இருள
வதைவில் அழியும் என் விளக்கதனின்
எண்ணெயும் மண்டி எரிதிரி அருகையில்
உன்னொளி பரப்ப ஓடி வாராயோ.

– வேதாந்தி



# அடையாளமும் தமிழ் அடையாளமும்

பேராசிரியர் சி. மௌனகுரு

உலக மயமாக்கல் காரணமாக சிறிய நாடுகளின் தனித்துவங்கள், சுதந்திரங்கள் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன. சிறிய நாடுகளின் தனித்துவ அடையாளங்கள் அழிகின்றன. அல்லது அழிக்கப்படுகின்றன. அவைகள் மீது ஒரு அடையாளம் திணிக்கப்படுகிறது. அல்லது கட்டமைக்கப்படுகிறது. நம் நாட்டில் இன ஒடுக்கு முறை காரணமாக மேற்குறிப்பிட்ட விடயங்கள் நடந்தேறுகின்றன. அதேபோல பிரதேச ஒடுக்குமுறை காரணமாக பிரதேச அடையாளங்களும், சாதி ஒடுக்குமுறை காரணமாக சாதி அடையாளங்களும், ஆணாதிக்க ஒடுக்குமுறை காரணமாக பெண் அடையாளங்களும் அழிகின்றன. அல்லது அழிக்கப்படுகின்றன. இந்நிலையில் அடையாளம் என்பது யாது? அது அவசியமானது தானா? அல்லது அழியவேண்டியதுதானா? என்பன போன்ற வினாக்கள் எம்முன் எழுவது இயற்கை.

## அடையாளம் என்பது யாது?

அடையாளம் என்ற சொல்லை நான் கேள்விப்பட்டது எனது நான்கு அல்லது ஐந்து வயதிலாகும். எங்கள் கிராமத்திலே ஒரு சிறுதெய்வக்கோயில். அங்கு வருடாவருடம் கதவு திறந்து சடங்கு நடைபெறும். 7 நாட்கள் இச்சடங்கு நடைபெறும். 3 ஆம் நாள் சடங்கை "அடையாளச் சடங்கு" என்பர். அன்று சூலம் ஒன்றும், கும்பம் ஒன்றும் அடையாளமாக பூசாரிமாரால் பூசை பண்ணப்பட்டு உடுக்கு, பறை, சிலம்பு முழங்க, மக்கள் குரவையிட, மக்கள் கூட்டம் பின்தொடர, கோயிலைச் சுற்றிக் கொண்டுவரப்படும். கோயிலை வலம் வந்து கும்பத்தை கோயில் மூலஸ்தானத்தில் வைப்பர். சூலத்தை கோயிலின் வாசலில் நடுவர்.

7 நாள் முடியும் வரையும் கோயில் சடங்கின் அடையாளங்களாக அவை கருதப்படும். அடையாளம், அடையாளச் சடங்கு என்ற வார்த்தைகளினதும், அச்செயற்பாடுகளினதும், அர்த்தம் தெரியாமல் அச்சொல்லை நான் பல ஆண்டுகள் உச்சரித்துள்ளேன்.

அடையாளம் என்பது குறியீடு ஆகும். அக்கோயிலின் குறியீடுகளாக அல்லது கோயிற் சடங்கின் குறியீடுகளாக அச்சூலமும், கும்பமும் கருதப்பட்டன. அக்கோயிலை நடத்துபவர்கள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அச்சமூகத்தினருக்கு அச்சூலமும், கும்பமும் அடையாளமாயின. ஏனையோரைவிட அச்சமூகத்தினருக்கு அவ்வடையாளங்கள் தனியான அர்த்தங்களையும் உணர்த்தின.

அவ்வடையாளங்கள் அச்சடங்கின் மீது ஒரு நம்பிக்கையை அச்சமூகத்தினருக்கு ஏற்படுத்தின. அவ்வடையாளங்களை மையமாகக் கொண்டு 7 நாட்களும் அச்சமூக மக்கள் அக்கோயிலிற் கூடினர், ஒன்றாயினர். அவ்வடையாளங்கள் அவர்கட்குப் புனிதமானவை.

**அடையாளம் என்பது, ஒரு குழுவினர் தாம் இணைவதற்காக, ஒன்று சேர்வதற்காக ஏற்படுத்திக் கொள்ளுகின்ற புனிதமான உணர்வையும், நம்பிக்கையையும் தருகின்ற குறியீடு** என்று நாம் வரையறை செய்யலாம்.

இவ்வகையில் அடையாளம் என்பது, ஒரு சமூகத்தின் தேவை கருதி அவர்களால் கட்டமைக்கப்படுகின்ற ஒன்று என்பதும் அது அச் சமூகத்தினால் பாரம்பரியமாகப் பேணப்படுவது என்பதும் தெளிவாகின்றது.

அடையாளத்தைக் கட்டமைக்க வைப்பது சமூகத்தின் ஒரு தேவைதான். அத்தேவையை ஏற்படுத்துவது வரலாற்றுச் சூழலே.

இந்துத் தமிழரின் கலாசார அடையாளமாகக் கோயில் கட்டமைக்கப்பட்டது கி.பி. 9ஆம் நூற்றாண்டுக்குப் பின்தான். முக்கியமாக சோழமன்னர் ஆட்சியில் இது நடந்தேறியது. தென்னாசியாவைக் கட்டியாண்ட அப்பேரரசுக்கு கோயிலைக் கலாசார அடையாளமாக்க வேண்டிய தேவை அன்று ஏற்பட்டது. சமண, பௌத்த மதங்களுக்கு எதிரான போரில் கோயில் வழிபாடு பிரதானமாகியதுடன், மக்களை அடக்கி ஆள்வதற்கான கருத்தியலை வழங்கும் நிறுவனமாகவும், அது அமைந்தது. தஞ்சை இராஜேஸ்வரக்கோயில் **பெரும் கோயில்** என்றே அழைக்கப்பட்டது. போட்டி போட்டுக் கொண்டு அரசர்களும் அரசகுடும்பத்தினரும் கோயில் கட்டினார்கள்.

சோழப்பேரரசைக் கட்டிக்காத்ததில் கோயில்களுக்குப் பெரும் பங்குண்டு. அவை வங்கிகளாகவும், அறிவு நிலையங்களாகவும் கலைக்கூடங்களாகவும், பலருக்கு வேலைதரும் இடங்களாகவும் பல்முகப்பட்ட பணிகளை ஆற்றின. அன்றைய தேவையும் வரலாற்றுச் சூழலுமே கோயில்களை தமிழ் மக்களின் கலாசார அடையாளங்களாக்கின.

எனவே ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட தேவையை நிறைவேற்ற அடையாளம் தேவைப்படுகின்றது. அக்குறிப்பிட்ட தேவை மறையும் காலத்தில் அவ்வடையாளம் தேவையற்று விடுவதும் உண்டு.

உதாரணமாக தமிழர் மத்தியிலே சாதியமைப்பு முக்கியமானது. சாதியின் அடையாளமாக அவர்களது தொழில்கள் அமைவதுண்டு. முதலாளித்துவ வளர்ச்சியின் பின் கல்வி அனைவருக்குமாக்கப்பட்டதும் குறிப்பிட்டதொரு தொழில் செய்த சாதியினர் பாரம்பரியமாகத் தாம் செய்த அத்தொழிலைக் கைவிட்டு

வேறு தொழில்களைச் செய்ய ஆரம்பித்தனர். இதனால் அவர்களின் சாதி அடையாளம் மாறலாயிற்று. இவ்வண்ணம் வரலாற்று ஓட்டத்தில் அடையாளம் தேவையற்றதாகவும் ஆகிவிடுகின்றது.

அடையாளம் சில வேளைகளில் மாறிக்கொண்டு செல்வதையும் காணுகிறோம். மட்டக்களப்பில் ஒரு தெய்வக் கோயிலை உதாரணமாக வைத்து இதனை விளக்கலாம். நான் அறிய மாரியம்மன் கோயில் ஒன்றின் மூலஸ்தானத்தின் அம்மனின் முகத்தை வைத்து அதற்கு பாவாடை கட்டுவது போல, அடுக்குச் சாத்தி அதனையே அடையாளமாக வழிபட்டனர். அதனை மாரியம்மன் **"முகக்களை"** என அழைத்தனர். இன்று அதேகோயிலில் கை, கால், உடலுடன் அமைந்த வெங்கலத்தாலான மாரியம்மன் சிலையை வைத்து மாரியம்மனின் அடையாளமாக வழிபடுகின்றனர். இங்கு ஒரு காலத்தில் அடையாளமாகக் கருதப்பட்ட ஒன்று மாறிவிட்டிருப்பதை நாம் உணரலாம்.

**'முகக்களை' முழு உருவச் சிலையாக மாறியுள்ளது.**

இது தானாக மாறியதா? என வினவுவோமாயின் அதற்கான விடை இல்லை. அது மாற்றியமைக்கப்பட்டது என்பதாகும். ஆரியமயமாக்கத்தினாலும், பெரும் கோயில் மரபினாலும் கவரப்பட்ட கிராமிய மக்கள் அதனை மாற்றியமைத்தனர். கிராமிய மக்களில் கோயில் நிர்வாகிகளின் மேனிலையாக்கம் அவர்களை இந்நிலைக்குக் கொணர்ந்தது. உருவச்சிலைகளை பிராமணர்களும், உயர்வகுப்பினரும் வைத்து வணங்குவது போல தாமும் வணங்குவதுதான் தம் உயர்ச்சிக்கு அடையாளம் என்று உயர்நிலை ஆக்கம் பெற்ற கிராமிய மக்கள் எண்ணியதன் விளைவு அது.

எனவே அடையாளம் என்பது மாறுவது மாத்திரமன்றி அது மாற்றியமைக்கப்படுவதும் என்பதும் தெரியவருகிறது.

இவ்வகையில் **அடையாளம் என்பது ஒரு குழுவினர் தாம் ஒன்றாக இணைய வேண்டிய தேவைகருதி வரலாற்று நிர்ப்பந்தத்தால் உருவாக்கிக் கொள்ளுகின்ற மனித உணர்வை ஏற்படுத்தும் ஒரு குறியீடு எனவும், அவை மனிதரால் கட்டமைக்கப்படுகின்ற ஒன்று எனவும், அது மாறுகின்ற தன்மையுடையது, சிலவேளைகளில் மாற்றியமைக்கவும் படுகின்றது** எனவும் அறிந்து கொண்டோம்.

இத்தனி அடையாளங்களைக் களைந்து மானுடம் எனும் அடையாளம் அடைதலே உயரிய நிலை என்று கூறுவோரும் உண்டு. அடையாளம் அழிந்து பிரமத்துடன் இணையும் நிலையே உன்னதநிலை எனக்கூறும் ஆன்மிக ஞானிகளும் உண்டு.

## அடையாளமும் கட்டமைப்பும்.

கட்டமைத்தல் (Construction), கட்டவிழ்ப்பு (Deconstruction), மீள்கட்டமைப்பு (Reconstruction) என்ற பதங்களின் அர்த்தங்களைப் புரிந்து கொள்ளல் முதலில் அவசியம். ஏதோ ஒரு தேவைகருதி ஒன்றைக் கட்டி, சடங்காக உருவாக்குதலை நாம் கட்டமைத்தல் எனலாம்.

கட்டமைக்கப்பட்ட விதத்தினைப் பிட்டுக் காட்டி, அவிழ்த்துக் காட்டி அல்லது உடைத்துக் காட்டி அது ஏன் கட்டமைக்கப்பட்டது? யாரால் கட்டமைக்கப்பட்டது? அதன் உள்நோக்கம் என்ன என்பதனை வெளிப்படுத்தல் கட்டவிழ்த்தல் ஆகும்.

இன்னொரு தேவை கருதி அதனை இன்னொரு வகையில் கட்டி அமைத்தல் மீள் கட்டமைப்பு ஆகும். இதுவும் கட்டுடைக்கப்பட்டு இன்னொரு மீள்கட்டமைப்பு ஏற்படுத்தப்படும்.

நமது கருத்து, பண்பாடு அனைத்தும் இவ்வாறே கட்டமைத்து, கட்டுடைத்து, மீள்கட்டமைத்து பின்னர் மீள் கட்டமைப்பைக் கட்டுடைத்து இன்னொரு மீள்கட்டமைப்பை ஏற்படுத்தி என ஒரு சங்கிலித் தொடராக வளர்ந்து வந்துள்ளது. அமைப்பியல் வாதம் எல்லாவற்றையும் ஓர் அமைப்பாகக் கண்டது. ஆனால் ஏன் அது அவ்வாறு அமைந்துள்ளது? அது அமைந்ததா? அமைக்கப்பட்டதா? என்ற வினாக்களை அறிஞர் எழுப்பினர்.

கட்டமைத்தல் பற்றியும், கட்டமைப்புப் பற்றியும் விளக்கியவர்களுள் முக்கியமானவர்கள் **தெரிதாவும், பூக்கோவும்** ஆவர். தெரிதா, அனைத்து செயற்பாடுகளுக்கும் ஆதாரம் அதிகாரமே என்றார். இதனை இவருக்கு முன்னரேயே **மார்க்ஸ்** ஆளும்வர்க்கம், ஆளப்படும் வர்க்கம் என விளக்கி வரலாறு என்பது வர்க்கப்போரே என்று கூறினார்.

எல்லாக் கருத்துகளும் கட்டமைக்கப்பட்டுள்ளன. அறம் - மறம், நன்மை - தீமை, நல்லது - கெட்டது என்ற எதிரெதிர் நிலையில் நாம் கருத்துக்களைக் கட்டமைக்கிறோம். அறத்திற்குள் மறமும் உண்டு. மறத்திற்குள் அறமும் உண்டு. நல்லவனுக்குள் கெட்டவனும், கெட்டவனுக்குள் நல்லவனும் இருக்கின்றான். எனவே அறம் - மறம் என்ற கருத்து ஒரு சார்பு நிலைக் கருத்து. அறம் - மறம் எனக் கட்டமைக்கப்பட்டதை உடைத்துப் பார்த்தால் ஏன் அப்படிக் கட்டமைக்கப்பட்டது என்பது தெரியவரும் என்பது இவர்களது வாதம்.

எல்லாச் செயற்பாடுகளிலும் அதிகாரம் உண்டு. எதனையும் கட்டுடைத்து அதிகாரத்தை இனங்காண வேண்டும் என்றதுடன் இலக்கியத்திற்குத் தானாக அர்த்தம் ஏதும் இல்லை. வாசகரே அதற்கு அர்த்தம் தருகிறார்கள் என்றார் தெரிதா. இவ்வகையில் **அடையாளத்திற்கும் தானாக ஏதும் அர்த்தம் இல்லை. மக்களே அதற்கு அர்த்தம் தருகிறார்கள் என்று நாம் கொள்ளலாம். இவ்வகையில் தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு, தமிழ் அடையாளங்கள் என்பன கட்டமைக்கப்பட்டவையே.** வரலாற்றின் தேவையையொட்டி கட்டமைக்கப்பட்ட இவை கட்டமைக்கப்பட்டும் மீள்கட்டமைப்புக்குள்ளாகியும் வந்துள்ளன.

## தமிழர் வரலாறு.

தமிழர் வரலாறு எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளதென முதலில் நோக்குவோம். தற்போதைய தமிழர் வரலாறு அரச வரலாறாகவே கட்டமைக்கப்பட்டுள்ளது. சேர, சோழ, பாண்டிய மன்னர் ஆண்டகாலம், பல்லவர் சோழர், நாயக்கர், பிரிட்டிசார் ஆட்சிக்காலம் என ஆளும் வர்க்க வரலாறே பெருமளவில் போதிக்கப்படுகிறது. இம்மன்னர்கள் புரிந்த போர்கள், பெற்ற வெற்றிகள், கட்டிய கோயில்கள், செய்த தானங்கள், அமைத்த நகரங்கள் என்பனவே வரலாற்றில் இடம்பெறுகின்றன. இத்தனைக்கும் பின்னணியில் சக்தியாக நின்ற மக்களைப்பற்றியோ, யுத்தங்களில் தம் உயிர்நீத்த வீரர்கள் பற்றியோ, பிரமாண்டமான கோயில்களைக் கட்டி எழுப்பிய லட்சோபலட்சம் மக்களைப் பற்றியோ, வரலாறு குறிப்பிடுவதில்லை. இன்று வரலாற்று எழுதியலில் பல புதிய சிந்தனைகள் முன்வைக்கப்படுகின்றன. கட்டி எழுப்பிய லட்சோபலட்சம் மக்களைப் பற்றியோ, வரலாறு குறிப்பிடுவதில்லை. இன்று வரலாற்று எழுதியலில் பல புதிய சிந்தனைகள் முன்வைக்கப்படுகின்றன.

அவற்றுள் ஒன்று வரலாறு தனி மனிதர்களின், பெரு மன்னர்களின் வரலாறாக மாத்திரம் எழுதப்படக் கூடாது என்பதாகும்.

மாறாக சமூகத்தை இயக்கும் உற்பத்தி, உறவு, உற்பத்திமுறை, பொருளாதாரக் காரணிகளால் கட்டி அமைக்கப்படும் சமூக அமைப்பையும் அதன் மாற்றங்களையும் காட்டுவதாக வரலாறு எழுதப்பட வேண்டும் என்பர் இச்சிந்தனையினர்.

இன்று வரலாறு அடிநிலை மக்கள் பார்வையிலும் எழுதப்படும் காலம் தோன்றியுள்ளது. இவர்கள் வரலாற்றின் கட்டமைப்பை உடைத்துப் புதிய கட்டமைப்பைத் தோற்றுவிக்க முயல்கின்றனர்.

இப்பின்னணிகளைத் தமிழர் வரலாற்றை அணுகும் போதுதான் அடையாளம் பற்றிய தெளிவான ஒரு பார்வையை நாம் பெற முடியும்.

புராதன காலத்தில் தமிழ் நாட்டில் **மங்கோலோயிட், ஓஸ்திரோலோயிட், நீக்ரோயிட்** எனப்பட்ட மானிடக் குழுக்களே வாழ்ந்தனர். திராவிடத்திற்கு முற்பட்ட புராதன திராவிட மொழியொன்றை (Proto Dravidian) இவர்கள் பேசினர்.

இவர்கள் பழைய கற்கருவிகளைக் கையாண்டனர். உணவு தேடும் வாழ்நிலையில் இருந்தனர். வேட்டையாடினர், மந்தை மேய்த்தனர்.

அடுத்து திராவிடர் தமிழ் நாட்டிற்கு வருகின்றனர். இவர்களே தமிழ் நாட்டுக்கு இரும்பையும், நீர்ப்பாசனத்தையும் புதிய வழிபாடுகளையும் (முருகன்) அறிமுகம் செய்ததுடன் மொழியையும் அறிமுகம் செய்தனர்.

சங்க காலத்தில் குறிப்பிடப்படும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற திணை ஒழுக்கங்களை நாம் புதிய பார்வையிற் புரிந்து கொள்ளவேண்டும்.

குறிஞ்சியில் வேட்டையாடி வாழ்ந்த மக்கள் முல்லையில் ஆடுமாடு மேய்த்து, மருதநிலத்தில் வேளாண்மை செய்து, நெய்தலில் கடல் கடந்து வியாபாரம் செய்து பரிணாம வளர்ச்சியினூடாக வளர்ந்த வரலாறாகவே நாம் இதனைக் கொள்ள வேண்டும்.

மருதநில வாழ்க்கையில்தான் நீர்ப்பாசனம் செழித்தது. செல்வம் பெருகியது. நிலைபதியாக மக்கள் இருக்க ஆரம்பித்தனர். அரசுகள் தோற்றம் பெற்றன. மூவேந்தர் உருவாகினர்.

இவ்வுருவாக்கத்தில் புராதன தமிழர்களும் திராவிடத் தமிழர்களும் இணைந்தனர். இவ்விணைப்பில் இணைய முடியாதோர் நாடோடிகளாக, காட்டுவாசிகளாக ஒதுங்கினர். ஏனையோர் பிற்படுத்தப்பட்ட வகுப்பிற்குள் ஒடுங்கினர். தமிழ் நாட்டில் இன்றும் வாழும் இருளர், தோடர் என்போரும் பிற்படுத்தப்பட்ட தலித்துக்களும் மிகப் புராதன தமிழர்களே என்பர்.

மருதநில வளர்ச்சியில் மன்னன் பிரதானம் பெற்றான். மன்னனுக்கு உதவியாக நிலவுடமையாளர்கள் நின்றனர். இவர்களே அரசின் மையமாக மாறினர். இவர்களுடன் மன்னர்கட்குப் புரோகிதராக மாறி யாகம் புரிந்து போரை ஊக்கிய பிராமணர்களும் வணிகம் செய்து பொருளீட்டிய வணிகரும் தம் நலன் கருதி அரசுக்குப் பக்கபலமாக நின்றனர். இவ்வண்ணம் அரசன், நிலவுடமையாளர், பிராமணர், வணிகர் என்ற பணமும், வசதியும் அதிகாரமும் படைத்த குழுவினரே அரசின் மையமாக அமைந்தனர். பொருளுற்பத்தியிலும் அரசமைப்பிலும் இவர்களே பிரதான பங்கு வகித்தனர்.

இந்த மையத்திற்கு ஓரமாக நாம் முன்பு சொன்ன தோடர், பறையர், இருளர் போன்ற மக்கள் வாழ்ந்தனர். இவர்களை நாம் விளிம்பு நிலை மக்கள் எனலாம். இவர்கள் அரசமைப்புடனோ, பொருளியல் உற்பத்தியுடனோ தொடர்பு ஏதும் இன்றி வாழ்ந்தனர்.

இவ்விருசாராருக்கும் இடைப்பட்ட மக்களும் இருந்தனர். நீர்ப்பாசன வசதிகள் அற்ற, நிலங்களில் சாகுபடி செய்த, வானம் பார்த்த பூமியை வைத்திருந்த தேவர்கள், கவுண்டர்கள் போன்றோரும் மையத்தில் வாழ்ந்த மக்களுக்கு ஏற்ற பாவனைப் பொருட்களை உற்பத்தி செய்து கொடுத்துப் பணம் பெற்ற கைவினைஞர்களும் அதற்குள் அடங்குவர். மையத்தின் அமைப்புடன் இவர்களுக்குத் தொடர்பிருந்தது.

இவ்வாறு மையத்தில் பலம் பெற்றிருந்தோர், அதிகார பலம் பெற்றோரை அண்டி வாழ்ந்த இடையில் இருந்தோர், எவரிலும் தங்காது ஓரத்தில் வாழ்ந்த விளிம்பு நிலையினர் என்று மையம், நடு, ஓரம் என்ற அமைப்புக்குள் தமிழர் சமூகத்தையும் வரலாற்றையும் அடக்கிவிடலாம்.

தமிழரின் கலை இலக்கியங்கள் யாவும் மையத்தையே அதிகம் பேசின. சங்க இலக்கியம், அற இலக்கியம், பக்தி இலக்கியம் கோயில்கள், கட்டிடங்கள், கலைகள், பண்பாடுகள் என மையத்தினுள்ளவையே பேசப்பட்டன.

**மையத்தினுள் இருந்தோரின் பண்பாடே தமிழ்ப் பண்பாடாக, மையத்தில் இருந்தோர் வளர்த்த கலைகளே தமிழ்க் கலைகளாக கட்டியமைக்கப்பட்டன. மையத்தவரின் அடையாளங்களே தமிழ் அடையாளங்களாகவும் காட்டவும் பட்டன.**

இப்பின்னணியில் தமிழ் வரலாற்றை அறிய முயற்சிப்போம்.

## தமிழர் வரலாறும் காலப்பகுதியும்.

தமிழர் வரலாற்றைப் பின்வரும் காலங்களுக்குள் அடக்குதல் புரிதலுக்குச் சுலபமாக இருக்கும்.

**1. கி.மு.200க்கு முற்பட்ட காலம்.**

தமிழர் உருவாக்கமும், குறுநில மன்னர்களும், திராவிடர் வருகையும், பெருநில மன்னர்களான சேர, சோழ, பண்டிய உருவாக்கமும் நடைபெற்ற காலம்.

**2. கி.மு. 200 - கி.பி. 600க்கும் இடைப்பட்ட காலம்**

பெருநில மன்னர்களின் வீழ்ச்சியும், களப்பிரர் ஆட்சியும், பிராமண மதத்தின் வீழ்ச்சியும், சமண பௌத்த மதங்களின் தோற்றமும், அறநூல்களின் தோற்றமும் எழுந்த காலப்பகுதி.

**3. கி.பி.600 - 900க்கும் இடைப்பட்ட காலப்பகுதி.**

களப்பிரர் வீழ்ச்சியும், பல்லவர் ஆட்சியும் ஏற்பட்ட காலம். சமண பௌத்த மதங்கள் பிராமண மதத்தால் வெற்றி கொள்ளப்பட்டு சைவம் வளர்ச்சியுற்ற காலம். வடமொழி ஆதிக்கம் ஏற்பட்ட காலம். பக்தி இலக்கியம் தோன்றியகாலம்.

**4. கி.பி.900 - 1200க்குமிடைப்பட்ட காலம்.**

பல்லவர் ஆட்சி வீழ்ச்சியுற்ற சோழர் ஆட்சி நடைபெற்ற காலம். சோழர் தென்னாசிய நாடுகளைத் தம் கீழ் வைத்திருந்த காலம். காவியங்கள் தோன்றிய காலம். சைவசித்தாந்தங்கள் எழுந்த காலம். கோயில்கள் பல கட்டப்பட்ட காலம்.

**5. கி.பி.1200 - 1800க்கும் இடைப்பட்ட காலம்.**

சோழர் வீழ்ச்சியடைய 2ஆம் பாண்டிய பேரரசு மதுரையில் உருவானகாலம். முஸ்லிம்களின் ஆட்சியின்கீழ் தமிழகம் வந்த காலம். முஸ்லிம்களுக்கு எதிராக நாயக்கர், மராட்டியர் எழுச்சி பெற்று தமிழ்நாடு நாயக்கர் மராட்டியரின் ஆட்சியின் கீழ் இருந்த காலம். பள்ளு, குறவஞ்சி போன்ற மக்கள் இலக்கியமும், முருகன், மீனாட்சி போன்ற தெய்வ வழிபாடுகளும் முன்னுக்கு வந்த காலம். மீனாட்சியம்மன் கோயில் முக்கிய கோயிலாக மாறிய காலம்.

**6. கி.பி.1800 - 2000க்கும் இடைப்பட்ட காலம்.**

மேனாட்டார் தமிழகத்திற்கு வந்தகாலம். கிறிஸ்தவமதமும் புதிய சிந்தனைகளும் தமிழ் நாட்டுக்கு வந்த காலம். கல்வி முறை மாற்றத்தால் சமூகத்தில் கீழ்நிலையிலிருந்தோரும் மேலுக்கு வரும் சந்தர்ப்பம் கிடைத்த காலம்.

7. கி.பி.2000க்குப் பின்னர்

இன்றைய நவீனயுக காலம். பெண்களும், அடக்கப்பட்டோரும் எழுச்சி பெறும்காலம். இலத்திரனியல் வளர்ச்சி பெற்ற காலம்.

மேற்குறிப்பிட்ட காலவரன்முறைக்கூடாக வளர்ந்து வந்த தமிழர் வரலாற்றில் வரலாற்றின் தேவைகருதி காலத்துக்குக் காலம் அடையாளங்கள் தோன்றியுள்ளன. அவை மாறியும் வந்துள்ளன. அவற்றை இனிப் பார்ப்போம்.

## வரலாறும் அடையாளங்களும்.

### கி.மு.200க்கு முன்னர்

கி.மு 200க்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டில் உணவு தேடும் நிலையில் தமிழர் வாழ்ந்தனர். அவர்கள் வேட்டையாடினர். மலைப்பகுதியில் வாழ்ந்தனர். அம்மலைக்குரிய பூ குறிஞ்சி ஆகும். பின்னாளில் அவர்கள் உணவு சேகரிக்கும் நிலைக்கு வளர்ந்தனர். வேட்டையாடிய மிருகங்களைப் பிடித்து வளர்த்தனர். அவற்றை மேய்த்துக் கொண்டு இடந்தோறும் அலைந்தனர். காட்டுப்பகுதியில் இவர்கள் வாழ்ந்தனர். காட்டுப் பகுதிக்குரிய பூ, முல்லை ஆகும். ஆடு மாடுகளை மேய்த்து வாழ்ந்த மக்கள் அதற்குணவாக பயிர் விளைவித்தனர். இக்கால கட்டத்திலே திராவிடரும் வந்து விடுகின்றனர். திராவிடர்கள் நீர்ப்பாசன முறை அறிந்தவர்கள். காடுகள் வெட்டபட்டு வயல்கள் உருவாகின்றன. நதிக்கரை ஓரங்களில் விவசாயம் செய்யப்படுகிறது. நாகரிகமும் உருவாகின்றது. நிலைபதியாய் இருந்த விவசாயம் செய்த இம்மக்கள் ஆற்றங்கரை ஓரங்களில் செழிப்பான வயல் நிலப்பகுதிகளில் வாழ்ந்தனர். வயல் நிலத்திற்குரிய பூ மருதம் ஆகும்.

சில மக்கள் கடற்கரை ஓரத்தில் வாழ்ந்தனர். மீன் பிடித்தனர். சிலர் கடல் கடந்து வாணிபம் செய்து பொருளீட்டினர். கடற்கரைப் பகுதிக்குரிய பூ நெய்தல் ஆகும்.

மழை இல்லாத வரட்சிக் காலத்தில் குறிஞ்சியும், முல்லையும் தம் இயல்பு இழந்தன. பசுமையை இழந்தன. மரங்கள் வாடின. நிலத்தின் தன்மையே மாறியது. அப்பகுதி வரண்டது. அங்கு வாழ்ந்தோர் உழைக்க வழியின்றிக் கொள்ளையடித்தனர். அவ்வரண்ட பகுதியில் பாலை மரமே வாடாமல் இருக்கும். எனவே பாலை நிலத்திற்கு பாலைப்பூ உரியதாயிற்று.

தொல்காப்பியர் நிலங்களை உலகம் என்றே அழைக்கிறார். மருதநில நாகரிகம் வளர்ச்சி பெற்ற காலத்தில் அல்லது தொல்காப்பியர் இலக்கணம் வகுத்த காலத்தில் நான்கு நிலங்களே இருந்தன. நானிலம் என்பதே வழக்கு. அவையாவன, மலையும் மலை சார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமும், கடலும் கடல் சார்ந்த இடமும், காடும் காடு சார்ந்த இடமும். நாலு இடங்களையும் நான்கு உலகம் எனக்கூறும் தொல்காப்பியர் ஒவ்வொரு நிலத்தையும் அவ்வவ் நிலத்திற்குரிய பூக்களால் அடையாளம் கண்டார். மலைப்பகுதி குறிஞ்சி நிலப்பூவாலும், முல்லைப் பகுதி முல்லைநிலப் பூவாலும்,

கடற்கரைப் பகுதி நெய்தல் நிலப் பூவாலும் வயல் நிலப் பகுதி மருத நிலப் பூவாலும் அடையாளம் காணப்பட்டன. ஒரு வகையில் இந்நிலங்களுக்கு அந்நிலப்பூக்களே அடையாளங்களாயின.

பாலைநிலம் உருவாவதைக்கண்டு அதற்கு பாலைநிலப்பூவை அடையாளமாகக் கண்டு நிலப்பிரிப்புகளை 5 நிலங்களாகப் பின்னர் கொண்டனர். பாலை வரண்ட நிலத்திற்கு அடையாளமாயிற்று. அவ்வவ் நிலத்தில் வாழ்ந்த மக்கள் இப் பூக்களையே தம் நிலத்தின், அந்நிலத்தில் வாழ்ந்த குழுவின் அல்லது மக்களின் அடையாளமாகக் கொண்டனர். அந்நிலத்திற்குரிய பூக்களைத் தலையிலோ, மார்பிலோ சூடித் தம்மை அடையாளப்படுத்தியபடி போரிலே கலந்து கொண்டனர். அப்பூக்களுக்குப் பிரதான இடமளித்தனர். இவ்வகையில் ஆரம்பத்தில் 5 நிலத்திலும் வாழ்ந்த தமிழர்களின் அடையாளமாகக் கொள்ளப்பட்டவை ஐந்து வகையான பூக்களே.

கி.பி. 200க்கு முன்னர் இந்த நான்கு நிலங்கள் மத்தியிலும் தமிழரிடையே போர்கள் நடைபெற்றன. மலைப்பகுதியில் வேட்டையாடி வாழ்ந்த தமிழர் ஆநிரை வைத்திருந்த காட்டுப் பகுதியில் வாழ்ந்த தமிழர்களின் ஆநிரைகளைக் கவர்ந்தனர். இப்போர் “வெட்சி” என அழைக்கப்பட்டது.

காட்டு நில மக்கள் மலைவாழ் மக்களின் படையெடுப்பை எதிர்கொண்டனர். எதிர்கொள்ளச் சென்ற போர் “வஞ்சி” என அழைக்கப்பட்டது. மருத நிலத்தில் வாழ்ந்த மக்கள் நிறைய உற்பத்திப் பொருட்களை வைத்திருந்தனர்.

தம் பொருளையும், மக்களையும் கோட்டை கட்டிப் பாதுகாத்தனர். கோட்டையைப் பிடிக்கும் போராக மருதநிலப் போர் அமைந்தது. இப் போர் “உழிஞை” என அழைக்கப்பட்டது.

அரசுகள் வளர்ச்சி பெற்ற பின்னர் கடற்கரை ஓரத்தில் களம் குறித்து இருநாட்டு மன்னர் படைகளும் மோதின. இப்போர் “தும்பை” என அழைக்கப்பட்டது.

இவ்வண்ணம் மக்கள் நிலமும் போரும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என அடையாளப்படுத்தப்பட்டது.

ஓயாத போரினாலும் மருதநில நாகரிக வளர்ச்சியினாலும் பரந்த தமிழகம் எங்கினும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. தமிழ் நாட்டின் மத்திய பகுதியான தஞ்சாவூர் பகுதியையொட்டி ஒரு அரசும், தமிழ் நாட்டின் தென் பகுதியான மதுரைப் பகுதியையொட்டி இன்னொரு அரசும், தென்னிந்தியாவின் மேற்குப் பகுதியையொட்டி இன்னொரு அரசும் உதயமாயின. முறையே இவ்வரசுகள் சோழ, பாண்டிய, சேர அரசுகள் என அழைக்கப்பட்டன. சோழர்கள் தமது அடையாளமாக புலிக் கொடியினைக் கொண்டனர். சேரர் தமது அடையாளமாக விற் கொடியினைக் கொண்டனர். பாண்டியர் தமது அடையாளமாக மீன் கொடியினைக் கொண்டனர்.

**குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை பூக்களின் அடையாளம் குன்றி புலி, மீன், வில் என்பன அவ்வப் பிரதேச தமிழ் மக்களின் அடையாளமாக உருவம்பெறுவதையும் காண்கிறோம்.**

குறுநில மன்னர்கள் அழிந்து அரசுகள் தோன்றுவது அன்றைய வரலாற்றுத் தேவை. முன்னேற்றத்தின் நாகரிக வளர்ச்சியின் அறிகுறி அது. காலத்தின் தேவையும் **வரலாறும் இங்கு பழைய அடையாளங்களை அழித்துப் புதிய அடையாளங்களை உருவாக்குவதைக் காண்கிறோம்.**

மூவேந்தர் தமிழ் நாட்டை ஆண்ட காலத்தில் மௌரியர் படையெடுப்பு ஏற்படுகிறது. வம்ப மௌரியர் அதாவது புதிய மௌரியர் என்று அகநானூறு இவர்களைக் கூறும். பின்னாளில் களப்பிரரால் இம் மூவேந்தர் ஆட்சி நிலை குலைகிறது. மௌரியர், களப்பிரர் போன்ற அந்நியரிடம் இருந்து விடுபடல் என்ற உணர்வு மூவேந்தர் ஒன்றாக வேண்டும். தமிழர் இணைய வேண்டும் என்ற உணர்வைத் தோற்றுவித்தது. சிலப்பதிகாரம் இதற்கான ஒரு குறியீடாகும். மூவேந்தர்களின் ஒற்றுமையை வலியுத்தும் காவியம் அது. சோழ நாட்டிற் பிறந்த கண்ணகி, பாண்டிய நாட்டில் வழக்குரைத்துச் சேர நாட்டில் தெய்வமாகிறாள். கடவுள் வாழ்த்துப் பாடலில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் வாழ்த்தப்படுகின்றார்கள்.

திருக்குறள் கூட ஒரு பேரரசு பற்றியே பேசுகிறது. படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற 6 அங்கங்களுடையதாக அரசு அமைய வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

அத்தகைய அரசே அந்நியரிடமிருந்து தமிழரைப் பாதுகாக்கும். **இக்காலத்தில் வில், புலி, மீன் தமிழர்களின் அடையாளமானதுடன்** செல்வாக்குடன் வாழ்ந்த சேரமன்னர்களின் விற் கொடி பிரதானப்படுத்தப்படுகிறது.

இமயம் வரை சேரர் படையெடுத்து வடபுல மன்னரை வென்று இமய மலையில் விற் சின்னம் பொறித்தமை கூறப்படுகிறது. ஏனைய சின்னங்களான புலியும், மீனும் கூட இமய மலையிற் பொறிக்கப்பட்ட கதையும் கூறப்படுகிறது. **வரலாற்றின் தேவை தமிழர்கட்கு இத்தகைய புதிய அடையாளங்களைக் கொண்டுவந்துவிடுவதைக் காண்கிறோம்.**

**கி.மு. 200க்கும் 600க்கும் இடையில்**

இக்கால கட்டத்தில் தமிழ் நாட்டுக்கு இரண்டு பெரும் சமயங்கள் வருகின்றன. சமண சமயத்தவரான களப்பிரர் நாட்டை ஆளுகிறார்கள். களப்பிரரைத் தமிழ் நாட்டுக்கு வெளியிலிருந்து வந்தவர்கள் அந்நியர் என்பர் ஒரு சாரார். களப்பிரர் தமிழ் நாட்டுக்குள் வாழ்ந்த விளிம்பு நிலை மக்கள் என்பர் இன்னொரு சாரார்.

நிலவுடைமையாளருக்கு எதிராக கிளர்ந்தெழுந்த சிறு சாகுபடி செய்யும் மக்களே களப்பிரர் என்பது ஆய்வாளர் முடிவு. நிலவுடைமையாளருக்கு பிராமண

மதம் சார்பாக நின்றது. 4 வருணப்பாகுபாடுகளைக் கூறிய அம்மதம் அரசரை சஷத்திரியராகவும் சந்திர, சூரிய குலத்தோன்றல்களாகவும் கூறின.

சமண பௌத்த மதங்கள் நால் வருணப் பாகுபாடுகளுக்கு எதிரானவை. அவற்றையே களப்பிரர் தம் மதமாகக் கொண்டனர்.

போர் வேண்டாம் எனவும் உயிர்க் கொலை தீது எனவும் இச்சமயங்கள் கூறின. அற, நீதி, ஒழுக்க நூல்கள் எழுந்தன. தொல்காப்பியம், சிலப்பதிகாரம் என்பன சமண சமயத்தவரால் எழுதப்பட்டவை என்பர். திருக்குறளைக் கூட சமண நூல் என்பர். பௌத்த மதம் தமிழ் நாட்டில் உச்சநிலையிலிருந்த காலம் இது. பௌத்த காப்பியமான மணிமேகலை தோன்றுகிறது. இவ்வண்ணம் இக்கால கட்டத்தில் தமிழ் தன்னைச் சமணத்துடனும் பௌத்தத்துடனும் அடையாளம் கண்டது. வச்சிரநந்தி என்ற சமணமுனிவர் தருமச்சங்கம் நிறுவினார். திராவிடச் சங்கம் என இது அழைக்கப்பட்டது.

சமணமும், தமிழும், பௌத்தமும், தமிழும் என தமிழ் இவ்விரு மதங்களுடனும் பிணைந்தது. இவ்வண்ணம் தமிழ் அடையாளம் மாறிவிடுவதனை இக்கால கட்டத்திற் காணுகிறோம்.

**கி.பி 600க்கும் 900க்கும் இடையில்.**

இக்கால கட்டத்தில் சமண பௌத்த மதங்களுக்கு எதிராகப் பிராமண மதம் தீவிர போர் நடத்துகிறது. இப்போரில் பிராமண மதம் தன்னைச் சைவமதமாகக் கட்டமைத்துக் கொள்கிறது. சமயப்போரில் சமண பௌத்தத்திற்கும் விளிம்பு நிலை ஆட்சியாளரான களப்பிரருக்கும் எதிராக நிலவுடமையாளரும் பிராமணரும் இணைகின்றனர். வடமொழி புராண இதிகாசக் கதைகள் தமிழ் மக்களுக்கு பெருமளவு அறிமுகமாகின்றன. காலப்போக்கில் அவை தமிழ் மயமாகின்றன. சமண பௌத்த பள்ளிகள் உடைக்கப்பட்டு அவை சைவக்கோயில்களாக்கப்பட்டன. இதுவரை வழிபாட்டில் பிரதான இதிகாசக் கதைகள் கூறிய வர்ணனைகளிலிருந்து சிவனும், திருமாலும் சிற்பிகளால் உருவாக்கப்படுகிறார்கள்.

"பச்சை மா மலைபோல் மேனியும் பவளவாயும், கமலச் செங்கணும் உடையவனாக" திருமால் வடிவமைக்கப்பட,

சிவன் "குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும் பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும், இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் உடையவனாய், ஆடும் சிவனாக'' வடிவமைக்கப்படுகின்றான்.

**பௌத்தமும், தமிழும், சமணமும், தமிழும் என்ற அடையாளம் மாறி சைவமும், தமிழும் வைணவமும் தமிழும் என்ற புது அடையாளங்கள் உருவாகின்றன.**

நிலவுடமையாளரின் முக்கிய சமயமான சைவத்தின் முழுமுதற் கடவுளான சிவன் தமிழ் அடையாளமாக உருவகிக்கப்படுகின்றான். அவன் தமிழோடிசை பாடலை ரசிப்பவனாக, தமிழ்க் கடவுளாகக் கட்டமைக்கப்படுகின்றான். கோயில் வழிபாடும், தேவாரங்களும், திவ்விய பிரபந்தங்களும், பண்ணும், ஆடலும் தமிழ் அடையாளங்களாகக் கூறப்படுகின்றன.

முக்திக்கு வழி அடைக்கும் தடைக்கற்களாக ஆடலையும், பாடலையும் சமணம் கூற சைவ, வைஷ்ணவ மதங்களே தம் கடவுள்களான சிவனை ஆடல் புரியும் இறைவனாகவும் விஷ்ணுவை இசை பொழியும் இறைவனாகவும் கட்டமைத்ததை நுட்பமாக நோக்க வேண்டும்.

இவ்வகையில் கூத்தும், இசையும் தமிழரின் அடையாளங்களாயின. கோயிலுடன் இசை இணைக்கப்பட்டமையினால் இவை தமிழரின் புனிதமான கலை அடையாளங்களாயின.

**கி.பி. 900க்கும் 1200க்கும் இடையில்**

முன்னைய காலகட்டத்தின் வளர்ச்சியாகவே இதனை நோக்குதல் வேண்டும். பல்லவர்காலம் நிலப் பிரபுத்துவத்தின் ஆரம்பகாலம் எனின் இக்காலம் நிலப் பிரபுத்துவத்தின் உச்சக்காலம் எனலாம்.

கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு சிங்காசனத்திலிருந்து செம்பியர்கள் ஆண்டதாகச் செப்பேடுகள் உரைத்த காலம் இது. சோழ மன்னர்களின் புலிக்கொடி தென்னாசிய நாடுகளிற் பட்டொளி வீசிப் பறந்த காலம் இது. அந்நிய நாடுகளின் செல்வங்களும் தமிழ் நாட்டில் உற்பத்தியாலும் வாணிபத்தாலும் வந்த செல்வங்களும் தமிழ் நாட்டில் நிறைந்த காலம்.

மையத்தில் வாழ்ந்த மக்களான நிலப்பிரபுக்களும் வணிகரும் பிராமணரும் செல்வபோகத்தில் வாழ்ந்த காலம் சைவமும் சமணமும் முக்கியமாகச் சைவம் உன்னத நிலைபெற்ற காலம்.

மன்னர்கள் சைவமன்னர்களாயிருந்தனர். ராஜராஜசோழன் தன்னைச் சிவபாதசேகரன் என்றே அழைத்துக் கொண்டான்.

மையத்தில் வாழ்ந்த குடும்பத்தினரும் செல்வம் மிகுந்தோறும் மகிழ்ச்சியில் வாழ்ந்தனர். போட்டி போட்டுக் கொண்டு கோயில்களைக் கட்டினர். தஞ்சைப் பெருவுடையார் கோயிலை இராஜஇராஜசோழன் கட்டினான். அக்கோயில் பற்றிய பல ஐதிகங்கள் உருவாகின.அதன் உச்சியில் வைத்த கல் பற்றிய கதைகள் உருவாக்கப்பட்டன. அக்கோயில் **பெரியகோயில்** என அழைக்கப்பட்டது. **தஞ்சைப் பெரும்கோயில் தமிழ்க் கட்டிடக்கலையின் அடையாளமாயிற்று.**

பல்லவ காலத்தில் நாயன்மார் நால்வரும் பாடிய சிவனின் திருக்கோலத்தைச் சோழர்காலச் சிற்பிகள் கல்லிலே செதுக்கினர். உலோகத்தில்

வார்த்தனர். வார்ப்புக் கலை பெருவளர்ச்சி பெற்ற காலம் சோழர்காலம். நடராஜரின் வடிவங்கள் பல வகைகளில் வார்க்கப்பட்டன. ஆடும் நடராஜர் சிலை முக்கியமாயிற்று. ஆனந்தத் தாண்டவம் பல முறைகளில் வார்க்கப்பட்டன. திருவாசியின் நடுவே சடைகள் விரிய மானும், அனலும் இருகை ஏந்த, அபயம் ஒருகை காட்ட, அருள் மறுகை காட்ட முயலகன் மீது பாதம் வைத்து, மறுபாதம் தூக்கியாடும் ஆனந்த நடராஜவடிவம் உருவ வார்ப்பின் உச்சநிலையை அடைந்தது.

**ஆடும் நடராஜனின் உருவச்சிலை சைவத்தின் அடையாளம் மாத்திரமன்றி தமிழரின் அடையாளமாகவும் மாறியது.** நம்முன்னோர் கூறியது போல மையத்தில் வாழ்ந்தோரால் உருவாக்கப்பட்டு மையத்திற்கு வாழ்ந்தோரால் போஷிக்கப்பட்ட இவையனைத்தும் அனைத்துத் தமிழ் மக்களின் கலைகளாகவும் கருதப்பட்டன.

**கி.பி. 1300க்கும் 1800க்கும் இடையில்.**

1300இல் சோழர் அரசாட்சி வீழ்ச்சியடைகிறது. அதைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் பாண்டியர் எழுச்சி ஏற்படுகிறது. 2ஆம்பாண்டியர் பேரரசு ஸ்ரீ மாற ஸ்ரீபல்லவனின் கீழ் உருவாகின்றது. தமிழ்க் கலாசாரத்தின் மையமாக மதுரை மாறியது. இக்காலத்தில் பாண்டிய அரசில் ஏற்பட்ட வாரிசுரிமைச் சண்டையை பயன்படுத்தி இஸ்லாமியர் தமிழ் நாட்டுக்குள் நுழைகிறார்கள். தொடர்ந்து ஏற்பட்ட இஸ்லாமியரின் படையெடுப்புக்கள் இந்து மதத்தவரை இறுக்கமாக்கின.

சோழர் காலத்தில் தஞ்சைப் பெரிய கோயில் பிரதானமானது போல பாண்டியர் காலத்தில் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் பிரதானமாகியது. திராவிடச் சிற்பக்கலை மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் உச்சம் கண்டது. அதன் பேசும் தூண்கள் பிரசித்தமாயின.

**மதுரை மீனாட்சியம்மன் கோயில் தமிழரின் அடையாளமாயிற்று.**

அந்நியப் படை எடுப்புக்களாலும் பிராமண ஆதிக்கத்தின் காரணமாவும் சைவமத எழுச்சியாலும் பின்னுக்குச் சென்றுவிட்ட மீனாட்சி, முருக வழிபாடுகள் முன்னுக்கு வந்தன. இவை இரண்டும் பண்டைய தமிழர் வழிபாடுகள். கொற்றவை என்றும் வேலன் என்றும் சங்ககாலத்தில் வணங்கப்பட்ட இவ்விரு தெய்வ வழிபாடுகளும் இக்காலத்தில் முன்னுக்கு வந்தன. முருகன் தமிழ் முருகன் ஆனான். மீனாட்சி தமிழ் மீனாட்சியானாள். இவை இரண்டும் மையத்தில் வாழ்ந்தோரால் மாத்திரமன்றி மையத்தில் வாழாதோராலும் வணங்கப்பட்டன. விளிம்பில் வாழ்ந்த குறத்தியை முருகன் மணந்தமையும் அம் முருகனின் தாய் மீனாட்சி என்ற கதையும் முருக வழிபாட்டையும் மீனாட்சி வழிபாட்டையும் விளிம்பு மக்களிடையேயும் கொண்டு சென்றது.

இவ்வண்ணம் தமிழ் அடையாளங்கள் மாறின. **முக்கியமாக முருகன் தமிழரின் அடையாளமாகினான்.** பிராமணருக்கு சமனாக வேளாளரும் மடங்கள் நிறுவினர். தமிழ் வளர்க்கும் கைங்காரியத்தை மடாலயங்கள் ஏற்றன. தமிழோடிசைபாடலும், சித்தாந்த சாத்திரங்களும் அங்கு பயிற்றுவிக்கப்பட்டன.

**மடாலயங்களும், சைவசித்தாந்தங்களும் தமிழ் அடையாளங்களாயின. பள்ளு, குறவஞ்சி நாடகங்கள் எழுந்தன. அவையும் தமிழ் அடையாளங்களாயின.** இவ்வண்ணம் இக்காலப்பகுதியில் மதுரை மீனாட்சியம்மன் கோயில் முருகன் என்பன சிறப்பான அடையாளங்களாகவும், மடாலயம், சைவசித்தாந்தம், பள்ளு, குறவஞ்சி என்பன ஏனைய தமிழ் அடையாளங்களாகவும் மேற்கிளம்பின.

இஸ்லாமியர் ஆட்சிக் காலத்தில் விஜய நகரப் பேரரசு தக்கணத்தில் இக்காலத்தில் உருவாகியது. முஸ்லிம்களின் இஸ்லாம்மதம் நால்வருணப் பாகுபாட்டை ஏற்காத மதம். உருவ வழிபாட்டை மறுதலித்த மதம். இக்கொள்கைகள் இரண்டும் வைதீக மதத்திற்குச் சவாலாயின. இதனால் இஸ்லாம்மதப் பரவலுக்கு எதிராக வைதீக மதத்தை நிலைநிறுத்த நோக்கி உருவாக்கப்பட்டதே விஜயநகரப் பேரரசு. அது ஒரு இந்துப் பேரரசு. இதை நிறுவியவர்கள் தெலுங்கர். இவர்களது ஆட்சியின்கீழ் தமிழ் நாடு வந்தது.

விஜயநகரப் பேரரசு இஸ்லாமியரால் அழிக்கப்பட்ட பின்னா் சிவாஜியின் தலைமையில் மராட்டியில் மராட்டியப் பேரரசு நிர்மாணிக்கப்படுகிறது. தமிழ் நாடும் மராட்டியரின் கீழ் வருகிறது.

தெலுங்கு நாயக்கரும் பின்னர் மராட்டியரும் தஞ்சாவூரையும் மதுரையையும் மையமாகக் கொண்டு தமிழ் நாட்டை ஆட்சிபுரிந்தனர். இவர்களது காலத்தில் தமிழ் நாட்டில் கர்னாடக இசை, பரதம் போன்ற கலைகள் பெருவளர்ச்சியுற்றன. கர்னாடக இசையின் மும்மூர்த்திகளாக தியாகராஜ ஐயரும் முத்துசாமி தீட்சிதரும் சியாமசாஸ்திரியும் ஆகிய மூன்று பிராமணர்களும் கட்டமைக்கப்பட்டனர். தமிழர் மத்தியில் இருந்த சாஸ்திரிய இசை கர்னாடக இசையாக இனம் காணப்பட்டது.

இவ்வகையில் **கர்னாடக இசை தமிழர் அடையாளமாயிற்று.** தஞ்சை அரசவைப் புலவர்களாக பொன்னையா, சின்னையா, வடிவேலு ஆகிய மூன்று நட்டுவனாரும் பழைய சதுர் ஆட்டத்தை ஒரு வடிவமைப்புக்குள் கொணர்ந்து பரதம் ஆக்கினர். **பரதம் தமிழர் அடையாளமாயிற்று.**

கர்னாடக சங்கீதமும், பரதமும் அரசவைக் கலைகள். மையத்தில் வாழ்ந்த அரசரும் பணம் படைத்தோருமே பெரும்பாலும் அதை ரசித்தனர். கூடிய நுட்பங்களை அவை கொண்டிருந்தமையால் பொதுமக்கள் அவற்றின் பால் ஈர்க்கப்படவில்லை.

பொதுமக்கள்பால் கர்னாடகத்தில் இருந்து வந்த யசஷகானமும், தெலுங்கு நாட்டில் இருந்து வந்த பாகவத மேளமும், திரௌபதி அம்மன் கோயில்களை மையமாகக் கொண்டு சடங்கு அரங்காக நிகழ்த்தப்பட்ட தெருக் கூத்தும் பிராதான இடம் பிடித்தன. மக்கள் திரண்டு அவற்றைப் பார்த்தனர். மையத்தில் வாழ்ந்த தமிழரின் அடையளமாகக் கர்னாடக சங்கீதமும், பரத நாட்டியமும் மேற்கிளம்பியதையொப்ப நடுவிலும் விளிம்பிலும் வாழ்ந்த சாதாரண தமிழ் மக்களது கலையாக யசஷகானம், பாகவத மேளம், தெருக்கூத்து என்பன கருதப்பட்டன. இவ்வாறு இக்கால கட்டத்தில் **கர்னாடக இசை, பரதம்,**

**யக்ஷகானம், பாகவதமேளம், தெருக்கூத்து என்பன தமிழ் அடையாளமாகக் கருதப்பட்டன.**

**1800க்கும் 2000க்கும் இடையில்**

1800க்குப் பின்னர் தமிழ்நாடு ஐரோப்பியரின் கீழ் வருகிறது. உள்நாட்டுப் பூசல்களைப் பயன்படுத்தித் தமது பிரித்தாளும் சூழ்ச்சியினால் பிரிட்டிசார் தமிழ் நாட்டின் அதிகாரிகளாயினர். ஆங்கில மொழியும், கிறிஸ்தவமும் தமிழருக்கும் அறிமுகமாயின.

மேற்கு நாட்டுப் பண்பாடு தமிழ் மயமாகியது. மேற்கு உடைகள், கட்டிடம், பழக்க வழக்கங்கள் என்பன தமிழ்ப் பண்பாட்டுடன் மெல்ல மெல்ல ஊறித் தமிழ்ப் பண்பாடாக, தமிழ் அடையாளமாக மாறின. எனினும் மேற்கு மையத்தை எதிர்த்த இயக்கங்களுக்கூடாக தமிழ் அடையாளங்கள் இக்கால கட்டங்களில் முன்வைக்கப்பட்டன. மேற்கு மயமாக்கத்தையும் அதனால் எழுந்த நவீன மயமாக்கத்தையும் எதிர்த்து தேசிய இயக்கங்கள் எழுந்தன. இந்தியத் தேசியம் என்ற பெரும் அடையாளத்தில் தமிழ் அடையாளமும் ஒன்றாயிற்று. பின்னர் தமிழ் தமக்குரிய அடையாளங்களையும் வலியுறுத்தும் போக்கும் எழுந்தது.

அந்நியருக்கு எதிராக எழுந்த இவ்வியக்கங்களை 5 பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

1. அந்நியருக்கு எதிராக சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட பிராமணியத் தலைமைத்துவம் கட்டமைத்த தமிழ் அடையாளம்.

2.. வேளாளத் தலைமைத்துவம் கட்டமைத்த தமிழ் அடையாளம்.

3. வேளாளர் அல்லாத தலைமைத்துவம் கட்டமைத்த (திராவிடர்) தமிழ் அடையாளம்.

4. அடிநிலை மக்களின் தனித்துவ தலைமைத்துவம்.

5. இடதுசாரிகளின் கட்டமைப்பு தலைமைத்துவம் கட்டமைத்த அடையாளம்.

பிராமணியத் தலைமை அந்நியருக்கு எதிராக வைதீகமதம் சார் கலைகளையும் மொழியையும், இலக்கியத்தையுமே தேசிய அடையாளமாக முன்வைத்தது. **வேதநெறிகள், இலக்கியங்கள், கர்னாடக இசை, பரதம் என்பன இவர்களால் தமிழ் அடையாளமாக்கப்பட்டு கட்டமைக்கப்பட்டன.**

பிராணர்களுக்கும் அவர்கள் முன்நிறுத்திய தமிழ் அடையாளங்களுக்கும் மாறாக நான்கு விதமான எதிர்ப்புக்கள் கிளம்பின.

| | |
|---|---|
| ஒன்று. | வேளாளர் எழுப்பிய எதிர்ப்பு. |
| இரண்டு. | வேளாளர் அல்லாத இடைப்பிரிவினர் எழுப்பிய எதிர்ப்பு. |
| மூன்று. | தலித்துக்கள் எனப்பட்ட சமூகத்தின் கடைப்பிரிவினர் எழுப்பிய எதிர்ப்பு. |
| நான்கு. | பிராமணர் தொடக்கம் தலித்துக்கள் வரையுள்ள அனைவரையும் உள்ளடக்கிய இடதுசாரிகள் எழுப்பிய எதிர்ப்பு. |

வேளாளர் கர்னாடக இசைக்கு மாறாக தமிழ்ப் பண்ணிசையை தமிழிசையாகத் தமிழ் அடையாளமாகக் கண்டனர். மடலாயங்களும், தமிழ்க் கோயில்களும் சைவமும் என அவர்கள் தமிழ் அடையாளத்தைக் கட்டமைத்தனர். பெரியபுராணம், கந்தபுராணம் ஏனைய புராணங்கள், தேவார திருவாசகங்கள், சைவசித்தாந்தங்கள் என்பன தமிழரின் அடையாளம் என இவர்களாற் கட்டமைக்கப்பட்டன.

இவர்களுக்கு எதிராக எழுந்த திராவிடக் கட்சியினர் முக்கியமாக பிராமணரும் வேளாளரும் அல்லாத உயர் வகுப்பினர் **சமயம் சாராத இலக்கியங்களை தமிழர் அடையாளமாகக் கட்டமைத்தனர்.** சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம் என்பனவற்றை இவர்கள் தமிழர் அடையாளமாக் கண்டனர். பிராமணர் கட்டமைத்தவற்றை இவர்கள் ஒதுக்கியதுடன் கந்தபுராணம், கம்பராமாயணம், பெரியபுராணம் என்பன தமிழர் அடையாளத்தை அழிக்க வடவர் செய்த சூழ்ச்சி என்று கூறியதோடமையாது தமிழரைத் தாழ்த்தும் அவ்விலக்கியங்களை நெருப்பு வைத்துக் கொழுத்தும் போரில் ஈடுபட்டனர். இராமன், பிள்ளையார் விக்கிரகங்கள் தமிழ்க் கலாசாரத்திற்கு மாறானவை என்றுகூறி அச்சிலைகளுக்குச் செருப்பாலடித்து ஊர்வலம் நடத்தினர்.

பிராமணர்கள் தமிழ்க் கலாசாரத்தைச் சிதைப்பவர்கள் என்று கூறி பிராமணர்களின் சின்னமான குடும்பி அறுப்புப் போரிலும் ஈடுபட்டனர்.

இவ்வண்ணம் இவர்கள் பிராமணர் கட்டமைத்த சமஸ்கிருத தமிழ் அடையாளத்தையும் வேளாளர் கட்டமைத்த சைவத் தமிழ் அடையாளத்தையும் எதிர்த்து **சமய சார்பற்ற ஒரு தமிழ் அடையாளத்தைக் கட்டமைத்தனர்.**

வடவர் தமிழ் நாட்டில் புக முன்னர் ஆக்கப்பட்ட சங்க இலக்கியங்களும், சமய நெறி சாராத திருக்குறளும் இவர்கள் பார்வையில் சரியான தமிழ் அடையாளங்கள் எனக் கட்டமைக்கப்பட்டன.

திராவிட இயக்கம், பிராமணர் வேளாளர் அல்லாத ஏனைய சாதி மக்களிடையே பெரும்பாலன உறுப்பினர்களாகக் கொண்டிருந்தது. இந்நிலையில் **அயோத்திதாச பண்டிதர் இரட்டை மலை ஸ்ரீனிவாசன்** போன்றோர் தமிழ்ச் சமூக அமைப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட தலித் மக்களைப் பற்றிப் பேசினர். அவர்கள் வாழ்க்கை, அவர்கள் முன்னேற்றம் பற்றிய குரல்களும் எழுந்து ஒலிக்க ஆரம்பித்தன.

பிராமணிய வேளாள, வேளாள அல்லாத தமிழ் அடையாளங்களுக்கூடாக இக்குரல் அனுங்கலாக ஒலித்தது. அவர்களும் தமது அடையாளங்களைத் தமிழ் அடையாளமாகக் காட்டினர். தமதுபறை, தமது பாடல்கள், ஆடல்கள் என்பனவற்றையும் பற்றி அவர்கள் பேசினர். எனினும் அக்கால கட்டத்தில் அக்குரல் பெரும் குரலாக எழவில்லை. எனினும் தமிழ் அடையாளத்தின் இன்னொரு திசையையும் இது காட்டியது.

இடதுசாரி இயக்கத்தில் பிராமணர் தொடக்கம் தலித்து வரை அனைவரும் இருந்தனர். மாக்ஸியம் வரலாற்றையும் கலை இலக்கியங்களையும் வேறு விதமாக அணுகியது. தமிழ் இலக்கியத்திலும் தமிழ்க் கலைகளிலும் கூறப்படும் வர்க்கப் போரை அடக்கப்பட்டோரின் குரல்களை, **மானிட நேயத்தை, சமத்துவத்தை இவர்கள் தமிழ் அடையாளமாகக் கண்டனர்.** இவ்வகையில் இளங்கோ, வள்ளுவர், தேவாரம் பாடியோர், கம்பர், பாரதி என்போர் கண்ட மானுடம் இவர்களினால் தமிழ் அடையாளம் என்று கட்டமைக்கப்பட்டது.

**கி.பி. 2000க்குப் பின்னர்.**

இன்று நாம் தகவல் யுகத்தில் வாழ்கிறோம். உலகமயமாக்கம் நாடுகளை ஒரு கைக்குள் கொணர்ந்து விட்டன. தொடர்பு சாதனங்கள் நம்முன் ஒரு மாய உலகை விரித்து வைத்துள்ளன. முதலாளித்துவம் இன்று உலகை ஆள்வது தொடர்பு சாதனங்களால்தான்.

உலக மயமாக்கம் அனைத்துத் தனித்துவங்களையும் அழித்து புதிய அடையாளங்களைக் கட்டமைக்கிறது. இந்நிலையால் அடையாளத்திற்கான மூர்க்கம் பல திசைகளிலிருந்து எழுகிறது.

அனைத்து அதிகாரங்களையும் எதிர்க்கும் பின் நவீனத்துவம் இன்று ஒரு சிந்தனை முறையாக உலகை வலம் வருகிறது. விளிம்பு நிலை மக்கள் ஆய்வு (Subaitern Sudies) இன்று முக்கிய ஆய்வாக மாறியுள்ளது. இதன் காரணமாக விளிம்பு நிலை மக்கள் தமது அடையாளங்களை உரத்துப் பேசுகின்றன. இவர்களுள் இருசாரார் தமிழ் நாட்டில் முக்கியமானவர்கள். ஒருவர் தலித்துகள். மற்றவர்கள் பெண்கள்.

20ஆம் நூற்றாண்டில் அனுங்கியொலித்த தலித்குரல் இப்போது ஓங்கி ஒலிக்கிறது. தலித் பார்வையில் தமிழர் வரலாறு எழுதப்படுகிறது. இதுவரை ஆண்ட பரம்பரையினரது வரலாறாக கட்டமைக்கப்பட்ட தமிழர் வரலாறு இப்போது அடக்கப்பட்டோரது வரலாறாக எழுதப்படுகிறது. தலித் மக்களது இசை, கலை, வாய்மொழி இலக்கியம், பண்பாடு என்பன தமிழரது உண்மையான அடையாளம் என வலியுறுத்தப்படுகிறது.

திராவிடர் வருமுன் வந்த ஆதித்திராவிடர் அவர்களே எனவும் அவர்களது பண்பாடே உண்மையான தமிழ்ப் பண்பாடு எனவும் கட்டமைக்கப்படுகிறது.

பெண்களின் எழுச்சியும் தமிழர் அடையாளத்தை வேறு திசைகளுக்கு இழுத்துச் செல்கின்றது. வரலாற்றில் அதிக இடம் பெறாத சங்ககால **ஔவை, காரைக்கலாம்மையார், ஆண்டாள் என்போர் தமிழ்ப் பெண்களின் அடையாளங்களாக்கப்படுகின்றனர்**. பெண்ணைப் பற்றித் தமிழ்ப் பண்பாட்டுக் காவலர் வைத்த தமிழ் அடையாளங்களுக்கு மாற்றீடாக இவர்கள் சமூக அமைப்பை மீறிய கேள்வி கேட்ட இப்பெண்களை அடையாளமாகக் காட்டுவதன் மூலம் இன்னொரு விதமாக தமிழ்ப் பெண் அடையாளத்தைக் கட்டமைக்கும் முயற்சியில் பெண்ணிய ஆய்வாளர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

உலக மயமாக்கல் பின் நவீனத்துவ வருகை, விளிம்புநிலை மக்கள் ஆய்வு என்பவற்றின் வருகை காரணமாக சமூகத்தையும் அதன் இயங்கு நிலையையும் கட்டுடைத்துப் பார்க்கும் போக்கு உருவாகியுள்ளது.

கட்டமைப்பில் மையத்திலுள்ளோரின் பண்பாடே தமிழ்ப் பண்பாடாக கட்டமைப்பது உணரப்படுகிறது. மையத்திலுள்ள தமிழ்ப் பண்பாடு மாத்திரமன்று நடுவிலும் விளிம்பிலும் வாழும் தமிழரிடையேயும் தமிழ்ப் பண்பாடுள்ளது என்று கண்டறியப்பட்டு தமிழ் அடையாளம் அல்லது தமிழ்ப் பண்பாடு ஒன்றல்ல. அது பல என்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இதனால் தமிழ் அடையாளம் ஒன்றல்ல பல என்ற அபிப்பிராயங்கள் இக்கால கட்டத்தில் உருவாகியுள்ளன.

**தொகுப்பு.**

இதுவரை கூறியவற்றிலிருந்து வரலாற்றுக்கூடாக அடையாளங்கள் தோன்றிமையும் அவைமாறி வந்தமையும் தெளிவாகின்றது.

ஆரம்பத்தில் குறிஞ்சி, முல்லை எனப் பூக்கள் அடையாளமாயின. பின்னர் வில்லும், கயலும், புலியும் தமிழர் அடையாளங்களாயின. பினனர் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் அதனுடன் சேர்ந்த சமணமும் பௌத்தமும் அடையாளங்களாயின. அதற்கும் பிறகு தஞ்சை இராஜேஸ்வரமும் ஆனந்த நடனமிடும் சிவனும் தமிழர் அடையாளமாயின. அதற்கும் பிறகு தஞ்சை இராஜேஸ்வரமும் ஆனந்த நடனமிடும் சிவனும் தமிழர் அடையாளமாயின. அடுத்து மீனாட்சியம்மன் கோயிலும் முருகனும் பள்ளு குறவஞ்சி நாடகங்களும் மடலாயங்களும் சைவ சித்தாந்தமும் தமிழ் அடையாளமாயின. மாராட்டிய, நாயக்கர் ஆட்சியில் கர்னாடக சங்கீதமும் பரதமும் தெருக்கூத்தும் தமிழ் அடையாளமாயின.

ஐரோப்பியர் வருகையின் பின் சிலம்பும், குறளும் தமிழர் கண்ட முற்போக்குக் கருத்துக்களும் மரபு மீறிய ஔவையும், ஆண்டாளும், காரைக்காலம்மையாரும் தமிழ் அடையாளமாயின. தலித்துக்கள் எழுச்சி பெற பிற்பட்டோரின் கலைகளும் பறையும், பாடலும் தமிழ் அடையாளமாக்கப்படுகின்றன. இன்று தமிழ் அடையாளம் என்பது ஒன்றல்ல. அது பல என்ற கருத்தே வலுவடைந்து வருகிறது.

## அனர்த்தம்

தேடித் திரிகிறேன் தேடித் திரிகிறேன்
அடைந்ததை யெல்லாம் துளவித் துளவி
அநுபவித்ததை நினைத்து நினைத்து
இழந்து விட்டதை அலசி அலசி
இருக்க வந்ததை கணித்துக் கணித்துத்
தேடித் திரிகிறேன் கிடைக்கவில்லை
தேடுவ தெதுவோ தெரியவில்லை

நாளை கிடைக்கும் என்று நம்பினேன்.
நாட்கள் நாளையாய் வருடமாகின.
நேற்றைய நினைவுகள் நெஞ்சில் மாய்ந்தன
நேற்றுகள் மாறின, நேற்றிலும் இல்லைதான்
காலம் காட்டிய மாய வித்தைகள்
கருத்தில் நின்றன மாறின, தேய்ந்தன.
என்று, எங்கு யாரைக் கேட்பேன்
எதனைத் தேடித் திரிகிறேன் என்று.

## வெளிரங்கம்

நமது இரகசியங்களை மூடி மறைத்து
இந்தச் சமூகத்தின் நல்லவர்களாய்
நாம் இருந்தோம்.

அபூர்வமான நமது ஆசைகளுக்கு
விலங்கிட்டு அடிமைகளாகி
இந்தச் சமூகத்தின் சுதந்திர புருஷர்களாய்
நாம் இருந்தோம்.

நாறிப்போன நமது சமூகத்தின்
கௌரவத்தை மதித்து நமது தாபங்களை
நாம் கொன்றிருந்தோம்.

நமது இலட்சியங்களை அவர்கள் இருட்டுக்கு
ஒளியேற்ற நமது வேகங்களனைத்தையும்
நாம் மறைத்திருந்தோம்.

நம்மை நல்வர்களாக்கி அவர்கள்
இருட்டிலேயே இருந்தார்கள்.

நாமும் நல்லவர்களென்று
இருட்டில் இருக்கிறோம்.

## துயரம்

நீ
என்னைப்
பிரிந்திருந்த போது
என்னில் எதனையோ
நான்
தொலைத்து வந்தேன்
பின்னர்
ஒருநாள்
நீ சேர வந்தபோது
தொலைத்ததை
மீளப் பெறாமலேயே
நான்
சேர்ந்தேன்.

## அஞ்சலி

நான்,
தரையில் நடக்க
கால் கொண்ட மனிதனாய்ப்
பிறந்து வந்தேன்
பின்னர்,
நீரைக் கடக்க
கை கொண்ட மனிதனாய்
இருக்கக் கண்டேன்.

நான்,
மண்ணில் ஊர
வயிறு கொண்ட மனிதனாய்ப்
பிறந்து வந்தேன்
பின்னர்
விண்ணில் உலவ
அறிவு கொண்ட மனிதனாய்
இருக்கக் கண்டேன்

இனி,
ஒளியில் கலக்க
அருள்கேட்ட மனிதனாய்ப்
பணிந்து நின்றேன்
பர,
வெளியில் கலக்க
வரம் கேட்ட மனிதனாய்
வணங்கி நின்றேன்.

இறைவா
ஞானப் பரஞ்சோதியே!
என்னை
இருளை அறுத்த மனிதனாய்
வாழச் செய்.
உன்னில்,
உயிரை அழித்த மனிதனாய்
உயர்ந்து நிற்பேன்.

- **வேதாந்தி**

## பிடிவாதங்கள்

கணக்கைக் கொடுத்தார் செய்து பார்த்தேன்
கிடைத்த விடையில் திருப்தியில்லை.

வழிகளை, முறைகளை மீட்டிப் பார்த்தேன்
அனைத்துமே சரியாய் தெரிந்தன: ஆயினும்-

விடையில் எனக்குத் திருப்தியில்லை
வேறோர் விடைதான் திருப்தியளிக்கும்

ஆதலால் மீண்டும் செய்துபார்த்தேன்
அந்த விடைதான் கிடைத்தது மீண்டும்.

மீண்டும் செய்தேன் தொடர்ந்தும் செய்தேன்
வேறோர் விடைக்காய்ப் பிரார்த்தனை செய்தேன்

ஆயினும் பழைய விடையே கிடைத்தது
அதனை விடுத்து விடை வேறில்லை

முறைகளை மாற்றி வழிகளை மாற்றி
தாளை மாற்றி பேனையை மாற்றி

இடத்தை மாற்றி பொழுதை மாற்றி
இருந்தும் எழுந்தும் நடந்தும் படுத்தும்
செய்து பார்த்தேன் பலிக்கவேயில்லை
இந்த விடைதான் திரும்பவும் கிடைத்தது
இந்த விடையில் திருப்தியே இல்லை
இதுதான் விடையெனில் விரும்பவும் மாட்டேன்

எல்லாவற்றையும் மாற்றிப்பார்த்தேன்
எல்லோரிடமும் கேட்டுப்பார்த்தேன்
அனைவரும் இதுவே விடையெனச் சொன்னார்
ஆனால் எனக்கதில் திருப்தியே இல்லை

எனக்குத் திருப்தி தருமவ் விடையை
எங்கெல்லாமோ தேடித் திரிந்தேன்.

தெருவில் சென்ற பைத்தியமொன்று
கணக்கை மாற்றச் சொல்லிச்சென்றது.

ஆஹா! அற்புதம்! அதுதான் இனிவழி!
கணக்கை மாற்றிப் பார்ப்பதன் மூலமே
எனக்குத் திருப்தி தரும்விடை வரலாம்.

திருப்தியைத் தந்திடும் விடையை வைத்து
பின்னால் நோக்கிப் படிகளை எழுதி
கணக்கை மாற்றினேன் திருப்தி வந்தது.

கணக்கில் தானே தவறு இருந்தது
என்தன் விடையில் தவறே இல்லை.
இதுவே தான்நான் நாமே தான்நான்

## கூத்து

நீ ஆட்டும் நாடகத்தில்
நான் ஆடும் வேடத்தில்
என்னை நடிக்க வைத்தாய்.

என்னைவிடப் பொருத்தம்
இல்லாமல் போனாயோ!

என்னில் எது கண்டு
என்னை நியமித்தாய்!

என்னை எது வரைக்கும்
இங்ஙனமாய் ஆட்டிவைப்பாய்!

நான் விழையும் வேடத்தை
என்றெனக்கு நீ கொடுப்பாய்!

நீ ஆட்டும் நாடகத்தை
நான் பறித்து நான் ஆட்டி
உன்னை நடிக்க விட்டு
உன்னை உணர்த்துவிக்கும்
வேடம் தான் என் விருப்பம்
வேறு விருப்பமில்லை.

ஆட்டுவதும் நீயாகி
ஆடுவதும் நீயென்றால்
நானேன் இடைபுகுந்தேன்?
நானேன் தனித்து விட்டேன்.

உன்னோடே ஒன்றாகி
உன்னைப் பிரியாது
ஆட்டிடவும் ஆடிடவும்
ஆசை எனக்குண்டு.

சம்மதமா சொல்லு
சரியென்றால் கூட்டுக்குச்
சேர்ந்தொழுங்காய் செய்வோம்.

'சேர்ப்பதற்கும் இஷ்டமில்லை'
என்றால் எனக்கு
என்ன வழி பண்ணிவைத்து
உள்ளாய் அதைச் சொல்லு.

உண்மையில் நான் நல்லாய்
ஆடிக் களைத்து விட்டேன்
ஆடும் கால் சோர்ந்ததுவே.

இந்நிலையில் என்னை
இனி ஆடச் சொல்லாதே
இவ்வேடத்தோடே
இனி ஆட வைக்காதே.

வேடத்தை மாற்றி
வேறெதுவும் வேலையில்லா
வேடமொன்று தா போதும்
வேறொன்றும் வேண்டேனே!

- வேதாந்தி



# நயினாதீவு

## ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய மரபுவழி அறங்காவலர் சபைத் தலைவர்

## திரு.ஆ.தியாகராஜா அவர்களுடன்

# நேர்காணல்.

**கேள்வி:-** தங்களின் ஆன்மீக வாழ்வுபற்றிக் கூறுங்கள்.

**பதில்:-** கருவிலே திருவுடைய பரம்பரை எனது, பூர்வீகம். நயினை ஸ்ரீ நாகபூஷணியைப் பூசித்து, பரிபாலித்த பட்டர் பரம்பரையில், யான் முப்பத்து எட்டாவது வழித் தோன்றல். ஆலய பரிபாலகர், சமய நூல்களிற் பாண்டித்தியம் பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்பதற்கு எனது பூர்வீக உறவினர் அனைவரும் யாழ். குடா நாட்டில் நாவலர் பெருமான் காலத்தில் தீவகத்தில் அவர் ஆற்றிய பணியைச் செய்து வந்தார்கள். எனது ஆரம்பக் கல்வி முதல் ஆசிரிய புகுமுக வகுப்பு வரை கல்வி புகட்டிய ஆசான்கள் எம்மை நல்லபடி வழி நடத்தினார்கள், நயினைச் சுவாமியார், நல்லைநகர் யோகர் சுவாமிகள், ஈழத்தில் ஓர் இல்லற ஞானி என்று போற்றப்பட்ட நயினை இராமச்சந்திரனார் போன்றோரின் பரிச ஆசியும், அரச கடமையில் இருந்த 40 வருடங்களில், ஏற்பட்ட சான்றோர் சங்கமமும் தொண்டு செய்யக் கிடைத்த சூழ்நிலைகளும், என்னை மட்டுமல்ல என் உடன் பிறப்புக்களும் என்னைப் பார்த்து தம்மையும் ஆன்மீக வாழ்வில் இணைத்துக் கொள்ளத் தூண்டிவிட்டது. இந்த வகையில் 1976ஆம் ஆண்டு முதல் அறங்காவலனாக என்னை ஆட்கொண்ட அன்னை தன் பணிகளைத் தலைமைதாங்கிச் செய்யும் படியாக 1992இல் பணித்தார். அன்று முதல் அவள் அடியே சரணாக நின்று பணிபுரிகின்றேன். புத்தளம், அனுராதபுரம் போன்ற இடங்களில் அடியேனால் தொடங்கி வைக்கப்பட்ட பல பணிகள் சுடர் விட்டுப் பிரகாசிப்பதைக் காணும் போதும், பத்திரிகைகளில் அவற்றின் செயற்பாடுகள் பற்றி வெளிவரும் போதும் மனம் குளிர்கின்றேன். புகழ் பூத்த புராண வித்தகர்களுடன், இணைந்து புராணங்கள் படித்தும், பயன் சொல்லியும் வரக்கிடைத்த பாக்கியம் எனக்கு கொழும்பு, அனுராதபுரம், புத்தளம், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிற் கிடைத்தது. தற்போது என் தாயின் சன்னிதியில் இப்பணி தொடர்கின்றது.

என் துணைவியும் இந்தத் துறையில் ஆர்வமுடையவராக இருப்பது எனக்கு மேலும் உறுதுணையாக அமைந்தது. என் பணியை ஆசீர்வதிப்பது போல் நல்லை ஆதீனத்தில் 25.08.2003இல், திருவாவடுதுறை குரு மகா சன்னிதானம் சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் தமது திருக்கரத்தாற் பட்டாடைபோர்த்தி நீறிட்டுப் பணி தொடரட்டும் என்று ஆசீர்வதித்தார். எனக்குக் கிடைத்த பெரும் பேறு.

**கேள்வி :- நாட்டில் அமைதிக்குத் தங்களைப் போன்ற ஆன்மீக வாதிகளின் பங்களிப்பு எப்படி அமைய வேண்டும் என்று எண்ணுகின்றீர்கள்?**

**பதில் :-** நோயுற்றவனுக்கு எப்படி வைத்தியனின் சேவை அவசியமாக உள்ளதோ இதே போன்று, தற்போதைய நாட்டின் நிலைக்கு, ஆன்மீகத்தோடு தொடர்பு கொண்டவர்கள், தமது எழுத்தாலும், உள்ளன்போடு கூடிய அறிவுரைகளாலும் ஓரளவு நெறிப்படுத்த லாம். எனினும் சேவை மூலம், மாறுபாடான சிந்தனை கொண்டவர்களிடையே அவர்கள் புரியும் படியான மொழியில் நிலைப்பாட்டை விளக்கி உரையாடும் போது, அவர்களிடம் பெரிய மனமாற்றத்தை ஏற்படுத்த முடியும். இந்த வகையில், என்னால் ஆன பணியை நான் செய்து வருகின்றேன். குறிப்பாக தென் இலங்கையில் இருந்து வரும் பெருபான்மை மக்களுடன் அவர்கள் மொழியில், அவர்கள் புரியும் படியாகப் பேசும் போது ஓரளவு உண்மையை அவர்கள் உணர்கின்றார்கள். இது எனக்குக் கிடைத்த ஒரு நல்ல சந்தர்ப்பம். இதை அவர் களின் எழுத்து மூலமான கடிதங்கள் மூலமும் என்னால் அறிய முடிகின்றது.

**கேள்வி :- ஆன்மீகத் தேடல் மக்களிடையே வளர எப்படியான பணிகள் தேவை என எதிர்பார்க்கின்றீர்கள்?**

**பதில் :-** ஆன்மீகத் தேடல் என்றால் அது சந்தையில் வாங்கும் பொருள் அல்ல. இது அன்றாட வாழ்வியலில், பெற்றதாய் தன் குழந்தை க்குப் பால் ஊட்டும் போதும், உணவு ஊட்டும் போதும் ஊட்டப்படவேண்டியதொன்று. இந்த நிலை இப்போ மிகவும் அருகி விட்டதால் இப்படியான கேள்விகளும் எழுகின்றன. நிறைவு உடைய தாயால் தான் தன் பிள்ளைகளை நல்ல குடி மகனாக ஆக்க முடியும். "ஈன்று புறம் தருதல் என் தலைக் கடனே" என்ப தோடு தாயின் கடமை இந்தக் காலத்தில் முடிந்து விடுகின்றது. பின் பிள்ளை சான்றோனாக வருகின்றானா என்பதும் வேண்டாதவனாக வருகின்றானா என்பதும் புறநிலைச் சூழ்நிலைகளால் அமைந்து விடுகின்றன.

ஐந்தில் வளையாதது எப்படி ஐம்பதில் வளையும். ஆன்மீக அறிவுடைய ஆசிரியர், இல்லை யென்றே கூறும் அளவிற்கு நிலைமை மாறிவிட்டது. நவீன தொடர் சாதனங்கள் ஊடகங்களின் செயற்பாடும் இந்தவிடயங்களில் மிகவும் குறைவே. வெளிவரும் வெளியீடுகளிலும் காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஆன்மீகக்கருத்துக்கள் வருகின்ற போதும் நவீன கல்வித்திட்டத்தால் ஆன்மீக நெறி வலுவிழந்தே காணப்படுகின்றது. ஓரளவாகிலும் சமய ஆசாரியர்கள், சமய பீடங்கள், ஆலயங்கள் ஒருமித்த ஒரு அமைப்பாகச் செயற்பட்டால் மக்களிடையே ஆன்மீக அறிவை ஓரளவாகிலும் வெளிக்கொண்டுவர முடியும் என்பது என் கருத்தாகும். முதலில் கலாசாரச் சீரழிவு எம் சமய நெறி முறைகளை மாற்றி அமைப்பதற்கு இடம் ஏற்படாத வகையில் விழிப்பாக இருத்தல் அவசியம்.

**கேள்வி :- தங்கள் ஆலயத்தின் சமூக சேவை பற்றிக் கூறுங்கள்.**

**பதில் :-** அடியார்களுக்கு நித்திய அன்னதானப் பணியை ஆரம்பித்து மிகச்சிறப்பாக நாள் தோறும் இத்தொண்டு நடைபெற்று வருகின்றது. மேலும் எமது கோவில் வளாகச் சூழ்நிலையும், நீர் வளமும் பிறவளமும் பெரிய அளவில் சமூகத் தொண்டைச் செய்வதற்கு ஏற்றபடியாக இல்லாதபடியால். யாழ். குடாநாட்டிலும், வன்னிநிலப்பரப்பிலும் அமையப்பெற்ற பராமரிப்பு அமைப்புக்கள் ஊடாக நிதி உதவிகளையும் பிற உதவிகளையும் செய்து வருகின்றோம்.

**கேள்வி:- உலக நாயகியாகிய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் பல்லின மக்களையும், ஈர்க்கும் இரகசியம் தான் என்ன?**

**விடை:-** அண்ட கோடிகளையெல்லாம் ஈன்ற அன்னை, எழுந்தருளி இருக்கும் அமைவிடச் சூழல், அன்னையின் ஆதி அந்தம் அறிய முடியாத தோற்றுவாயும், தோற்றமும், தேவி பாகவதம், தேவி பராக்கிரமம் போன்ற நூல்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களிலும் நயினாதீவும், நாகபூஷணி அம்பிகை பற்றியும் பெரிதும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. மேலும் பௌத்த வழிப்பாட்டுத்தலங்களிலும் மணிபல்லவம், நாகதீபம் என்ற பெயரில் இத்தலம் பேசப்படுகின்றது. கை புனைந்தியற்றாக் கவின் பெறு தெய்வம் அன்னை நாகபூஷணி, கேட்டவரம், தவறாமல் தந்தருள வல்லவள். நாக வழிபாட்டின் தொன்மைபெறு ஆலயமாக மிளிரும். இங்கே, நாகதோஷம் சம்பந்தமான நேர்த்திகளும், திருமணத்தடங்கல், கிரக தோஷம், மகப்பேறு சம்பந்தமான வேண்டுதல்களும்,

சமுத்திர நீராடலுடன் செய்யப்படும் சாந்திகளும், சிறப்பாக நடைபெறுவதும், ஆகம விதிப்படியான கிரிகைகள், நித்திய நைமித்தியங்கள், இவற்றிலே பாண்டித்தியம் உடைய குருமாரின் பூசைமுறைகள், நித்திய உற்சவம், நித்திய அன்னதானம் போன்றவையும் வழிபாட்டுத் தலமாக இருப்பதோடு தற்போதைய கல்வித்திட்டத்தில் ஓர் சுற்றுலாத்தலமாகவும் மிளிர்வதால், தினமும் பெரும் எண்ணிக்கையில் ஆன அடியார்கள் வந்து செல்கின்றார்கள் எனலாம்.

**கேள்வி:-** **நிர்வாகக் கட்டமைப்பில் நிர்மலமான ஆத்ம சுத்தி தேவை என்பதைப் புரிந்து கொண்டா தங்களின் தெய்வீகப் பணி தொடர்கின்றது. சற்று விளக்குங்கள்**

**விடை:-** ஆம் நேரம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற வரையறைவுக்குள் என்னை நான் நிலைப்படுத்திக் கொண்டேன். இந்த வகையில் என் செயற்பாடுகள் தூய்மையுடனும் பற்று அற்ற நிலையிலும் அன்று முதல் இன்று வரை தொடர்கின்றது என்றால் மிகையாகாது. 40 வருட அரசசேவையும் சமூக, சமய சேவையும் என் இரு கண்கள்போல் எனக்கு அமைந்துவிட்டன. இந்த வகையில் எந்த எந்த இடங்களில் என் சேவையும் பணியும் தேவைப்பட்டதோ அந்த இடங்கட்கு எனக்கு இடமாற்றங்களும் கிடைத்தன. அநுராதபுரம், புத்தளம், வவுனியா போன்ற இடங்களில் பூரணமான ஆத்ம திருப்தியுடன் தெய்வீகப்பணிகளைச் செய்தேன். இவற்றிற்குச் சான்றுகள் இன்றும் அந்த அமைப்புக்களின் செயற்பாடு ஒன்றே போதும். இந்தப் பணி இப்போ எங்கள் குலதெய்வமான ஸ்ரீ நயினை நாகபூஷணியின் தெய்வீகத் திருத்தலத்தை மையமாக வைத்துத் தொடர்கின்றது.

**கேள்வி :-** **"வாழ்வியல் வளம் என்பது இறைபற்றுக் கோட்டில் அமைகின்றது" என்ற கூற்றிற்கு தங்களின் நியாயமான விளக்கம் யாது?**

**விடை :-** இதில் எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. இறை உணர்வு அற்ற வாழ்வு நாடகமேடையில் இராசா வேடம் போட்டவனின் நிலையாகவே முடியும். கெடுத்தும் கொடுக்கும் தெய்வம் கொடுத்தும் கெடுக்கும் என்பர். எவன் ஒருவன் வரையறைப்படுத்தப்பட்ட கோட்பாட்டுக்குள் தன் வாழ்வியலை வகுத்து, வாழத் தலைப்படுகின்றானோ நிச்சயமாக அந்த வாழ்வு பூரணமான, புனிதமான வாழ்வாக அமையும். புறநிலைச் சூழ்நிலைகளால் அவ்வப்போது சில தடுமாற்றங்கள் அமையலாம். இந்த நிலை மானிட சமுதாயத்தைச் சீர்படுத்தவந்த மகான்களுக்கே ஏற்பட்டன. எனினும் அப்படியான செயற்பாடுகள் சமுதாயத்தில் அவர்களைப் புடம்போட்ட பொன்போல் மேலும் மேலும் பிரகாசிக்கவே செய்தன. இது யாம் கண்ட உண்மை. என்னை நெறிப்படுத்தும் என் நெஞ்சம் நன்நெறியே காட்டி வழிநடத்துகின்றது. என்வழி தூயவழியாக அமைய என் குலதெய்வம் எனக்கு அரணாக இருக்கின்றாள். "இறைபற்றுக்கோட்டில் நான் நடக்கின்றேன்." என்வழி

யைப் பற்றாகப் பற்றி நான் செயற்படுகின்றேன் என்ற மன உறுதி இருந்தால் நிச்சயமாக இறைபற்றுக் கோட்டில் வாழ்வு வளம்பெறும். *"சக்தி சக்தி சக்தி என்று சொல்லி அவள் சன்னிதியிலே தொழுது நில்லு சக்தி சில சோதனைகள் செய்வாள் இதை அவள் தண்ணருள் என்றே மனது தேறு"*

**கேள்வி :- பூரணி வாசகர்கட்கு நீங்கள் கூற விரும்புவது யாது?**

**பதில் :-** நயினை ஸ்ரீ நாகபூஷணியின் திருவீதியில் வழமையான எனது கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது ஒருநாள் பூரணி என் கைகளில் வந்து சேர்ந்தாள். முதலில் அம்பாளுக்கு சமர்ப்பணம். ஆசி கூறுங்கள் ஐயா என்றார். மலரைத் தந்தவர் அன்னையின் ஆசி என்றென்றும் உங்களுக்கு உண்டு. இதில் ஏன் சந்தேகம் என்றேன். இல்லை இதழின் ஆசிரியர் அடியேன் என்றார். யாராக இருந்தால் என்ன? பெயர் ஒன்றே. இதன் பெருமையைப் பறை சாற்றுதே என்று கூறி இந்த நல்முயற்சி சோடை போகக் கூடாது. தொடரட்டும் பணி. காலச்சூழ்நிலைகளால் தடைப்படாமற் செயற் படுங்கள் என்று கூறி வைத்தேன். உண்மையில் பூரணி ஒரு பூரண மான சஞ்சிகை என்பதை இதழைத் திறந்து வாசித்தபின் தெரிந்து தெளிவுபெற்றேன். உரிய ஒரு கால கட்டத்திற் பல்சுவை தாங்கி வந்த இம்மலர் பற்பல இதழ்கள் விட்டு பரிமணம் வீச வேண்டும். இந்த வகையிற் பூரணியின் ஆசிரிய பீடத்திற்கும், நெறியாளர் கட்கும் வாசகர்கள் பூரணமான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுத்து பற்பல இதழ்கள் மலர உதவவேண்டும். நிறுவன ங்கள் பலவகையாலும் தமது ஆதரவினைத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.



# இலக்கியச் சிமிழ்

கால வெள்ளத்தால் அள்ளுண்டு போகாமல் நிலைத்து நிற்பவைதான் காவியங்கள் என்று கற்றறிந்தோர் கூறுவர். நல்லதொரு காவியத்தின் ஒவ்வொரு கவிதையுங்கூட காலத்தின் கோலத்திற்கு ஈடு கொடுத்து நிலைத்து நிற்க வேண்டும். அந்த வகையில் ஏராளமான பாடல்கள் கருத்து மாறுபாடில்லாமல் காலத்திற்கேற்ற விளக்கங்களை அளிக்கக்கூடிய வகையில் அமைந்திருப்பதை அறிவோம்.

கம்பராமாயணத்திலே ஒரு பாடல் அனேகமாக எல்லோருக்கும் தெரிந்த பாடல்தான். முதல்நாட் போரில் ஆயுதங்கள் எல்லாவற்றையும் இழந்து தனியனாய் நின்ற இராவணனைப் பார்த்து இராமர் "இன்று போய்ப் போர்க்கு நாளை வா" என்று கூறுவதாக வரும் பாடல்தான் அது.

"ஆளை யாஉனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோயப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்."

இதில் ஆளையா என்ற சொல்லுக்கு மிக அழகாக சமகாலத்தோர்க்குத் தெளிவாகப் பொருள் விளங்கும் வண்ணம் கிருபானந்த வாரியார் அவர்கள் நகைச் சுவையோடு ஒரு முறை விளக்கமளித்தார். "ஆள் - ஐயா நீ பெரிய ஆள் ஐயா. நானும் இல்லாமல் எனது தம்பியுமில்லாத நேரத்தில் தனியாக விருந்த என் மனைவி சீதையை சாமியார் வேடத்தில் வந்து தூக்கிச் சென்றாயே! நீ பெரிய ஆள் ஐயா!" என்று ஆளையா என்ற சொல்லுக்கு அர்த்தம் கொடுத்தது எத்தனை நகைச் சுவை விளக்கமாக உள்ளது.

இது போலவே பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தில் வரும் ஒரு சொல்லுக்கு கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் நகைச்சுவையாக விளக்கமளித்தார். "துரியோதனனின் ஆணைப்படி துச்சாதனன் திரௌபதியை சபைக்கு இழுத்து வருகிறான்.

"ஆடை குலைவுற்று நிற்கிறாள்! அவள்
ஆவென் றழுது துடிக்கிறாள் - அவள்
மாடு நிகர்த்த துச்சாதனன் - அவள்
மைக்குழல் பற்றி யிழுக்கிறான்"

இப்படி அந்தக் காட்சியைப் பாடுகிறார் பாரதியார். சபையிலே பாஞ்சாலியின் துகிலை உரியும்படி கட்டளை பிறக்கிறது. திரௌபதியின் துகிலைப் பிடித்து உரிகிறான் துச்சாதனன். உரிய உரிய துகில் பெருகுகிறது. இதனைப் பாரதியார்

கண்ண பிரானருளால் - தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணிபுதிதாய்
வண்ணப்பொற் சேலைகளாம் - அவை
வளர்ந்தன வளர்ந்தன வளர்ந்தனவே.

துச்சாதனனை தம்பி! என்று பாரதியார் அழைப்பதுதான் வெகு வினோதமானது. இதற்கு முன்பு "வெறும் மாடு நிகர்த்த துச்சாதனன்." என்றும் "அந்தப் பேயனுந் துகிலினை உரிகையிலே" என்றும் கூறிய பாரதியார் இங்கு மட்டும் தம்பி என்று வாஞ்சையோடு அழைப்பானேன் என்று சிந்திப்பது நியாயந்தானே.

செய்ய முடியாத ஒரு காரியத்தில் போய் தலையைப் போட்டு, கஸ்டப்பட்டு தவிக்கும் ஒருவனைப் பார்த்து "தம்பி நல்லா அகப்பட்டார்." என்று சொல்வது இன்று வழக்கம். அந்த தம்பி என்ற சொல் மிகவும் இழிவான முறையில் முடியாத காரியத்தில் முனைந்து நிற்போருக்கு கொடுக்கும் அடைமொழியாக பயன்படுத்தப்படுகிறது."

என்று மிகவும் நகைச்சுவையோடு விளக்கமளித்தார் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள். காலத்தின் மாறுபாட்டுக்கு கவிதைகள் எப்படி வளைந்து கொடுக்கின்றன என்று சிந்திப்பது இதமானதுதான்.



சிறுகதை

# நிஜங்கள்

**அராலியூர்.ந.சுந்தரம்பிள்ளை**

புலர்ந்தும் புலராத காலைப் பொழுது. யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தின் பிளாட்பாரத்தை நிறைந்து நின்றது மக்கள் கூட்டம். காலை நேரத்திற்கே உரிய இயற்கையான சுறுசுறுப்பும் தாங்கள் செய்யப்போகும் பிரயாணத்தின் எதிர்பார்ப்பில் ஏற்பட்ட பரபரப்பும் பயணிகளது இயக்கங்களிற் பிரதிபலித்தன.

"காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் யாழ்தேவிப் புகையிரதம் இன்று அரைமணித்தியாலம் தாமதமாகவே வந்து சேரும்" என்று புகையிரத நிலைய ஒலிபெருக்கி அறிவித்தது. றெயிலுக்காகக் காத்து நின்றவர்கள் ஏக காலத்தில் விட்ட பெருமூச்சுக்களின் ஒலி "உஸ்" என்று புயலிரைச்சலாகக் கேட்டது.

பயணிகள் தங்கும் அறைக்குள் சென்று மனைவியை ஒரு கதிரையிலிருக்கச் செய்து, பயணப் பெட்டியையும் அவள் பக்கத்தில் வைத்துவிட்டு வெளியே வந்தேன்.

அப்பொழுது நான் அந்தப் பெண்ணைக் கண்டேன். அவள் என் கண்ணில் பட்டதும் அவளை எங்கோ எப்பொழுதோ சந்தித்துப்பேசிப் பழகியதாக ஒரு நினைவும் நிழல் விரித்தது.

வயது நாற்பதுக்கும் நாற்பத்தைந்திற்கும் இடையில் இருக்கலாம். ஒரு காலத்தில் அழகியாக இருந்திருப்பாள் என்பதற்கான அடையாளங்கள் உடம்பில் நிறையத் தெரிந்தன. ஆனால் இப்பொழுது கண்களைக் கவர்ந்திழுக்கும் தன்மையுள்ள அழகுக் கூறுகள் எவையும் அவளிடமில்லை. அந்தப் பழைய பெருமையை விட்டுவிட மனமின்றி வெகு சிரமப்பட்டு 'மேக்கப்' போட்டிருக்கிறாள் என்பது தெரிந்தது.

சட்டென்று என் மனதில் பொறிதட்டியது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் என்னுடன் படித்தவள். கண்களை அகலத்திறந்து பார்வையைக் கூராக்கிப் பார்த்தேன். அவளுடைய 'புறொ.்.பைல்' எனக்கு நன்றாகத் தெரிந்தது.

அந்த உயரம் - 'ஓவல்ஷேப்' முகம் - எடுப்பான நாசி - விற்புருவங்கள் - சற்று உள் அடங்கி அழகாக நிற்கும் உதடுகள் - சங்குக் கழுத்து எல்லாம் சாயல் காட்டின. சந்தேகமேயில்லை - சுகந்திதான்!

என் உள்ளம் ஒருமுறை சிலிர்த்துக் கொண்டது. ஆனால் அந்தச் சிலிர்ப்பில் உணர்ச்சிகளின் ஆழமோ வேகமோ இல்லை. பல ஆண்டுகளுக்குப் பின்பு சுகந்தியைக் கண்ட அதிர்ச்சியின் தாக்கமும் "அவளுக்கு என்ன நடந்தது?" என்பதை அறியும் ஆவலுமே தலை தூக்கி நின்றன. அவள் சுகந்திதான் என்பது உறுதியானதும் என்னுள்ளத்தில் எழுந்த கேள்வி "அவளா இவள்?" என்பதுதான். இந்தக்கேள்வி திரும்பதிரும்ப என் உள்ளத்தில் எதிரொலித்தது.

உடம்பு ஊதிப் பருத்து-மார்பு சளிந்து கன்னங்கள் வற்றி கற்றையாகத் தொங்கிய அந்தக் கருநாகச் சடை எங்கே? இப்படியா பலவீனப்பட்டுப் போய்விட்டது? உதிர்ந்து, மெலிந்து குரங்கு வாலாகத் தொங்குகிறதே! முன் நெற்றியில் நரை வேறு எட்டிப்பார்த்துச் சிரிக்கிறது. என்னால் நம்ப முடியவில்லை.

சுகந்தியின் கொடி உடலும், தங்கநிறமும், மயக்கும் விழிகளும் என் மனக் கண்ணில் ஒரு முறை தோன்றி மறைந்தன.

நான் அவளை உற்றுப் பார்த்த பொழுது அந்தப் பார்வைக்காகவே காத்திருந்தவள் போல அவளும் சட்டென்று திரும்பி என்னைப் பார்த்தாள். அவள் ஏற்கனவே என்னை அடையாளம் கண்டு கொண்டு இருந்தாலும் ஏன் வலியச் சிரிப்பான்? என்ற நினைவில் காணாதது போல நின்றாளோ என்னவோ.

எங்கள் பார்வைகள் சந்தித்துக் கொண்டபொழுது அறிமுகத்தின் அடையாளமாக நான் புன்னகைத்தேன். அவளும் புன்னகை செய்தாள். ஆனால் அதில் உயிரே இல்லை.

அந்த நாட்களில் அவள் பூவாக இதழ்விரிந்து முத்துப்பல் வரிசை காட்டி லேசாகச் சிரித்துவிட்டால். அதில் சொக்கிநிற்கும் இதயங்கள்தான் எத்தனை! எத்தனை மாணவர்களைக் கிறங்க அடித்த மோகனச்சிரிப்பு அது!

மாணவர்கள் மட்டுமா? விரிவுரையாளர்கள்? சுகந்தி வகுப்பில் இருந்தாலே ஒரு புது உற்சாகம் பிறந்து விடும். சில இளம் விரிவுரையாளர்களுக்கு தேவை, தேவையின்மை, பொருத்தம், பொருத்தமின்மை ஒன்றையும் பாராது அள்ளி வீசுவார்கள். கருத்துக்களை குறிப்பு எழுதிஎழுதிக் கை சோர்ந்துவிடும் எங்களுக்கு.

சில வேளைகளில் பாடத்துடன் சேர்த்து விழல் பகிடிகளையும் உதிர்த்து. தங்கள் பகிடிகளுக்குத் தாங்களே சிரித்து விரிவுரையாளர் விட்டபகிடி என்பதற்காக மாணவர்களையும் நிர்ப்பந்தத்திற்கு சிரிக்கவைத்து ... இப்படி எத்தனை நிகழ்ச்சிகள்! நகைச்சுவைகள்! சுவையான அனுபவங்கள்!

இத்தனைக்கும் சுகந்தி வாசிற்றியில் எவரையும் காதலிக்கவில்லை. பாம்புக்குத் தலையையும்-மீனுக்கு வாலையும் காட்டும் விலாங்கு போல ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான சொக்குப் பொடியைத் தூவிவிட்டு தந்திரமாக நழுவிக்கொண்டிருந்தாள் பல்கலைக்கழக இளைஞர் குழாத்திடமிருந்து.

ஆனால் அவளுடன் நெருங்கிப் பழகும் ஒவ்வொரு இளைஞனுக்கும் அவள் தன்னைத்தான் காதலிக்கிறாள் என்று உள்ளுக்குள் ஓர் இரகசிய நினைவு. எனக்குக் கூட அவளிடத்தில் ஒரு சபலந்தான். சபலம் என்ன, அந்த மோகன அழகில் மனதை முற்றாக இழந்திருந்தேன்.

நெருங்கி நெருங்கி வருவாள். நாணிக்கோணிப் பேசுவாள். கண்களால் வெட்டுவாள். புன்னகையால் கொல்வாள். நான் தேன்குடித்த நரியாவேன். நம்பிவிடுவேன், நங்கை என்னைத்தான் காதலிக்கிறாள் என்று.

அன்றிரவு விடுதியில் தூக்கமே வராது. நித்திரை வந்தாலும் அதிலும் அவள் வந்து தொல்லை கொடுப்பாள். மீண்டும் ஆட்ஸ் புளொக்கிற்குச் சென்று அவளைச் சந்திக்க உள்ளம் துடியாய்த் துடிக்கும். எப்பவடா விடியும் என்று ஏங்கிக் கொண்டு கிடப்பேன்.

காலையில் ஆட்ஸ் புளொக்கிற்குச் சென்றால் என்ன ஏமாற்றம்! எந்தக் காரண காரியமும் இல்லாமல் சுகந்தி என்னைவிட்டு விலகி வெகுதூரம் சென்றிருப்பாள். முதல் நாள் மாலை என்னுடன் நின்று பேசிக் கொண்டிருந்த அதே நெருக்கத்தில், அதே அந்நியோந்நியேத்தில் அவள் இன்னொருவனுடன் பேசிக்கொண்டு நிற்பாள். நான் இரவிரவாகக் கட்டிய காதல் மாளிகை அந்தக் கணமே நொருங்கி தரைமட்டமாகும்.

"சட்டி சுட்டதடா கைவிட்டதடா" என்று அவளை அந்த இடத்தில் அந்தக் கணமே கைகழுவி விட்டு விடவும் முடியாமல் உள்ளத்தில் ஒரு ஏக்கம். ஒரு வேதனை. விரத்திக்கும் நம்பிக்கைக்கும் இடையே மனம் கிடந்து ஊசலாடும்.

இன்னொரு சந்திப்பு, விழிவீச்சு, வளக்கமான புன்னகை, குழைந்து குழைந்து நாலு வார்த்தைகள், இவை போதும் என்னை மறுபடியும் வீழ்த்துவதற்கு.

நான் அப்பொழுது ஓர் அழகின் உபாசகனாக இருந்தேன். வாசிற்றிக்கு எந்த அழகான தமிழ்ப் பெண் வந்தாலும் விடமாட்டேன். துரத்துவேன். எனது தேடல் சுகந்தியில் வந்து நின்றது.

மற்றவர்களும் அவளைத் துரத்துகிறார்களே என்று நான் கவலைப்படவில்லை. என்னால் அவளை விழுத்திவிட முடியுமென்று நான் நம்பினேன்.

நான் அவளுடன் பல நாட்கள் பழகினேன். ஏதேதோவெல்லாம் பேசினேன். உணர்ச்சி வசப்பட்டு என் உள்ளத்தைத் திறந்து காட்டுவது போல, அவளுடைய உள்ளத்தைத் தொடுவது போல்..... ஆனால், அவள் எதையும் புரிந்து கொள்ளவில்லை. புரிந்துகொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை.

காதல் என்ற வார்த்தையை மட்டும் நான் ஒரு நாளும் அவளிடம் எடுத்துக்கூறியதில்லை. காரணம் பயந்தான். அவள் "இல்லை" என்று கூறிவிட்டால் அந்த ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ளும் சக்தி என் இதயத்திற்கு இல்லை என்ற பயம் தான்.

எத்தனை நாளைக்குத்தான் பார்ப்பது? இறுதிப்பரீட்சையும் நெருங்கிக் கொண்டிருந்தது. காலொடிந்த நாற்காலியில் இருப்பது போல் இந்த நேரத்தில் இப்படி இருப்பது படிப்புக்கும் நல்லதல்ல. எனவே. இல்லை. உண்டு என்று இரண்டில் ஒன்றைத் தெரிந்து கொள்வது என்று தீர்மானித்தேன்.

அன்று மத்தியானம் லெக்சர் முடிந்து போகும் பொழுது அவள் நூல் நிலையத்திற்கு ஓடிச் சென்றதைக் கவனித்தேன். புத்தகம் ஒன்று றிசேவ் செய்திருக்கிறாள். மாலை கட்டாயம் வருவாள் எடுத்துச் செல்ல. நான் நேரத்துடன் சென்று "பில்லறிங் செக்ஷ" னில் நின்று கொண்டேன்.

அவள் தனியாக வந்தது எனக்கு வசதியாகப் போய்விட்டது. இல்லாவிட்டால் கூட வந்தவளை எப்படித் தொலைப்பது என்று திட்டம் போட்டு மூளையைக் குழப்பியிருக்க வேண்டும்.

ஆட்ஸ் புளொக்கிற்குள் அவள் நுழைந்ததுமே முன் மறியலாக நின்று கொண்டு "என்ன தனிய வாறியள்?" என்று கேட்டேன், "ஏன் தனிய வரக்கூடாதோ?" என்று சிரித்தாள்.

"நீங்கள் ஒரு நாளும் ஒரு இடத்துக்கும் தனிய வரமாட்டியளே. உங்களுக்கு ஃபிறெண்ட்ஸ் அதிகம்"

"நான் பேசிப்பழகுகிறவை எல்லோருமே எனக்குப் ஃபிறெண்ட்ஸா?"

"அப்படித்தான் பாக்கிறவை நினைப்பினம்"

"மற்றவேன்ரை அபிப்பிராயத்தைப் பாக்க முடியுமா? இன்னும் சிலர் நான் பேசிப்பழகிற ஆண்கள் எல்லோரையுமே காதலிக்கிறன் எண்டு கூட நினைக்கலாம்" என்றாள் புன்னகையுடன்.

"அப்பிடியும் நினைக்கிறார்கள்" என்று நானும் புன்னகைத்தேன்.

"யார் நினைக்கிறார்கள்?" என்றாள், வழக்கமான சிரிப்பும் மலர்ச்சியும் மறைந்து முகபாவம் சீரியஸாக மாற-

“உங்களோடு பழகிற அந்த ஆண்களே நினைக்கலாம்.”

‘‘நான் உங்களோடும் தானே பழகிறன். நீங்கள் அப்பிடி நினைக்கிறியளா?’’ என்று கேட்டாள், குரலில் மேலும் அழுத்தம் தொனிக்க.

“நான் அப்பிடி நினைக்கிறதும் நினையாததும். நீங்கள் என்ன நினைக்கிறியள் எண்டதைப் பொறுத்திருக்கு” என்றேன், பிடிகொடுக்காமல்.

“யாரையும் நான் காதலிக்கவில்லையே!” என்று கூறிச் சிரித்தாள்.

நான் அதிர்ந்து போகவில்லை. எதிர்பார்த்ததை விட நான் நன்றாகவே சமாளித்தேன். உண்மையைச் சொல்லப் போனால் நான் ஓரளவிற்கு எதிர்பார்த்த பதில்தானே இது? ஏமாற்ற உணர்வு லேசாக உள்ளத்தைக் கௌவினாலும் ஒன்றையும் வெளிக்காட்டாது, “இத்தினை பேரோடை பழகிறியளே அதிலை ஆராவது ஒருத்தனைக் காதலிக்கலாமே’’ என்றேன்.

“ஏன் காதலிக்க வேணும்?”

“வருங்கால வாழ்க்கைத் துணையைத் தேடுற பொழுது நல்லாப் பேசிப் பழகிப் புரிஞ்சு கொண்ட ஆளைத் தெரிவு செய்யிறது தான் நல்லது. அதுக்கு வாசிற்றி நல்ல இடம்”

‘‘இஞ்சை உள்ள யாரையுமே நான் கலியாணம் செய்ய விரும்பாட்டால்.......?! “என்று கேட்டாள் குறும்பாகச் சிரித்தபடி.
“ஓ! அப்ப நீங்கள் பெரிசாப் பாக்கிறியளாக்கும்?”

“பெரிசெண்டால்?”

“டொக்ரர், என்ஜினியர், அக்கவுண்டன்ட், சிவில்சேவண்ட்”

சுகந்தி பதில் கூறவில்லை - புன்னகை பூத்தாள்.
“நீ சொல்வது சரிதான்!” என்று சொல்வது போலிருந்தது அப் புன்னகை-

‘‘இஞ்சை இருக்கிறவர்களிலும் சிலர் ஸ்ரா.ஃ.ப் ஒ.ஃ.பீசர்களாக வரக்கூடும்’’

“சிலர்!... ஆனால் மஜோறிற்றி சாதாரண வாத்திமாராகப் போகிறவர்கள் தானே?” என்றாள் குரலில் ஏளனம் தொனிக்க.

“வாத்திமாரெண்டாக் குறைவா?”

“சம்பளம் குறைவு”

‘‘ஓஹோ! உறுமீனுக்குக் காத்திருக்கிறியளா? வாழ்க்கேலை பிற்காலத்திலை லேட் இன் லை.ஃ.ப் சந்திச்சால் அப்ப கணக்குப் பார்த்துக் கொள்ளுவம்!”

“எதை? நான் ஸ்டா.்.ப் ஓ.்.பீசரைக் கலியாணம் செய்யிறனா எண்டா?”

“அதுதானே உங்களுடைய திட்டம்?”

“நீங்களும் ஒரு வேளை என்னைவிட அழகான பெண்ணை மணக்கலாம்” என்று சிரித்தாள்.

“அதிர்ஷ்டம் இருந்தால், நினைச்சது கைகூடும் ரண்டு பேருக்கும்” என்று நானும் சிரித்தேன்.

“விஷ் யூ ஆல் த பெஸ்ட்” என்றாள்.

“த சேம் ரு யூ” என்று நானும் அவளை வாழ்த்தினேன்.

வெளிக்கு ஒன்றும் பேசாது வெறுமனே புன்னகை புரிந்தாலும் இவளை விட அழகான ஒரு பெண்ணை மணப்பது மட்டுமல்ல. அவளுடன் சோடியாக இவள் முன்னால் வந்து நின்று (காலங் கடந்த பிறகாவது ) இவளுடைய கர்வத்தை அடக்க வேண்டும்! என்று அந்தக்கணமே ஒரு உறுதியான தீர்மானம் எடுத்துக்கொண்டேன்.

அன்று அவளுடன் பேசி அவள் உள்ளத்தை அறிந்து கொண்டது எனக்கு நல்லதாகப் போய்விட்டது. அனாவசியமான அங்கலாய்ப்பின்றி. மனதை ஒரு வழிப்படுத்தி இறுதிப் பரீட்சைக்குப் படிக்க முடிந்தது. பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறிய பிறகு நான் அவளைச் சந்திக்கவே இல்லை. இப்பொழுது கிட்டத்தட்ட இருபது வருடங்கள் கழித்துச் சந்திக்கிறேன்.

“என்னை ஞாபகம் இருக்கா. மனோகர்!”

எனக்கு முன்னால் சுகந்தி நின்று கொண்டிருந்தாள். பழைய நினைவுகளில் மூழ்கிப்போய் இருந்த நான். அவள் வந்ததைக் கூட கவனிக்கவில்லை.

“உங்களை மறக்க முடியுமா?” என்று கேட்டு லேசாகச் சிரித்துவிட்டு, ஒருகணம் பொறுத்து “இப்ப எங்கை?” என்றேன்.

“ரீச் பண்ணுறன். யாழ்ப்பாணத்திலை” என்றவள்”- “நீங்கள்......?” என்று கேள்விக் குறியில் நிறுத்தினாள்.

“நான் இப்ப ஒரு அக்கவுண்டன்ற்.........”

அவள் புருவங்கள் ஒருமுறை லேசாக மேலுயர்ந்து தாழ்ந்தன. அந்த அசைவில் ஆச்சரியம் தொனித்ததை நான் புரிந்து கொண்டேன். அடுத்து என்ன போசுவது, என்ன கேட்பது என்று தெரியாது நான் தடுமாறிக் கொண்டிருந்த பொழுது சுகந்திக்குப் பக்கத்தில் நின்ற பெண் என் கண்ணில் பட்டாள். சிறுமிக்குப் பத்துப் பதினொரு வயது இருக்கலாம்!

“இது ஆர் உங்களுடைய மகளா?”

“ஓம்” என்று தலை ஆட்டினாள் அவள்.

“பிறிட்டி கேள்” அம்மாவைப் போலை நான் புன்னகைத்தேன்.

அம்மா, பெண் இருவரது முகங்களிலும் நாணச் செம்மை படர்ந்தது. சுகந்தியின் அந்த நாளைய அழகு ஒரு முறை சாயல் காட்டி மறைந்தது.

“நான் அப்படிக் கூறியிருக்கக் கூடாதோ? கொம்பிளிமெண்ட்ஸ் கொடுக்கும் பொழுது என்னுடைய எல்லையைத் தாண்டிவிட்டேனோ? சுகந்தி இப்பொழுது வாசிற்றி கேள் அல்லவே. இன்னொருவனுடைய மனைவி! ஒரு பெண்ணுக்குத் தாய்!

என்ன செய்வது? வாசிற்றி நாடகங்களில் பாராட்டுக்களைத் தாராளமாக வழங்கிப் பழகிய வாய், முந்திக்கொண்டுவிட்டது.

சுகந்தியின் முகத்தில் தெரிந்த மலர்ச்சியும் உதட்டில் நின்ற புன்னகையும் அவளுக்கு அந்தக் கொம்பிளிமெண்ட் பிடித்திருந்தது என்பதை காட்டுவதாக எடுத்துக் கொண்டு “எங்கை பயணம்?” என்றேன்.

“கொழும்புக்கு!”

“இரண்டு பேரும் தனியவா? உங்கடை ஹஸ்பெண்டைக் காணவில்லையே?”

“அவரும் வாறார்”

“அவர் என்ன செய்யிறார்?”

இதை அறிவதற்கு உள்ளத்தில் பொங்கிய ஆவலை வெகு சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு சாதாரணமாகக் கேட்டேன்.

அவளும் இதற்குப் பதில் அளிப்பதைக் தவிர்க்க விரும்பியவள் போல” “அவர் அங்கை ஆரோடையோ பேசிக் கொண்டிருக்கிறார்” என்றாள்.

“நான் அதைக் கேட்கவில்லை வட் இஸ் ஹீ” என்றேன் புன்முறுவலுடன்.

“அவரும் ரீச் பண்ணுறார். இப்ப கொழும்புக்குப் போறம் விடுதலைக்கு”

“ஓ.... ரீச்சரா?” என்னை அறியாமலே ஒரு ஏளன இழை குரலில் ஓடிற்று.

அதை அவளும் கவனித்திருக்க வேண்டும். ஒரு கணம் அவள் முகத்தில் சங்கடம் தெரிவது போன்ற ஒரு பாவம். அல்லது எனது பிரமையாகவும் இருக்கலாம்.

மறுகணம் உணர்ச்சிகளை மறைத்துக் கொள்வதில் பெண்களுக்கே உரிய இயல்பான திறமையுடன் முகத்தில் தோன்றிய சலனத்தை மறைத்துக் கொண்டு "அவர் அங்கை வாறார்" என்று கை காட்டினாள்.

அவள் கை காட்டிய திசையில் வந்துகொண்டிருந்தவனைப் பார்த்தேன்.

கரிய நெடிய உருவம். கொஞ்சம் வளைவு. முரட்டுத் தோற்றம் - ஷேவ் செய்யாத முகம். அதை மிகைப்படுத்திக் காட்டியது. அலட்சிய பாவனையில் உடையணிந்திருந்தான். மொத்தத்தில் அவன் அவளுக்கு ஒரு கொன்ட்ராஸ்ட் போல் இருந்தான்.

தன் கணவன் கிட்ட வந்ததும் சுகந்தி "மை ஹஸ்பென்ட் கணேஷ்.... என்னுடைய வாசிற்றி மேட் மனோகர்" என்று இருவரையும் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தாள்.

"கிளாட் டு மீட் யூ" என்று புன்னகைத்தபடி கை நீட்டினேன். அவன் பதிலுக்குப் புன்னகைக்காமலே கையைமட்டும் நீட்டினான். வாய் திறக்கவில்லை. முகத்தில் எரிச்சல் தெரிந்தது.

வாசிற்றி நாளைய தனது "ஷோஷல்" பழக்கத்தை சுகந்தி தொடர்ந்து கடைப்பிடித்து அவனது எரிச்சல் படும் சுபாவத்தை வளர்த்திருப்பாளோ என்று எண்ணத் தோன்றியது.

"றெயில்லை சீற் பிடிக்கவேணும். வாருங்கோ முன்னுக்குப் போவம்" என்றான் கணேஷ்.

"சரி வாறன்" என்று நான் முந்திக் கொண்டேன். நீண்ட கால இடைவெளி இருந்தாலும் சுகந்தியைப் பழிக்குப் பழி வாங்கிவிட்டது போன்ற திருப்திப் பெருமிதத்துடன் றூமிற்குள் நுழைந்தேன்.

அறைக்குள் நுழையும் பொழுதே என்னைச் சுட்டெரித்து விடுவது போல உருட்டி விழித்துப் பார்த்துக் கொண்டிருந்த மனைவியின் கண்களைச் சந்தித்தேன்.

"இவள் ஏன் இப்படிப் போர்க்கோலம் பூணுகிறாள்?"

எனக்குப் புரிந்து விட்டது. நான் சுகந்தியைச் சந்தித்துப் பேசியது அறை வாசலில் அது என் மனைவிக்கு அவள் இருந்த இடத்திலிருந்து நன்றாகத் தெரிந்திருக்கிறது.

“இந்தப் பெண்களுக்குத்தான் எத்தனை பொறாமை!”

நான் மனைவிக்குக் கிட்டச் சென்றதும் “அவள் யார்?”

“என்னுடன் வாசிற்றியில் படிச்சவள்”

பலவீனமான குரலில் மன்னிப்புக் கோரும் பாவனையில் பதிலிறுத்தேன்.

“அதுக்கு இப்பிடியா இத்தினை பேருக்கும் முன்னாலை சிரித்துச் சிரித்துப் பேசுறது?”

“பல வருஷங்களுக்குப் பிறகு சந்திக்கிறன். நிண்டு நாலு வார்த்தை பேசினா என்ன?” என்று கேட்க நினைத்துக் கேட்காமலே சொற்களை விழுங்கிக் கொண்டேன். பேசி அவளுக்கு விளங்க வைக்கவும் முடியாது. அவளை வெல்லவும் முடியாது.

“வயது நாற்பத்தைஞ்சாகுது இன்னும் பழக்க வழக்கம் தெரியாது!”

பல்கலைக்கழகத்திற்குச் சென்று படித்து அக்கவுண்டனாகி எத்தனை பேருடன் வேலை பார்த்து, எத்தனை பேருக்கு ஆலோசனை கூறும் எனக்கு, பத்தாம் வகுப்பைக் கூடச் சரியாகப் பாஸ் செய்யாத என்னுடைய மனைவி பழக்க வழக்கம் சொல்லித் தருகிறாள்! உள்ளூரச் சிரித்துக் கொண்டேன். பின் என்ன வெளிப்படையாகவா சிரிக்க முடியும்?

எனக்கு லட்சங்களைக் கொண்டு வந்தவளாயிற்றே! அந்த லட்சங்கள் எனது கண்களை மட்டுமல்லாது வாயையும் மூடிவிட்டன!

“இவள் ஓயமாட்டாளா? இன்னும் என்னவெல்லாம் கேட்டு என்மானத்தை வாங்கப் போகிறாள்?”

இயற்கையாகவே தொட்டால் ஒட்டிக் கொள்ளுமோ என்று பயப்படும் படியான அவளுடைய கரியமுகம் இப்பொழுது பொறாமையில் இன்னும் ஒருபடி கூடக் கறுத்திருந்தது.

“சரி வாருங்கோ போவம்” என்று சொல்லி தனது பூதாகாரமான உடம்பைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு எழுந்து நடந்தாள் மனைவி. பெட்டியையும் தூக்கிக் கொண்டு நான் அவள் பின்னால் நடந்தேன், வாய்மூடி மௌனியாக.

எனது வெற்றிப் பெருமிதம் வந்த சுவடு தெரியாமல் மறைந்து விட்டது.

நிஜங்கள் தான் எவ்வளவு குரூரமானவை!

# தமிழன் கணக்குப் போட்டு வாழ்பவனா

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்றார் தமிழ் மூதாட்டி ஔவையார். தமிழ்மறை தந்த வள்ளுவரோ எழுத்தை விட எண்ணையே பெரிதாக மதித்து "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்றார். இங்கு எழுத்துகளைச் சொல்லும் போது ஏனோதானோ என்ற ரீதியில் ஏனை எழுத்தென்ப எனக்கூறி எண்ணின் முக்கியத்தைத் தெளிவாக்கினார்.

தமிழிலுள்ள பல நூல்களுக்கு எண்களின் பெயர்களே உண்டு. பதினெண் கீழ்க்கணக்கிலே நாலடி - நான்மணி - நானாற்பது - ஐந்திணை- முப்பால் என்பனவும் கம்பர் பாடிய ஏர் எழுபது, ஒட்டக்கூத்தரின் ஈட்டி எழுபது மற்றும் புறநானூறு, அகநானூறு, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, முத்தொள்ளாயிரம், பதிற்றுப்பத்து...... இப்படிப் பல நூல்கள் எண்களின் பெயர்களுடன் இருக்கின்றன.

எண்களின் பெயர் சம்பந்தமாக எழுதுவதாயின் அது மிகப் பெரிதாக விரிவடைந்துவிடும் என்பதால் இலக்கியத்தில் பெருக்கல் வாய்ப்பாடும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணத்தில் "மூவிருமுகங்கள் போற்றி" "ஆறிரு தடந்தோள் வாழ்க" என ஆறுமுகத்தையும் பன்னிரு தோள்களையும் பாடுகிறார். கம்பரும் கணிதவாய்ப்பாட்டைக் கைவிடவில்லை. இராமரைப் பதினான்கு வருடம் காட்டுக்குப் போகும்படி கூறும் கைகேயி "ஏழிரண்டாண்டில் வாவென்று இயம்பினன் அரசன் என்றாள்" என்கிறார்.

அதுமட்டுமின்றி கும்பகர்ணன் சாப்பிடும் உணவு பற்றிக் கூறும் போது

"ஆறு நூறு சகடத் தடிசிலும்
நூறு நூறு குடங் கள்ளும் நுங்கினான்"

என்று அறுநூறு வண்டில் சோறும் பத்தாயிரங் குடங்கள்ளும் உண்டதைக் குறிப்பிடுகிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

வசைபாடும் காளமேகம் முருகனுக்கும் விநாயகருக்கும் சிலேடையாகப் பாடும் போது,

"சென்னிமுக மாறுளதால் சேர்கரமுந் நாலுகையால்" எனப்பாடினார். முருகனுக்கு முந்நாலு - பன்னிரண்டு - கைகள் விநாயகருக்கோ முன்னால் தூங்கும்கை என்பது இதன் பொருள்.

வெண்பாவிற் புகழேந்தி எனப் புகழப்படும் புகழேந்தியாரும் தமயந்தியின் இரண்டாவது சுயம்வரத்துக்கு செல்லும் நளன் தேர் செலுத்திய வேகத்தைச் சொல்லும் போது,

"மேலாடை வீழ்ந்தது எடுஎன்றான் அவ்வளவின்
நாலாறு காதம் நடந்ததே...."

என்றார். இருபத்து நான்கு காதம் என்றால் இருநூற்று நாற்பது மைல்கள். அரசன் தனது அங்கவஸ்திரம் விழுந்துவிட்டது எடு என்று கூறற்கிடையில் இருநூற்று நாற்பது மைல்கள் கடந்து விட்டதாம் தேர்.

இளங்கோவடிகளும் தமது சிலப்பதிகாரத்திலே, நடந்து களைத்த கண்ணகி கோவலனிடம் "மதுரை மூதூர் இன்னும் எவ்வளவு தூரம்?" என்று கேட்க "ஆறு ஐந்து காதம்" என்று கோவலன் கூறுவதாகக் கூறுகிறார். பட்டினத்தடிகளும் "ஐயிரண்டு திங்களாய் அங்க மெல்லாம் நொந்து பெற்று"என்றார். இப்படிப் பார்த்தால் தமிழன் கணக்குப்போட்டு வாழ்பவனா?



# பேச்சுவழக்கில் நிலவும் சுவையான சில சொற்களும் சொற்றொடர்களும்


**கலாநிதி க.சொக்கலிங்கம்**

*(சொக்கன்)*


'பழையன கழிதலும் புதியன புகுதலும்' எல்லா மொழிகளிலும் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. இப்பொது விதிக்குத் தமிழ்மொழியும் விலக்கன்று. இரண்டாயிரத்தைந்நூறாண்டுக்கு மேலான பழைமை வாய்ந்த இலக்கியங்களும் அவற்றைக்கண்டு இயம்பிய இலக்கணமும் அதற்குண்டு.

பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் உலகவழக்கு, செய்யுள் வழக்கு என இரு வகைமைகளுள் தமிழை உள்ளடக்கி இலக்கணம் செய்துள்ளது. உலகவழக்கு, 'உயர்ந்தோர் வழக்கு' என்பது தொல்காப்பியம் கண்ட முடிபு. ஆனால் நவீன மொழியியல், சாமானிய மக்களின் வழக்கினை மொழியின் இன்றியமையாக் கூறாகக் கொள்கின்றது. இவ்வகையில் நோக்கினால் பழந்தமிழ்ச் செய்யுள்களிலே பயன்படுத்தப்பட்டுள்ள சில சொற்கள் இன்று சாதாரண பேச்சு வழக்கிலே கையாளப்படக் காண்கின்றோம். இவை அக்காலப் பேச்சு வழக்கிலோ வாய்மொழி இலக்கியங்களிலோ பயன்பட்ட சொற்களாய் இருந்து காலத்தால் சாகாது இன்றும் தொடர்கின்றனவோ என்று கொள்ளத் தோன்றுகின்றது. இக்கூற்றினுக்கு எடுத்துக்காட்டுக்கள் சிலவற்றைத் தருகின்றோம்.

| சொல் | பயன்பட்ட பாடல் அடி | காணப்படும் நூல் | பாடல் எண் அடி |
|---|---|---|---|
| 1.அகல்-(சட்டிக்கு வழங்கிய சொல். இன்று 'தகழி'யைக் குறிக்கும்) | புத்தகல் கொண்ட புலிக்கண் வெப்பர். | புறநானூறு | 249-04 |
| 2.அடுப்பு | ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின் | ” | 164-01 |
| 3.அயறு(அயிறு, அயர் எனவும் வழங்கும் புண்வழலை) | அயறு சோரும் இருஞ் சென்னிய | ” | 22-07 |
| 4.அரம்(ஆயுதம் தீட்டும் கருவி) | கருஞ்செய் கொல்லன் அரம்செய் அவ்வாய் | ” | 136-06 |
| 5.அவிழ்(சோற்றவிழ்) | அவிழ்ப் பதம் மறந்து | ” | 159-12 |
| 6.இருமல்('இரும்'என வந்துள்ளது.) | இரும்இடை மிடைந்த சிலசொல் | ” | 241-13 |
| 7.உலை | நீர் உலையாக ஏற்றி | ” | 159-11 |
| 8.உவர் (நிலம்) | உறும் இடத்து உதவா உவர் நிலம் | ” | 142-02 |

| | | | |
|---|---|---|---|
| 9.எந்திரம்(யந்திரம் வடசொல்) | திங்களும் நுழையா எந்திரப் புழை | ” | 177-13 |
| 10.ஏமம்-(காப்பு, சாமம் ஏமம்) | எல்லா உயிர்க்கும் ஏமமாகிய | ” | 01-11 |
| 11.ஒறுவாய் (தெற்றுவாய்) | உருவு கரந்து ஒறுவாய்ப் பட்ட | ” | 27-06 |
| 12.கரகம்(குண்டிகை, குடம்) | நீர்அறவறியாக் கரகத்து | ” | 01-12 |
| 13.கொல்லை(தோட்டம், பின்வளவு) | கரிபுடை மயக்கிய அகன்கட் கொல்லை | ” | 167-16 |
| 14.சாடி(ஒருவகைக் கொள்கலன்) | நனைமுதிர் சாடி நறவின் | ” | 32-02 |
| 15.தாயம்(தாய்வழிச்சொத்து, பொருத்தமான சமயம் என்றும் பொருள் உண்டு) | முரசெழு தாயத்து அரசே தஞ்சம் | ” | 72-03 |
| 16.தாலி(தாலுதல்-தூங்குதல் ஆண்மகன் அணியும் கழுத்தணியும் தாலி எனப்பட்டது. ஐம்படைத் தாலி-பஞ்சாயுதமும் சங்கிலியும்) | தாலி களைந்தன்று இலனே | ” | 77-7 |
| 17.புலம-(வயல், இடம், அறிவு) | யானை புக்க புலம்(வயல்) போல | ” | 184-10 |

மேலே தரப்பட்ட சொற்களிற் பலவும் பிற சங்கநூல்களிலும் ஆங்காங்குக் காணப்படுகின்றன.

| சொல் | இடம்பெற்ற பாடல் அடி | நூல் | அடி |
|---|---|---|---|
| 1.அந்தி (மாலைக்காலம்) | நல்பகல்அந்தி நடை இடைவிலங்கலின் | பெரும்பாணாற்றுப்படை | 46 |
| 2.உறை(பாலின்உறை) | கூம்பு முகழ் உறை | ” | 158 |
| 3.ஐது(நெருக்கமின்மை) | ஐதுமயிர் ஒழுகிய தோற்றம் | ” | 07 |
| 4.குட்டி (விலங்கின் குழவி, பன்றிக்குட்டி) | இருஞ்சேறுஆடிய இரும்பல் குட்டி | ” | 340 |
| 5.தாம்பு (கயிறு) | நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி | ” | 152 |
| 6.புழுக்கல்(சோற்றுப் புழுக்கல்) | தெரிகொள் அரிசித் திரள்நெடும்புழுக்கல் | ” | 474 |
| 7.அழல்(நெருப்பு, கோபம்) (இன்று பொறாமையைக் குறிக்கும் பேச்சு வழக்குச் சொல்) | அழல்நிகழ்ந்துதிகழ்ந்து இமைக்கும் | சிறுபாணாற்றுப்படை | 94 |

| | | | |
|---|---|---|---|
| 8.கச்சை(கொடுக்கு என்பதும் இன்றுள்ள வழக்கு ‘ கச்சை கட்டுதல்’ தீவிரமான செயற்பாட்டுக்குத் தயாராதல் எனும் மரபுத்தொடர் | பூவிரிகச்சைப் புகழோன் | ” | 279 |
| 9.முற்றம்(இல்லத்தின் முன்னுள்ள தரை) | தருமணல் முற்றத் தரிஞிமி றார்ப்ப | மதுரைக்காஞ்சி | 684 |
| 10.கிடங்கு(மண்குழி) | மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின் | ” | 351 |

மேலே காட்டிய சொற்கள் வகை மாதிரிகள் மட்டுமே. சங்க நூல்கள் (பத்துப்பாட்டு, எட்டுத்தொகை,) முழுமையையும் ஒரு சொல் விடாது ஆராயும் பொழுது அவற்றிலுள்ள சொற்களில் எத்தனை விழுக்காடு இன்று பேச்சுத்தமிழில் வழங்குகின்றது என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ளலாம். வடமொழியின் நால்வேதங்களிலும் கையாளப்பட்டுள்ள சொற்களும், மொழி நடையும் பின்வந்த வடமொழி இலக்கியங்களிலிருந்து முற்றிலும் வேறுபடுவது போன்ற இருநிலை மொழியாட்சி தமிழுக்கு, அது தொன்மையான மொழியாய் இருந்தபோதும் இல்லை என்பதும் அதன் சிறப்புக்கும் வாழ்வுக்கும்(அழிந்தொழிந்து சிதையாது, அன்றுபோல் இன்றும் வாழ்ந்துகொண்டிருப்பது) எடுத்துக்காட்டத் தக்கதே.

அடுத்து, தமிழில் காலத்துக்குக் காலம் மக்கள் உருவாக்கிப் பயன்படுத்திவரும் உவமைச் சொற்றொடர்களும் சிறப்பித்துக் கூற வேண்டுவனவே. ஏனெனில் அவை மக்களது கூர்ந்த அவதானத்தையும் ஒப்பிட்டுத் தெளிவுபடுத்தும் ஆற்றலையும் நன்கு புலப்படுத்துவனவாகும். அத்தகைய உவமைச் சொற்றொடர்களிற் சில கீழே தரப்படுகின்றன.

| உவமைத்தொடர்கள் | விளக்கம் |
|---|---|
| **01.** அடிச்சு அப்பம் தீத்துவது போலை (தீற்றுவது தீத்துவது எனவும், போல, போலை எனவும் திரிபடைந்து வழங்கும்) | நல்லது உகந்தது என்று ஒன்றை உணராதவருக்கு வலுவந்தமாக அதனைத் திணித்தலுக்கு உவமை. |
| **02.**அணில் ஏறவிட்ட நாய் போலை | ஏமாறுதல் |
| **03.**அமாவாசையும் பவுறணையும் போலை | சிவப்பும் கறுப்புமான நிறத்தினர் |
| **04.**அவிச்ச இறால் போலை | உடல் வெளுத்து மெலிந்தவர் |
| **05.** ஆட்டுக்கை மாட்டை விடுறது போலை | சந்தர்ப்பத்திற்குப் பொருந்தாத பேச்சு. |
| **06.**ஆடிக்காத்திலை பறக்கிற இலவம் பஞ்சு போலை | திக்குத்திசைகாணாத அவல நிலை |

| | |
|---|---|
| 07. உலக்கைக்குப்பூண் போட்டது போலை | அழகற்றவரின் அணிநலம் |
| 08. ஊமையும் ஊமையும் மூக்குச் சொறிஞ்சாப் போலை | இருசாராருக்கும் தெளிவு ஏற்படுத்தாத உரையாடல் |
| 09. கஞ்சிக்குள்ளை போட்ட பயறு போலை | ஆசை அருமையாக |
| 10. கத்தரிக்காய்க்குக் கால்முளைச்சது போலை | குட்டையான உருவம் |
| 11. கிணற்றுக் கட்டிலை பிள்ளையைக் கிடத்தியது போலை | அந்தரப்படல், அவசரப்படல் |
| 12. குட்டிபோட்ட பூனை போலை | பற்றுள்ளவரை, பொருளைச் சுற்றிக்கொண்டிருத்தல். |
| 13. குட்டையைக் கலக்கி மீன் பிடிச்சாப் போலை | குழப்பத்தை உண்டாக்கி நன்மை பெறல் |
| 14. குண்டுச் சட்டிக்கை குதிரை ஓட்டிறது போலை | சிறிய எல்லைக்குள் பெரிய சாதனை புரிய முற்படல் |
| 15. சாடிக் கேத்த மூடி போலை | பொருத்தமான சோடி |
| 16. சூடு சுறணையில்லாத மரக்கட்டை போலை | எவ்வித நல்லுணர்ச்சியும் இல்லாமை. |
| 17. தூச்சியிலை போட்ட மீன் போலை | வேதனைத் துடிப்பு |
| 18. திண்டசட்டிக்கை பேளுறது போலை | நன்றி மறந்த செய்கை |
| 19. தின்னக் குடிக்கத் தெளிவெண்ணை (எண்ணெய்) போலை | அருமையான ஆள் |
| 20. நாறல் மீனைக்கண்ட நாய் போலை | இழந்ததை விரும்பும் இழிந்தவர் |
| 21. பிச்சைக்காறன்(காரன்) சத்தி எடுத்தது போலை | அழுக்கு, விரசம். |
| 22. மொழுமொழுவெண்டு பூசணிக்காய் போலை | உடற்கொழுப்பு |

மக்கள் நாள்தோறும் பழகி, பயின்று வரும் பொருள்களைக் கையாண்டு உவமிப்பதன் மூலம் தம் உள்ளக் கருத்துக்களை எவ்வளவு தெளிவாகப் புலப்படுத்துகின்றனர் என்பதை மேற்குறித்த உவமைகள் மூலம் தெளியலாம். போலை என்ற உவமவுருபுக்கு மாற்றாக 'மாதிரி' என்ற சொல்லைப் பெரும்பாலும் கையாள்வதும் இவ்விடத்தில் எடுத்துக் காட்ட வேண்டியதே.

உவமை போலவே உருவகங்களும் உயிர்த்துடிப்போடு, எதார்த்தமாகக் கையாளும் திறனுக்கும் சில எடுத்துக்காட்டுக்கள் தரப்படுகின்றன.

உருவகங்கள்:-

| | |
|---|---|
| 01. அரிப்பான் | (தமக்கு உதவுபவரை) எப்போதும் அதைத்தா இதைத்தா என்று கேட்டு நச்சரிப்பவன். |

| | |
|---|---|
| 02.அவித்தல்(அவிக்கிறான்) | ஏமாற்று, ஏமாற்றுபவன். |
| 03.அறுவான் | அழிந்துபோவான் என்ற பொருளில் வரும் வசை (அறுந்து போவான் எனவும் கூறுவர்) |
| 04.உலக்கை | முட்டாள் (உலக்கை இடித்தல் ஒன்றையே மீள மீளச் செய்யும்!) |
| 05.ஊர்க்குருவி | விடுப்பார்வங் காரணமாகஊராரின் அந்தரங்கங்களை அறிந்து வெளிப்படுத்துபவர். |
| 06.ஊமைக்குழல் | விளக்கமின்றியும் சுவையின்றியும் ஓரே சீராகப் பேசுபவர். |
| 07.ஒட்டுண்ணி | பிறரைப்பற்றி நின்று அவர்களின் செல்வத்தை உறிஞ்சுவோர். |
| 08.கட்டைப்புட்டு | குட்டையான ஆள் |
| 09.கயிறு திரித்தல் | ஏமாற்றல் |
| 10.கரிச்சட்டி | கறுத்த நிறமுடையவர் |
| 11.கரிக்குருவி | கறுத்த நிறமுடையவர் |
| 12.கரைச்சுக் குடித்தல் | ஒரு விடயத்தை முழுமையாக ஆராய்ந்து கற்றல். |
| 13.கல்லுப் பிள்ளையார் | மௌனமாய் ஆடாது அசையாது (சோம்பலாயோ, பிடிவாதமாகவோ அமர்ந்திருப்பவர்.) |
| 14.களிமண் | மூளை வளர்ச்சியின்மை, முட்டாள் தனம் |
| 15.கறள் | நீண்டகால (மறைந்திருக்கும்) சீற்றம் |
| 16.காது குத்துதல் | ஏமாற்றுதல் |
| 17.கிணத்து(கிணற்று)த் தவளை | உலக அறிவு இல்லாதவர். |
| 18.குள்ளநரி | வஞ்சகமும், கபடமும் உள்ளவர். |
| 19.கைச்சுப்(கைத்துப்) போதல் | உறவில் ஏற்படும் பிளவு |
| 20.சம்பல்கட்டை | விளக்கமின்றிப் பாடமாக்குபவர். |
| 21.சண்டைக் கோழி | எப்பொழுதும் எதற்கும் சண்டை போடுபவர். |
| 22.சப்பறப்படல் | ஆடைஅணிகளை மிகையாக அணிபவர். |
| 23.சுடுதண்ணி(தண்ணீர்) | எப்பொழுதும் சிடுசிடுப்பாக எதற்கும் கோபமாய் இருப்பவர். |
| 24.சூக்காட்டல் | சண்டைசெய்யத் தூண்டுதல். |
| 25.சோத்து மாடு | எதற்கும் பயனற்றவர். |
| 26.தலைக்கனம் | தற்பெருமை, அகங்காரம். |
| 27.துலாக்கொடி (நெட்டைக் கொக்கு) | மிகஉயரமுள்ள தோற்றத்தினர். |
| 28.பண்ணையன் | சோம்பேறி, செயற்றிறம் அற்றவர். |
| 29.பரதேசி (பிறநாட்டவர், அந்நியர்) | இழிந்தவர் |
| 30.பறையடித்தல் | மறைவாக வைத்திருக்க வேண்டியவற்றை வெளிப்படுத்தல். |
| 31.பித்தலாட்டம் (பித்தளை ஆடகம்) | ஏமாற்றுதல். |

| | |
|---|---|
| 32.புளிச்சுப்போதல் | அலுப்பு ஏற்படல். |
| 33.பேய்க்காட்டல் | ஏமாற்றுதல். |
| 34.மட்டையடித்தல் | வேறு வேலையின்றி அலைதல். |
| 35.மாம்பழம் | சிவந்த மேனியருக்கு உருவகம். |
| 36.(முசுறு(குரங்கு), முசுடு | சிடுசிடுப்பானவர். |
| 37.முந்திரிக்கொட்டை | எதற்கும்(பிறரிலும்)முந்திக்கொண்டு பேசுபவர், நடப்பவர். |
| 38.முழுப்பனி | அசட்டுத்தனமாகப் பேசுபவர், செயற்படுபவர். |
| 39.மொக்கு(மோடு) | முட்டாள். |
| 40.வால் | சேட்டையும் குறும்பும் மிக்கவர். |
| 41.விழுது(ஆலம்விழுது) | பயனற்றவர். |
| 42.வெள்ளையப்பம் | (கவர்ச்சியற்ற) வெளுப்பு நிறத்தினர் |
| 43.வெருளி | அஞ்சுபவர், பேதையர் |
| 44.றீல்கட்டை | குள்ள உறுப்பினர் ஆயினும் சுறுசுறுப்பானவர். |

பேச்சு வழக்கிலே ஓசை நயத்தையும் ஒலி நயத்தையும் பயன்படுத்துவதிலும் மக்களுக்கு ஆர்வம் உண்டென்பதற்கும் சான்றுகள் உள்ளன. இத்தகைய சொற்கள் சொற்றொடர்கள் இனிமைபயப்பதோடு கூறும் கருத்துக்கு அழுத்தமும் வழங்குவன. தமிழ் 10ஆம் பாடநூலிலே இத்தகைய சொற்கள், சொற்றொடர்கள் பலவும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதே. ஆனால் அவை பெரும்பாலும் எழுத்து வழக்கினையே முதன்மைப் படுத்தல் காணலாம். பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து எடுக்கப்பட்டனவாய் அவை உள்ளன. இவை மாணவருக்குப் பெரும் சுமைகள் என்றே கூற வேண்டும். இன்று வழக்கிழந்தனவாயுள்ளவற்றை மாணவர் தலைகளுக்குள்ளே திணிக்க முற்படுவது பெருங் கொடுமை

மக்கள் நாள்தோறும் கையாண்டு வரும் ஒலிநயச் சொற்றொடர்களும் கருத்து, உணர்ச்சி அழுத்தச் சொற்றொடர்களும், ஒலிப்பிசைச் சொற்களும் மிகப் பலவாய் இருக்கக் காண்கிறோம். அவற்றிற் சிலவற்றை வகைப்படுத்தித் தருவதும் காலத்தோடு இணைந்த மொழித்தொண்டு என்பதற்கு ஐயம் இல்லை. அவற்றுட் சில வருமாறு.

**ஒலிப்பிசைச் சொற்கள்**

| | |
|---|---|
| 01. கணீர்(மணியோசை)- | அவன் குரல் கணீர் என்றிருந்தது. |
| 02. கலீர் (சிலம்பு, மெட்டி ஓசை) | அவளின் சதங்கை ஒலி கலீர் கலீர் என்று கேட்டது.(நூபுரத்தின் ஓசை கலீர் கலீர் என- திருப்புகழ்) |
| 03. சடக்(விரைவு) | சடக் என்று அவன் விழுந்த ஒலி கேட்டது. |
| 04. சடார்-திடீர்(உடனடி) | சடார் என்று அவன் என்கன்னத்தில் அறைவான் என்று நான் எதிர்பார்க்கவில்லை. |
| 05. படக்(முறிவொலி) | அந்தத் தடியை அவன் படக் என்று முறித்தான். |
| 06. படார்(வெடிஒலி) | பட்டாசு படார் என்று வெடித்தது. |
| 07. பளீர்(பளீர்)-(ஒளிவீச்சு) | அவளுடைய வைர அட்டிகை பளீர் பளீர் என்று ஒளிர்ந்தது. |
| 08. மளார் (உடனடி) | அவன் தரையில் மளாரென்று வீழ்ந்தான். |

இவையும் இவைபோல்வனவும் எழுத்தாளரின் கதைகளிலே முன்பு அதிகமாக இடம்பெற்றன. ஆனால் இன்று சிறுவர் கதைகளிலேதான் இவற்றைப் பெருமளவு காணலாம். எழுத்தாளர் இவற்றை இயன்ற அளவு தவிர்க்கின்றனர். ஓசைத் தன்மை தரும் ஆழமற்ற பொருளமைதியால் பயனில்லை என்பது அவர்களின் கருத்துப்போலும். எதுகைச் சொற்றொடர்கள் (அக்கம்பக்கம், அறக்கப்பறக்க, இசக்குப்பிசக்கு, தட்டிக்கொட்டி, அற்பசொற்பம், ஏச்சுப்பேச்சு), மோனைச் சொற்றொடர்கள் (அண்டை அயல், ஈனஇரக்கம், தயைதாட்சணியம், கொட்டிக்குலைத்தல், திக்குத்திசை, வேலைவெட்டி), இரட்டைச் சொற்றொடர்கள் (கணகண, கறகற, குடுகுடு, குளுகுளு, குறுகுறு) முதலாகச் சாதாரண பேச்சுவழக்கிலே கையாளப்படுவன பலவாக உள்ளன. இவை பேச்சை உயிர்த்துடிப்பாக்குவதோடு எழுத்திலும் ஓர் எதார்த்தத்தை ஏற்படுத்தப் பயன்படுகின்றன.

மேலே தரப்பட்டவை யாவும் பொரும்பாலும் யாழ்ப்பாண நகரிலும் அடுத்துள்ள நாட்டுப்புறங்கள் சிலவற்றிலும் கேட்டவை, எழுத்து வடிவிலும் சில இனங்காணப்பட்டன. இலங்கையிலே தமிழ் வழங்கும் பிரதேசங்கள் பலவற்றிலும் இன்னும் பெருமளவு சொற்கள், சொற்றொடர்களைத் தொகுத்துத் தருவது மிகுதியும் பயன்தரும் என்பதே எனது நம்பிக்கை.

## தேன் வந்து பாயுது காதினிலே

பாரதியாருக்கு சந்தோஷம் வந்தால் தலைகால் புரிவதில்லை. அவருக்குச் சந்தோஷம் வரவேண்டும் என்றால் செந்தமிழ்நாடு என்ற யாராவது சென்னால் போதும்.

செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே.

செந்தமிழ்நாடு என்று யாராவது கூறிவிட்டால் பாரதியாரின் காதிலே தேன்வந்து பாய்கின்றதாம். தேன் வாயில் பாய்ந்தால் சுவையாகத்தான் இருக்கும். நாவுக்குத்தான் தேனின் சுவைதெரியும். தேன் காதினிலே வந்து பாய்ந்தால் எப்படி இருக்கும். அதனால்தான் பாரதியருக்கு தலை கால் புரிவதில்லை என்றேன்.

கவிஞர் கண்ணதாசன் தனது சினிமாப்பாடல் ஒன்றில் தலைவனை எண்ணி காத்திருந்த தலைவி, தலைவன் வந்துவிட்டான் என்ற சொல்லைக் கேட்டவுடன் அடைந்த மகிழ்ச்சியை

"வந்தான் என்றதும் மங்கை முகத்தில்
செந்தேன் பாய்ந்த தம்மா"

என்று வர்ணிக்கின்றார். பாரதியாராவது தேன்வந்து காதினிலே பாய்வதாகப் பாடினார். ஆனால் கண்ணதாசனோ தேன் முகத்திலே பாய்வதாக பாடிவிடுகிறார்.

பாரதிக்கும், கண்ணதாசனுக்கும் இந்தத் தவறுகளைச் செய்ய வழிகாட்டியவர் கவிச்சக்கரவர்த்தி கம்பரேதான். நாட்டின் வளத்தைக் கூறும் கம்பர்" காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்" என்று ஒரு வரியை இராமாயணத்திலே பாடிவிடுகிறார்.

செவியினால் கனியின் சுவையை நுகரமுடியாது. ஆனால் கம்பரோ கோசல நாட்டிலே வழங்கிவரும் காதைகள் எல்லாம் செவிநுகர் கனிகளைச் சொரிகின்றன என்றே கூறுகிறார்.

இந்த மூன்று கவிஞர்களும் இப்படிப் பாடியது ஆழ்ந்து பொருள்கொள்ளத்தக்கது. தேன்வாயிலே பாய்ந்தால் வரும்சுவை செந்தமிழ்நாடு என்ற சொல்லைக்கேட்டதும் பாரதிக்கும் ஏற்படுகிறது. அதையே அவர் "தேன் வந்து பாயுது காதினிலே" என்று சுருக்கியிருக்கிறார். கம்பரும் கனியின் பயன்பாட்டை சுவையை மனதில் எண்ணி "செவிநுகர் கனிகள்" என்று சுருக்கி இருக்கிறார்.

இவர்களது பாடல்கள் பிழை என்றும் சிலர் வாதிடலாம்.ஆனால் அங்கீகரிக்கப்பட்ட புலவர்கள் என்ற அடிப்படையில் அவர்களது தவறுகள் புதுமைகளாக ஏற்றுக் கொள்ளப்படத் தக்கன.

# இலக்கிய சர்ச்சை

மகாகவி பாரதியாரின் "காணி நிலம் வேண்டும் பராசக்தி.........." பாடலைப் படித்தபொழுது காணி என்றும் நிலம் என்றும் என்ன வித்தியாசம்? காணி வேண்டும் என்றோ அன்றேல் நிலம் வேண்டும் என்றோ பாரதியார் பராசக்தியை வேண்டிப் பாடியிருக்கலாமே. அதைவிடுத்து காணிநிலம் வேண்டும் என்று பாடுகிறாரே ஏன் அப்படிப் பாடுகிறார்?

தமிழ் அகராதியிலே காணி என்பது நிலஅளவொன்றில் 1/80 பங்கு என்று இருக்கின்றது. அப்படியாயின் 1/80 பங்குதான் பாரதியாருக்கு தேவையாக இருந்தது. பேராசை இல்லாத புலவன் தான் பாரதி. அந்தப்பாடலில் வரும் அவரது ஆசைகள் அந்தக் காணி நிலத்திலே அமையக் கூடியதாக இல்லையே.

"தூணில் அழகியதாய் - நன்மாடங்கள்
 துய்ய நிறத்தினவாய் - அந்தக்
காணி நிலத்திடையே - ஓர்மாளிகை
 கட்டித்தர வேண்டும்! அங்கு
கேணி அருகினிலே - தென்னைமரம்
 கீற்றும் இளநீரும்
பத்துப் பன்னிரண்டு - தென்னைமரம்
 பக்கத்திலே வேணும்---"

இத்தனை ஆசைகளும் சிறிய அளவுள்ள காணிநிலத்தில் அமைக்கவே முடியாதே! அப்படியென்றால் காணி நிலம் என்று பாரதி குறிப்பிடுவதுதான் என்ன?

காணி என்பதற்கு இன்னொரு பொருள் உண்டு. வழிவழியாக உரிமையாக இருந்துவரும் நிலத்தைக் காணிநிலம் என்று கூறுவதுமரபு. - இன்றும் உறுதிக்காணி என்றே குறிப்பிடுகின்றோம். உறுதிநிலம் என்று சொல்வதில்லை பாரதிக்குத் தான் விரும்புபவை அமைய வேண்டிய நிலம் தனது வழிவழியாக உரிமையில் வந்தகாணி நிலமாக இருக்கவேண்டும் என்பதே ஆசை. அப்போதுதான் அதை யாரும் அபகரிக்கமுடியாது. மற்றவர்களின் தலையீடுகள் இருக்காது. தனது மனவேட்கைப்படியே சுதந்திரமாக தனது ஆசைகளை அங்கே இருந்து அனுபவிக்கலாம். அதனைக் கருதியே காணிநிலம் வேண்டும் என்று பாடினார் பாரதியார்.



சிறுகதை

# யுகங்கள் கணக்கல்ல

ஜனாபா நா.சேகு இஸ்ஸதீன் (கவிதா)

கதவு சிறிது திறந்திருக்கிறது. அதன் வழியே மீரா கட்டிலில் குப்புறப் படுத்திருப்பது நன்றாகத் தெரிகிறது. அவளை அந்த நிலையில்தான் பார்ப்போம் என்று நான் எதிர்பார்க்காமல் இல்லை. ஆனாலும் ஆத்திரம் பற்றிக் கொண்டு வரத்தான் செய்தது. கீழுதட்டைப் பற்களின் இடையே கடித்துக் கொண்டு "மீரா" என்று கூப்பிட்டேன். எவ்வளவோ முயன்றும் அந்தக் குரலில் இருந்து தேவையில்லாத பதட்டத்தை மறைக்க முடியவில்லை.

பரபரவென்று வெள்ளைப் பேப்பர்களையும் பேனாவையும் தலையணைக் கடியில் திணித்துவிட்டு "என்னம்மா---?" என்று கேட்டபடி அவள் எழுந்து வந்தாள். அவள் குரலிலும் அதே பதட்டம் தொனித்ததை நான் கவனிக்காமல் இல்லை.

"தம்பி அப்படியே சிமெண்டில் சாய்ந்து நித்திரையாய்ப் போயிருக்கிறான். சுவாமி அறைக்கு விளக்கேற்றச் சொல்லி எத்தனை நேரமாய்ப்போயிற்று? ஒன்றையும் கவனிக்காமல் அங்கே என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டேன். ஏதோ கேட்டேனே ஒழிய, கேட்டுவிட்ட பின்தான் மீரா உண்மையை என் முகத்துக்கு நேரேயே கூறிவிடுவளோ என்ற பயமும், அப்படிக் கூறிவிடக் கூடாதே என்ற தவிப்பும் ஏற்பட்டன.

"மத்ஸில் ஒரு பிராப்பளம் அம்மா. நாளைக்குச் செய்து வரும்படி ஒரு ஸ்ருடன்ற் தந்தாள் - அதுதான்" என்று இழுத்தபடி மீரா நிற்காமல் நகர்ந்தாள்.

நான் அதிலேயே விறைத்து நிற்கையில் மீரா தோளில் துவளும் குழந்தையைத் தூக்கியபடி படுக்கையறைக்குப் போவது தெரிகிறது. நான் விரும்பினால் ஒரு நொடியில் அவள் அறைக்குப் போய் அவள் செய்துகொண்டிருந்த "மத்ஸ்" ப்ராப்ளத்தின் சிக்கலை விடுவித்துவிட முடியும். ஆனால் அதன் பின்---? இவ்வளவு நாளும் என் அந்தரங்கத்துக்குள்ளேயே புதைத்து விட விரும்பிய உண்மையை எனக்குத் தெரியும் என்று அவளுக்கு முன்னால் நிரூபித்துக் கொண்டு அதன் மூலம் அவளை இந்தச் சிக்கலில் இருந்து மீட்டுக் கொள்ளும் ஒரே வழியை அடைத்துவிட நேருமா? இவ்வளவு இங்கிதமில்லாதவளாக நடந்து கொண்டுவிட்ட பிறகு எந்த முறையில் என்னால் அவளைத் திருத்திவிட முடியப்போகிறது?

பின்னேரம் கிணற்றடிக்குச் சென்றபோது மீரா கிணற்றுக் கட்டின் மீது படுத்திருப்பது தெரிந்தது. அவள் இதழ்களில் இலேசான புன்னகை ஒரு கையைத் தலைக்கடியில் வைத்து, மறு கையைக் கிணற்றினுள் விட்டபடி படுத்திருந்த அந்த நிலையிலும், சுற்றிலும் இருண்டு கொண்டு வருகின்ற அந்தச் சூழலிலும் அவள் நினைவுகள் இல்லை! கிணற்றினுள் நெளியும் வட்ட வட்டமான அலைகளில் யார் முகத்தைக் கண்டு அவள் அப்படிச் சிரித்துக் கொண்டிருக்கிறாளோ? யார் முகமோ? எனக்குத் தெரியாதா? மீரா! உன் சாதி என்ன? குலமென்ன? அவன்--? உன் மாமாவோ தாத்தாவோ எப்படியடி இதற்குச் சம்மதிப்பார்கள்? அவர்கள் வேண்டாமே.

நான்தான் எப்படிச் சம்மதிப்பேன்? சம்மதித்துவிட்டு மற்ற பெண்ணை எங்கே கொண்டு போய்த் தள்ளுவேன்? வேண்டாம் மீரா மறந்துவிடு! நீ-- நீயாகவே உணர்ந்து அவனை மறந்துவிடு. நான் உன்னைப் பழைய மீராவாகவே நினைக்கிறமாதிரி நடித்துக் கொண்டிருக்கிறேன். நீயும் உன் மனதில் இடையே முளைத்த இந்தச் சலனத்தை இடையிலேயே மறந்துவிட்டு பழைய மீராவாக மாறிவிடு!

மனதுக்குள்ளாகவே பேசிக்கொண்டு மெதுவாகப் பின் வாங்கினேன். இருட்டி வெகு நேரமான பின்தான் மீரா வீட்டுக்குள் வந்தாள்.

ஒரு நாள் - வெள்ளிக்கிழமை - நான் கோயிலுக்குப் போய்விட்டு வந்தேன். மீராவைக் கண்ணில் காணவில்லை. சின்னப் பெண்ணிடம் "அக்கா எங்கே"--? என்று கேட்டேன். "மாட்டுக்கு வைக்கோல் போடப்போனாள்" என்று கூறினாள். வீட்டுக்குள் எல்லாப் பொருட்களும் போட்டது போட்டபடியே கிடந்தன. எனக்கு ஆத்திரமாய் வந்தது. நான் வெளியே போன நேரம் தொடக்கம் மீரா உள்ளே இல்லை என்பதுதான் அதற்கு அர்த்தம். வெளியே இவ்வளவு நேரம் என்ன லயிப்பு வேண்டிக்கிடக்கிறது? எங்காவது தனியாக உட்கார்ந்து கொண்டிருப்பாள் என்று தெரியாதா எனக்கு? காதல். கண்மூடிக் காதல்! டாக்டரின் மனைவியாகிவிடலாம் என்ற நினைவில் சாதி விட்டுச் சாதி போய்த் திருமணம் செய்து கொண்டு அம்மா- தம்பி- தங்கை- சுற்றம் எல்லாம் மறந்து தனக்காக மட்டும் மகிழ்ச்சியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற கேவலமானவளாக நான் பெற்ற மகளைப் பற்றி நினைப்பது என் மனதுக்கே என்னவோ போல்தான் இருந்தது. தற்செயலாக ஜன்னலடிக்குச் சென்ற போது மாட்டுக்கொட்டகை தெளிவாகத் தெரிந்தது. கட்டைத் தென்னங்கன்றின் ஓலையைப் பிடித்தபடி வானத்து நிலவையே பார்த்தபடி மீரா நின்று கொண்டிருந்ததும் தெரிந்தது. என் மனதில் எழுந்த கணநேர குருட்டு வெறியின் ஆக்ரோஷத்தில் அவளை அப்படியே இழுத்து வந்து அறையலாமா? என்று தோன்றியது. உள்ளே வருகிற நேரம் வரட்டும் என்று காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினேன்.

சின்ன மகளும் மகனும் எட்டு மணிக்கு சாப்பிட வந்தார்கள். "அக்கா எங்கே?" என்று சின்னப் பெண்ணிடம் மறுபடியும் கேட்டேன். "அறையில் இருக்கிறா" என்றாள் அவள். வழக்கத்தில் இவர்களுடனேயே சாப்பிட வந்துவிடும் அவள் வராதது என் மனதுக்கு நெருடலாகவே இருந்தது. ஒரு நிமிடம் அவள் தென்னங்கீற்றைப் பிடித்தபடி ஏக்கத்துடன் நின்ற காட்சி நினைவுக்கு வந்தது. மனம் வக்கரித்துக் கொண்டது. "ஏன் இவளுக்கு இந்த வேண்டாத காதலும் ஏக்கமும்? இவளுக்குக் காதலைப்பற்றி என்ன தெரியும்? வெறும் மனமயக்கத்தைக் காதல் என்று எண்ணிக் கொண்டு பாழாப் போகத்தான்" என்று மனத்தோடேயே எண்ணிக் கொண்டு நேரே அவள் அறைக்குச் சென்றேன்.

நினைத்தபடி அவள் குப்புறப்படுத்து எழுதிக் கொண்டுதான் இருந்தாள். பக்கம் பக்கமாக எழுதிக் குவிப்பதற்கும் தனித்தனியாகப் பிரிந்து போய் யோசித்துக் கொண்டு நிற்பதற்கும் அவளுள் தான் எத்தனை அந்தரங்கமோ?

"மீரா" என்று குரல் கொடுத்தேன். அவள் பதறித்துடித்து எழவில்லை. என்னை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு மறுபடியும் எழுதத் தொடங்கினாள். இரண்டு மூன்று வரிகள் எழுதியதும் கடிதம் முடிந்திருக்க வேண்டும். "என்றும் உங்கள் மீரா" என்று கையெழுத்திட்டதை நான் பார்த்துக்கொண்டுதான் நின்றேன். அவள் தாள்களை ஒன்றாக்கி நிதானமாக மடித்தாள். பொங்கி வந்த ஆத்திரத்துக்கு அணையிட்டவாறு நின்றேன் நான். மடித்த கடிதத்தை ஒரு கவரில் செருகினாள். "முடிவில் எல்லாம் முடிஞ்சு போச்சம்மா" என்றாள் பெருமூச்சுடன்.

எனக்கு ஆத்திரம் மாறி அந்த இடத்தைக் குழப்பம் எடுத்துக்கொண்டது- வார்த்தை எழும்பாமல் ஆயிரம் கேள்விகளைக் கண்களிலேயே வைத்து அவளைப் பார்த்தேன்.

"உங்களுக்கு எல்லாம் தெரியும் என்று எனக்குத் தெரியும். அம்மா இனி எதுவும் இல்லை. முடிஞ்சு போச்சு". மீராவே பேசினாள்.

"தெய்வமே என் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்தாயே" என்று கடவுளுக்கு நன்றி செலுத்தலானேன் நான். மீரா தொடர்ந்து பேசினாள்.

" நீங்களும், ஏன் அவரும் கூட நினைப்பது போல சாதி என்ற அர்த்தமற்ற சம்பிரதாயத்துக்காக நான் இந்த முடிவுக்கு வரவில்லை. காதல் என்பது ஒருவனுடையதும் ஒருத்தியுடையதுமான இதயங்கள் சம்பந்தப்பட்ட விஷயந்தான். ஆனால், அந்த இரண்டு இதயங்களின் மலர்ச்சிக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் கடமையைப் புறக்கணிக்கும் போது காதல் காமமாகிவிடுகிறது. அம்மா- நான் அவரைத் திருமணம் செய்வது எவருக்குமே விருப்பமில்லை என்பது எனக்குத் தெரியும். ஐயாவும் இல்லாமல் இவ்வளவு காலமும் கஷ்டப்பட்டு என்னை ஆளாக்கியிருக்கிறீர்கள். இவ்வளவு காலமும் திரும்பிப்பார்க்காமல் இருக்கிற உறவுக்காரர்களை நம்பி உங்களையும் தம்பி, தங்கைகளையும் நிர்க்கதி யாக்கிவிட்டு அவருக்குப் பின்னால் நான் போயிடமாட்டன்--"

நான் அவசரமாக ஏதோ கூற வாயெடுத்ததும் அவள் ஒரு உயிரற்ற சிரிப்புச் சிரித்தாள்.

"தெரியும் அம்மா. எந்த விதத்திலும் என் வாழ்வை நீங்கள் பலி கேட்கமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்! பிரச்சினை இங்கே மட்டுமல்ல என்னைக் கடமை அழைப்பது போல அவரையும் கடமை அழைக்கிறது. உயர்ந்த சாதியைச் சேர்ந்த பெண் என்பதைத்தவிர, என்கூட ஒரு சதத்தையும் சீதனமாகக் கொண்டுசெல்ல என்னால் முடியாது. அவருக்கு நான்கு தங்கைகள் தங்கள் சொத்தை எல்லாம் அண்ணன் படிப்பதற்காக விட்டுக் கொடுத்துவிட்டு வாழ்வுக்காக அண்ணனையே எதிர்பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள். இப்போது அவர் காதலுக்காக அவரையும் தியாகம் செய்து விட முடியுமா அம்மா? முடிந்தாலும் அப்படிப் போவது சரியா அம்மா? அவருக்கு இது புரியவில்லை. இதில் அதைத்தான் புரியவைத்திருக்கிறேன். .இனிக் குழப்பமில்லை"

இவ்வளவையும் ஒரே மூச்சில் கூறிவிட்டு "வாருங்கள் சாப்பிட" என்றாள் மீரா. இதை அவள் எத்தனை துக்கத்தோடு கூறினாளோ அத்தனைக்கு நான் அதை உணரவில்லை! இது ஒரு இளமைக் கனவே என்றும் காலப் போக்கில் மறந்து விடுவாள் என்றும் எண்ணியவளாக அவளுக்குச் சாப்பாடு போடஅழைத்துச் சென்றேன்.

அதன் பிறகு ஒரு நாள் என் மாமனார் எங்கள் வீட்டுக்கு வந்த போது மீராவுக்கு ஏற்ற மாப்பிள்ளை ஒருவன் இருக்கிறான் என்றும் பார்கலாமா என்றும் கேட்டார். நான் "மீராவிடம் கேளுங்கள்" என்று தூண்டினேன். என்ன சொல்லிவிடுவாளோ? என்று உள்ளே எனக்குப் பயம்தான். மாமா சொல்லச் சொல்ல மீரா பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தாள். எதிர்த்து எதுவும் சொல்லவில்லை. அந்தத் தைரியத்தில் நாலு வார்த்தை மாமாவுக்கு அனுசரணையாகப் பேசலானேன். மாமா போய் விட்டார். அன்று மீரா மீண்டும் குப்புறப் படுத்துக் கொண்டு விட்டாள். சாடையாக விம்மிக் கொண்டிருக்க வேண்டும். நான் போய் "மீரா" என்று கூப்பிட்டதும் அழ ஆரம்பித்து விட்டாள்.

பழைய ஞாபகம் மறக்கவில்லை என்று தெரிந்தது. என் கைகளை இறுக்கமாகப் பற்றிக் கொண்டு அழுகையும் விம்மலுமாக வெடித்தாள்.

"அம்மா அவர் தாழ்ந்த சாதிக்காரர் என்பதால் என் கைபிடிக்கத்தான் மறுத்தீர்கள். ஆனா அதே காரணத்துக்காக என் இதயத்தில் வாழுகிற தகுதிகூட அவருக்கு இல்லை என்று நினைக்காதீங்க. அம்மா அவரை மறந்துவிட்டு இன்னொருத்தரைக் கல்யாணம் செய்து கொள்வது இந்த ஜன்மத்தில் என்னால் முடியாது". பெரிய விம்மல் ஒன்றைச் சமாளித்துக் கொண்டு பேசினாள்.

"கிரிதரனையே நினைத்துக் கொண்டிருந்த மீராவை ராணாவுக்குக் கட்டி வைத்தாங்களே என்னத்தைக் கண்டாங்க? அவளைச் சாகடிக்கத்தான் முடிந்ததே தவிர அவளை விட்டு அவன் நினைவைப் பிடுங்கிவிட முடிந்ததா அம்மா? " சிறிது நேரம் என் கைகளைப் பிடித்தபடி விம்மினாள். பின் சிறிது சிறிதாக விம்மல் தணிந்தது. என் கைகளை விடுவித்துவிட்டு அழுகைக் கலப்பற்ற குரலில் எங்கேயோ பார்த்துக்கொண்டு பேசினாள்.

" நான் பச்சைக் குழந்தையில்லையம்மா. கிட்டத்தட்ட என் வயதில்தான் திலகவதியார் கலிப்பகையாரை இழந்திருக்கலாம். அவருக்கிருந்த மன உறுதியையும் நியமத்தையும் அந்த யுகத்துக்கே சாசனமெழுதியாச்சாம்மா? வழி காட்டிகள் என்று அவர்களையெல்லாம் உயர்த்தி வைத்துவிட்டு கண் மறைவில் நின்று கொண்டு தவறு செய்யும்படி கேட்பது நியாயமாகுமா அம்மா? "

எனக்கு மீராவின் முகத்தைப் பார்க்கத் தைரியமில்லை. இவள் எவ்வளவு தெளிவாகச் சிந்தித்திருக்கிறாள்? இத்தனை பெரிய மனப்பக்குவம் இத்தனை சிறிய மீராவிடம் வாய்த்திருக்கிறதை வியந்த அதே சமயம் வாழ்க்கையின் மிச்சமிருக்கிற பகுதியின் மேடுபள்ளங்களிளெல்லாம் தன்னந்தனியளாக மீராவை எண்ணிய போது எனக்கே மிரட்சியாய் இருந்தது. திலகவதியார் வாழ்ந்த யுகமா இது? " உன் உள்ளத்திலிருக்கிற உன்னதத்தைச் சமுதாயம் புரிந்து கொள்ளாதே மீரா. பழிசுமத்தி வீழ்த்தி விடுமே" என்று மட்டும் சொன்னேன். அவள் சிரித்தாள்.

"என் மனதில் இருக்கிற உன்னதத்தைச் சமுதாயம் உதாசீனம் செய்யும் என்பதற்காக அது திரைபோட்டு மூடிவைக்கிற பலவீனங்களுக்கு நான் தோற்று விட வேண்டுமா அம்மா? ஆயிரம் இதயங்களின் பலவீனங்களுக்கு வக்காலத்து வாங்குகிற விதத்தில்தான் இந்தக் காலத்துச் சமுதாயம் இருக்கிறதே ஒழிய ஒரு சில இதயங்களின் பலத்துக்கு மதிப்பு கொடுக்கின்ற விதத்தில் இல்லையே! எல்லாச் சராசரி இதயங்களினுடையவும் பலவீனங்களுக்குப் போடப்படுகின்ற திரை எனக்குத் தேவையில்லையம்மா. என் மனதுக்கும் ஆத்மாவுக்கு சரி என்றுபடுகின்ற இந்த வழியில் வாழ்ந்து கடைசிக் கட்டத்தில் ஆண்டவன் முகத்தைத் தைரியமாக என்னால் பார்க்கமுடியும் என்றால் உங்களுக்கோ சமுதாயத்துக்கோ என் ஆத்மாவை விற்றுவிடுவதில் எந்த வித நியாயமுமே இல்லையம்மா!" நான் மீராவைப் பார்த்தேன். "ஆண்டவன் சந்நிதியில் யுகங்கள் கணக்கல்ல அம்மா. மனங்கள்தான் கணக்கு" என்று சொல்கிற திலகவதியாராக அவளை உணர்ந்தேன். ஆசையுடன் வளர்த்த பெண் சந்நியாசினிபோல் போகிறாளே என்ற துயரத்தையும் மீறி இந்தத் தலைமுறையிலும் மென்னையான பெண்மை தனக்கே உரிய பலத்தோடு வாழ்கிறது என்று உணர்ந்த திருப்தி அலையாக எழுந்தது.



# வழக் கொழிந்து வரும் யாழ்ப்பாணப் பழைமைகள்

**செல்லப்பா நடராசா**

பாராளுமன்ற முன்னைநாள் சிரேஷ்ட ஹன்சாட் அறிக்கையாளர்

யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பழைமைகள், பாவனைகள் பல இன்று மெல்ல மெல்ல வழக்கொழிந்து வருகின்றன. உதாரணங்கள் பலவாகும்.

## சந்தனம்

சைவத் தமிழ் மக்களது அனைத்துக் கிணற்றுக் கட்டுக்களிலும் சந்தனம் அரைக்கும் கற்களை வைத்துக் கட்டி, சுத்தமான சந்தனக் கட்டைகளையும் பயன்படுத்திய பழைமையை இன்று இழந்து நிற்கின்றது யாழ்ப்பாணம். நீராடிய பின்னர் விரதகால அனுட்டானங்களைப் பார்க்கையில் சுத்தமான நறுமணம் கமழும் சந்தனத்தை அணிந்த பெருமை அன்றைய சைவ மக்கள் அனைவருக்கும் உரியது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காலத்தில் அனைத்து மாணவர்களும் பாடசாலை செல்கையில் சந்தனப் பொட்டுவைத்த வழமை கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை நீடித்து இன்று வழக்கொழிந்த நிலையிலுள்ள தென்றே கூறவேண்டும். யாழ்ப்பாணத்துத் திருக்கோவில்களில் கணிசமானவற்றில் சந்தனக் கற்களையோ சந்தனக் கட்டைகளையோ காணுவதும் அரிதாகிவிட்டது. தூய சந்தனம் கண்களைப் பேணும் பண்புடையதாய் திலகமாக அணியப்பெறுவது.

## திருநீறு

பண்டுதொட்டு யாழ்ப்பாணத்துச் சைவ மரபினர் தமக்குத் தேவையான திருநீற்றைச் சைவ ஆகம முறைப்படி வீடுகள் தோறும் தாமே தயார் செய்து அணிந்துவந்துள்ளனர். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கூறியவாறு மந்திரமாவதும் சுந்தரமாவதும் அந்தத் திருநீறேயாகும். இந்தக் கால நீறு எல்லாவற்றையும் திருநீறென்று கொள்ள முடியாது. மிகத் தூய்மையான திருநீறு அணியும் வழமை இந்நாட்களில் மெல்ல மெல்ல அதன் பண்டைய பெருமையை இழந்து வருகின்றது. தூய வெண்ணீறு கபாலத்தைப் பாதுகாக்கும் இயல்புடையது.

## கோவில் மரியாதை

நாவலர் பெருமானை ஒத்த பெரியவர்கள் ஒரு ஊருக்குப் பொது நிகழ்வொன்றுக்கு வருகை தருகையில் அத்தகையவர்களைக் கோவில் மரியாதைகளுடன் வரவேற்பது அந்தக்கால யாழ்ப்பாணத்துச் சைவ மக்களின் பண்பாடாகும். அதாவது கொடி, குடை, ஆலவட்டம், திருஅலகு, சங்கு,

சேமக்கலம், மேளதாளங்களுடன் பெரியவர்களை ஊர்முகப்பிலேயே எதிர் கொண்டு அழைத்து வரும் பழமையையும் இன்று காண்பது மிகமிக அரிதாகிவிட்டது. இத்தயை மரபு சிங்களக் கிராமங்களில் இன்று கூடப் பெரிதும் பேணப்படுவதை என்னால் அவதானிக்க முடிந்துள்ளது.

## குருவணக்கம்

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் காலத்திற்கும் முன்பிருந்தே மாணவர்கள் அனைவரும் குருவின் பாதம் பணிந்து பணிவிடைகள் பல செய்து பண்பாடுடையவர்களாக வளர்ந்தனர். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவருடைய நன்மாணக்கர்களுள் ஒருவர் இலக்கியகலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள். அவர் தமது குருநாதருக்கு அவரது இறுதிக்காலம்வரை தொண்டுகள் செய்து வாழ்ந்த பெருமைக்குரியவர். புலவர் அவர்கள் மறைந்தபோது பண்டிதமணி அவர்கள் பலமணி நேரம் தேம்பித் தேம்பி அழுதாராம். இவ்விதமாகக் குருபக்தி அன்றைய குடாநாட்டில் எங்கும் விரவிக் கிடந்தது. இத்தகைய மரபு காரணமாகவே யாழ்ப்பாணம் பண்பாட்டின் சிகரமாக விளங்கியது. இந்நிலையிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டுவிட்டது எனலாம்.

## புராணபடனம்

கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்துத் திருக்கோவில்கள் அனைத்திலுமே புராண படனம் முக்கியமானதோர் இடத்தை வகித்துள்ளது. ஒவ்வொரு கோவிற் பற்றிலும் புராண இதிகாசங்களுக்குப் பயன் கூறத்தக்க பண்டிதர்களும் நல்லாசிரியர்களும் நூற்றுக்கணக்கில் இருந்துள்ளனர். திருத்தலங்களில் புராண இதிகாசங்களை விரும்பிக் கேட்கும் மக்களும் நிறைய வாழ்ந்தனர். புராண படிப்புக்கள் வெறுமனே புராண படிப்புக்களாக மாத்திரம் அமைந்து விடுவதில்லை. அவை ஆன்மீக இலக்கிய இரசிகர்களுக்குப் பெருவிருந்தாகவும் அமைந்து விடுபவை. கேட்போர் பக்திச் சுவையிலும் இலக்கியச் சுவையிலும் திளைத்துப் போய்விடுவது வழக்கம். திருக்கோவில்களில் படிக்கப்பட்ட புராண இதிகாசங்களை மக்கள் வீடுகளிலும் படித்தனர். மகாபாரதம், இராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம் போன்றவை இவ்விதம் படிக்கப்பட்டன. சுருட்டுத் தொழிலகங்களிலும் தினசரி இராமாயண, மகாபாரதப் படிப்புக்கள் இடம்பெற்ற காலமொன்றும் இருந்துள்ளது. இத்தகைய படிப்புக்கள் நிகழும் இடங்களில் ஸ்ரீஇராமன், சீதை, இராவணன், வாலி, சுக்கிரீவன், அனுமான், கைகேயி, கூனி, கும்பகர்ணன், விபீடணன், மாரீசன் போன்ற பாத்திரங்களின் குணவியல்புகள் பற்றி வாதங்களும் எதிர்வாதங்களும் நிகழும். தர்க்கங்களில் ஈடுபடுவோர் இன்றைய பட்டிமன்றக்காரர்களைப் போலச் சூடான வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடும் வேளைகளில் சுருட்டுக் கைத்தொழிலகங்களும் களைகட்டி நிற்பதுண்டு. இதே போன்று மகாபாரதத்தைப் படிக்கையில் பஞ்சபாண்டவர்கள், துரியோதனனாதியோர், சகுனி மாமா, கிருஷ்ண பரமாத்மா போன்ற கதாபாத்திரங்கள் பற்றியும் கருத்து மோதல்கள் நிகழும். சுருட்டுத் தொழிலகங்கள் மறைய மறைய இவ்வாறான பழமைகளும் மெல்ல மெல்ல மறைந்துவிட்டன.

## திருவெம்பாவை ஊர்வலங்கள்

மார்கழிமாதத் திருவெம்பாவைக் காலங்களில் அதிகாலையில் யாழ்பாணத்துக் கிராமங்கள் தோறும் திருவெம்பாவைப் பண்ணிசை ஊர்வலங்கள் நடைபெறுவது மிக மிக நீண்டகால வழக்கம். மனதுக்கு இன்பமும் ஆத்ம சுகமும் பயப்பதோர் நிகழ்வு இது. இன்று இந்த வழக்கத்தையும் கிராமங்கள் தோறும் காணமுடியாத நிலையையும் காணமுடிகிறது.

## கந்தபுராண கலாசாரம்

கந்தபுராண கலாசாரத்தைப் போற்றி வாழ்ந்த மாண்பினர் குடாநாட்டு மக்கள். அவர்கள் பசுவைத் தாய்போல வணங்கினர். நாவலர் சொற்படி ஒழுகினர். நாவலர் போன்றவர்களைத் தெய்வமாக மதித்தனர். ஔவையார் சொற்படி வாழ்ந்தனர். குடும்பப் பிணக்குகளைப் பெரியோர்கள் தீர்த்து வைத்தனர். மூத்தோர் வார்த்தை அமிர்தமெனப் போற்றப்பட்டது. ஆயுள்வேத வைத்திய முறைப்படி உடல் நலம் பேணினர். குழந்தைகள் நான்கு ஐந்து வயது வரைகூடத் தாய்ப்பாலுண்டு வளர்ந்தனர். மாதர்கள் என்றுமே அழகை இழந்திலர். இந்தப் பழமைகள் எல்லாம் மங்கி வரலாறாகி வருகின்றன.

## கூட்டுக் குடும்பங்கள்

கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறைகளையே அந்தக்கால யாழ்ப்பாணக் கிராம மக்கள் கைக்கொண்டனர். துலாவின் துணைகொண்டு நீர்ப்பாசனம் நடைபெற்ற காலத்தில் இத்தகைய வாழ்வியல்புகள் மேலோங்கி நின்றன. பனை ஓலை வீடுகளால் குடாநாடு முழுக்க முழுக்க நிரம்பியிருந்த ஒருகாலத்தில் வெட்டிய ஓலைகளைக் கரம் போடுதல், பின்னர் வீடுவேய்தல் கூடக் கூட்டுறவு முறையிலையே நிகழ்ந்தது. கோவில் திருவிழாக்கள் ஒவ்வொன்றையும் பத்து இருபது குடும்பங்கள் ஒன்று சேர்ந்தே நடாத்தினர். அந்தக்காலப் பண்புகளெல்லாம் இன்று எவராவது கூறக் கேட்டு அதிசயிக்க வேண்டிய நிலையிலேயே கிராமங்கள் இருக்கின்றன.

## பனம்பழம் சுவைத்தல்

உணவுப் பண்டங்கள் அனைத்தும் உயர்வானவை. அவற்றுள் உயர்வு, தாழ்வு கற்பிப்பது எல்லாம் அவரவர் மனப்பான்மையைப் பொறுத்த விடயம். முக்கனிகளைப் போன்று பனம் பழங்களையும் சுவைத்து வாழ்ந்த வரலாறு உடையவர்கள் குடாநாட்டு மக்கள். பனம்பழம் சுவைத்தலும் வழக்கொழிந்த பழைமைகளுள் சேர்ந்துவிட்டது.

## பாட்டி வைத்தியம்

யாழ்ப்பாணத்தில் எமது பாட்டிமார்கள் கைக்கொண்ட பழைமை வாய்ந்த வைத்திய முறைகள் வழக்கொழிந்தாலும் இன்று கூட அவை நினைவு கூரப்படுபவை. பிரசவித்த தாய்மார்களின் படுக்கை அறைகளில் இரவில் வேப்பெண்ணெய்ச் சுட்டி விளக்குகளையே பாட்டிமார்கள் ஏற்றிவைப்பது அந்தக்கால

வழக்கம். தாயையும் சேயையும் எந்தவிதமான நோய்க்கிருமிகளும் அணுகாவண்ணம் அவர்களைப் பாதுகாத்த பெருமை பாட்டிமார்களுக்குரியது. மண்எண்ணெய் விளக்குகளை ஏற்றிக் குழந்தைகளின் படுக்கை அறைகளில் வைப்பதால் அவை கக்கும் புகையால் குழந்தைகளுக்குப் பெருந்தீங்குண்டாகும் என்பது பாட்டிமார்கள் கற்றுத் தெளிந்த பாடமாகும். வீடுகளில் சுகப்பிரசவமாகும் குழந்தைகளின் தொப்புளுக்கு வேப்பமரத்தில் அதன் பட்டைக்கு இடையே இருந்து பெறப்படும் செந்தூரம் போன்ற சிவந்த துகள்களைப் பூசிக் குணம் கண்டனர். தூதுவளை, கற்பூரவள்ளி, சீந்தில், கறுத்தப் பூக்கொடி இலைகளின் துணைகொண்டும் வரகரிசியின் மகிமையுடனும் தமது பேரக் குழந்தைகளின் ஆரோக்கியம் பேணிய பாட்டி வைத்திய முறைகளும் இன்று வழக்கொழிந்துவிட்டன.

## சுமைதாங்கிகள்

ஒரு காலத்தில் பிரதான வீதிகள் தோறும் பாவனையிலிருந்த சுமைதாங்கிகள் எனப்படுபவையும் இன்றைய குடாநாட்டில் இல்லா தொழிந்துவிட்டன. தலைச் சுமையாகவே வியாபாரிகள், விவசாயிகள் காய்கறி, கீரை, கிழங்கு, பழவகைகளை எடுத்துச் சென்று சந்தைப்படுத்திய காலத்தில் சுமைதாங்கிகளின் தேவை பெரிதும் உணரப்பட்டது. பிறரின் துணைஇன்றித் தமது தலைச் சுமைகளைத் தாமே நின்ற நிலையில் சுமைதாங்கிகளில் வைத்துவிட்டுக் களைப்பாறிய பின் மீண்டும் அவற்றை மக்கள் எடுத்துச் செல்வதுண்டு. இச்சுமைதாங்கிகளை இன்றுள்ள இளைய தலைமுறையினர் எவரும் அறியார். நெடுஞ்சாலைகள் தோறும் சுமைதாங்கிகள் அமைதலைப் பெரும் புண்ணிய கருமங்களுள் ஒன்றாகக் கருதி வாழ்ந்த பண்பும் இந்நாட்களில் சரித்திரமாகிவிட்டது. துலா, துலாக்கொடி, ஆடுகால், அச்சுலக்கை, நென்பு, கொண்டடி, பட்டை, பட்டைக்கல் பதப்பிரயோகங்களும் பொருளும் இந்நாட்களில் வழக்கொழிந்த நிலைக்குள் தள்ளப்பட்டுவிட்டன.

## கதிர்ப்பாய்கள்

யாழ்ப்பாணக் கிராமவாசிகளால் பெரிதும் பேணப்பட்ட மத்துக்கள், பத்தாயங்கள், வல்லுவங்கள், அட்டாளைகள், குத்துக்கண்ணிகள், உறிகள், கோர்க்காலிகள், கதிர்ப்பாய்கள் என்பனவும் இன்று பாவனையிலிருந்து அகன்றுவிட்டன.

## காலத்தின் தேவை

வேம்பின்பட்டை, இலை, பூ, விதை, எண்ணெய் ஆகியவற்றின் மருத்துவப் பயன்பாடுகளை எமக்கு எமது ஆயுள்வேத வைத்தியர்களும் பாட்டிமார்களும் உணர்த்திய காலமும் கரைந்துவிட்டது. பிள்ளைக்கற்றாளையின் மருத்துவப் பயன்பாடுகளை நாம் மறந்துவிட்டோம். இன்று அதன் மருத்துவப்பயன்பாடு அமெரிக்காவின் மருத்துவ நிபுணர்களால் பெரிதும் உணரப்பட்டுள்ளது. ஒரு மிகச் சிறிய பிள்ளைக்கற்றாளை நாற்றை யான் அண்மையில் அமெரிக்காவில் விலை கேட்டபோது இலங்கை நாணயப் பெறுமதியில் ஆறாயிரம் ரூபாவைக் கோரினார்கள். எமது பழைமைகள், வழமைகள் பல இன்றும் எமது காலத்தின் தேவையாகும். அவற்றை மறப்பதோ இழப்பதோ நாகரிகமாகிவிடாது. அது புத்திசாலித்தனமுமல்ல.



# திருக்குறளில் நவரசங்கள்

பண்டிதர், வித்துவான்

**க. குகதாசன்**

B. A., Dip.in Ed., S.L.E.A.S

நாடகமோ, காவியமோ பேச்சோ, கட்டுரையோ சிறப்புற அமைய வேண்டுமாயின் அவை1 நவரசங்களையும் உள்ளடக்கியனவாக மிளிரவேண்டியது அவசியமாகும். உலகியற் கருமங்களில் இந்த நவரசங்கள் முக்கியஇடத்தைப் பெறுகின்றன. எந்த ஒரு கருமத்திலும் ஏதோ ஒரு சுவை மேற்பட்டுத் தொழில் ஆற்றுவதை நாம் காண்கின்றோம். குறிப்பிட்ட ஒரு செயல், அற்புதம், சினம், கருணை, இளிவு, சாந்தம், இன்பம், அச்சம், நகை, வீரம் ஆகிய ஒன்பான் சுவைகளில் ஒன்றையோ பலவற்றையோ நிலைக்களங்களாகக் கொண்டு நடந்தேறுவதையும் நாம் அறிகின்றோம்.

இன்று உலகில் மங்காப்புகழ் பரப்பிக்கொண்டிருக்கும் நூல்களிற் பல இந்த நவரசங்களைத் தம் அகத்தே கொண்டிருக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். திருக்குறள் இன்று உலகப்பொது நூலாக மதிக்கப்படுவதற்கு அது வாழ்வியல் அடிப்படையில் அமைந்த நவரசங்களைத் தன்னகத்தே கொண்டிருத்தலும் ஒரு காரணம் எனக் கூறல்மிகையாகாது.

இனி அந்த நவரசங்கள் திருக்குறளில் எடுத்தாளப்பட்ட இயல்பை ஈன்றாய்வோம்.

“சொற் சேர்வு, சேர்ந்த கை, மெய்மயிர் குளிர்தல், வியத்தகவுடையது, எய்தியதிமைத்தல், விழித்தல்'' முதலியன அற்புதச் சுவையின் மெய்ப்பாடுகளாகும்.

முற்றுந்துறந்த முனிவரது பெருமை கூறவந்த வள்ளுவர் எண்ணாற் கூறி வழங்க வைக்கமுடியாத அதனை “இவ்வுலகத்துப் பிறந்திறந்தாரை எண்ணி, இத்துணையரென அறிதலுற்றாற் போன்றது அவர் பெருமை”என வியந்தோதுகின்றார். ஆம் தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரியதன்றோ?

“வையத்துள் வாழ்வாங்கு வாழுமொருவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுதலும், பிற தெய்வங்களை தொழாது தன் தெய்வமாகிய தொழுநனைத் தொழுபவள் பெய்யெனக் கூற மழைபெய்தலும்” வியப்பன்றோ!

தனக்கு எவ்வித உதவியும் பிறர் செய்யாதிருக்கத் தான் பிறருக்கு உதவி செய்யும் ஒருவனுக்குக் கைமாறாக விண்ணுலகையும், மண்ணுலகையுங்

கொடுத்தலும் ஈடாகாது எனக் கூறும் போது, செய்யாமற் செய்த உதவியின் சிறப்பினை நினைந்து வியப்புறுகின்றோம். "திணையள விற்றாய உபகாரத்தை ஒருவன் செய்யாதானாயினும் அதனைப் பனையளவிற்றாகக் கருதிப் பயன் தெரிவாராதல் வேண்டும்" என்னும் போது முந்திய வியப்பு மேலும் உச்ச நிலை அடைகின்றது. "சேவித்தும், சென்றிரந்தும், தெண்ணீர்க்கடல் கடந்தும், பாவித்தும், பாராண்டும், பாட்டிசைத்தும்"

பாடுபடுதல் பசிப்பிணியைத் தீர்த்தற் பொருட்டன்றோ? அப்பசிப்பிணி ஒருவருக்கு இல்லை என்றால் அவன் பெரிதும் பாக்கியசாலியே. அவ்வித பாக்கியத்தை எளிதில் பெறலாமென்றால், அது பெரு வியப்பாகவேயிருக்கும்.

"பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது."

என்ற பாடலைப் படிக்கும்போது அந்த அற்புதத்தை நாம் அறிகின்றோம். விருந்தினரை உபசரித்து எஞ்சியதைத் தானுண்பானது விளைபுலத்துக்கு வித்திடாதிருக்க, தானே விளையுமென்றும், அவ்வாறு விருந்தோம்புவான் மறுமையிலே தேவனாய் வானில் உள்ளார்க்கு விருந்தாவான் என்றுந் தொடர்ந்து கூறிச் செல்வதைப் படிக்கும்போது நமது வியப்பும் விரிவடைகின்றது.

நாம் இவ்வுலகில் மற்றவர்களாலே தொழப்படல் வேண்டுமென எண்ணுவோன் பெரிதும் முயல வேண்டியதில்லை. "ஒருயிரையுங் கொல்லாது, கொன்றவற்றையுமுண்ணாது இருந்தாற்போதும். உலகுயிரனைத்தும் அவனைக் கைகூப்பித்தொழும்" என்கிறார் வள்ளுவர்.

உழவுத்தொழிலின் மாண்பு இவ்வளவென்று கூறுந் தரத்ததன்று. "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்து முழவே தலை" என்பதோடமையாது, "மாற்று வேந்தரனைவரையும் தம் வேந்தரின் குடைக்கீழ்க் கொண்டு வருபவர் ஒருவரே" எனவும் திருவள்ளுவர் கூறி உழவுத் தொழிலை வியந்ததோதுகின்றார்.

தலைமகள் ஒருத்தியைக் கண்டு ஐயுற்ற தலைமகன், அவளது அழகில் மயங்கி, அப்பெண்ணைத் "தெய்வமகளோ! மயில் விசேடமோ! மானுட மாதோ!" என எண்ணி வியப்புறுகின்றான். அவளது கடைக்கண் பார்வையிற் கலங்கிய அவன்,

"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்று முடைத்து."

எனக் கூறி வியப்புறுகின்றான்.

கள் உண்டார்க்கே இன்பம் விளைப்பது. ஆனால், காமமோ அதனை நுகர்தற்குரியாரைக் கண்டாலே மட்டற்ற இன்பம் அளிப்பது. மெல்லியலார் தம் நல்லியல்புக்கு இதுவுமொரு வியப்புரையன்றோ! நெருப்பின் தன்மையை

அடுத்தபடியாகக் கோபம் அல்லது சினம் என்னுஞ் சுவைபற்றிய செய்யுள்களைக் காண்போம். ''கைபிசையா, வாய்மடியா, கண்சிவவா, வெய்துயிரா, மெய்குலையா, வேரா, வெகுண்டெழலே'' கோபச் சுவையின் மெய்ப்பாடுகள் ஆகும்.

ஒருவர் செய்த நன்றியை மிகவிரைவில் மறந்துவிடுதல் இக்கால உலகிற் சாதாரணமாக நாம் காணக்கூடியதொரு நிகழ்ச்சி. பிறர் செய்த நன்றியை மறத்தல் பண்பாடற்ற ஒரு செய்கையே. நன்றி மறப்போரைத் திருவள்ளுவர் மன்னிக்கவில்லை. வேறு எத்தகைய அறங்களைச் சிதைப்பவரினும் பார்க்க நன்றி மறப்போரே கொடியவர்கள் என்பது அவர் கருத்து.

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.''

என்ற செய்யுளைப் படிக்கும் போது கோபம் கட்டுக்கடங்காமற் போவதை உணருகின்றோம்.

''பிறன்மனை நயப்பார் போலும் பேதையர் பிறர் இல்லை, தமக்கு அஃது எளிதெனவெண்ணி, அத்தீச்செயலில் ஈடுபடுவோர்க்கு உய்தியில்லை. பின்விளைவு கருதாது பிறனில்லாளிடத்து நெறிகடந்து செல்பவனைப் பழி தவறாது சூழும்'' எனச் சினந்து கூறுதலோடு, அத்தகைய இழி தொழில்களை விட்டுப் பகையும், பாவமும், அச்சமும், குடிப்பழியும் ஒருகாலும் நீங்காவெனவுஞ் சபிக்கின்றார் வள்ளுவர்.

''புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்''

என்னும் அவரது வாக்கில் எவ்வளவு கோபம் தோற்றுகிறது!

பயனில்லாத சொற்களைப் பலகாலுங் கூறித்திரிதலையே தொழிலாகக் கொண்டு காலங்கழிப்பவரை நாம் காண்கின்றோம். அத்தகையாரை மனிதர் என்று கூறுதலை விடுத்து, மக்கட்பதர் என்றே கூறவேண்டும் என்கிறார். ஏன்? அறிவென்னும் உள்ளீடற்ற கோதாகவே அவர்கள் திரிகின்றார்கள். ஆகையால் அவர்கள் பதருக்கு நிகராகின்றார்கள். இப்படி மக்கள் உருவோடு மக்களிற் பதராய்ப் புகழுக்கேதுவாய குணநலமின்றிப் பிறப்போர் பிறவா தொழிதலே மேல். அப்படிப் பிறப்பதாயின், விலங்காய்ப் பிறத்தல் நன்று. ஏன் எனில் அறிவற்றிருப்பதற்காக விலங்கினங்களை எவரும் இகழமாட்டாரன்றோவென்க. எனவே,

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று''

என இடித்து உரைக்கின்றார் வள்ளுவர்.

நெஞ்சிலே பற்றுவைத்து, அப்பற்றினைத் துறந்தவர் போல் வஞ்சித்து நிலையை அடைகின்றனர். எனவே, இவ்வித வேடதாரிகள் வெறுக்கப்பட வேண்டியவர்களே.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்." இச்செல்வத்தைத் தேடித்தருவது செவி. எனவே அந்தச் செல்வமாகிய கேள்வியால் துளைக்கப்படாத செவியினை உடையார் உண்மையிற் செவிடரே என வள்ளுவர் கூறுகின்றார்.அச்சுவையினை உணராது வாயுணர்வினையுடையவராய் வாழும் மாக்கள், ''அவியினும் வாழினும் என்'' என்று அப்பெரும்புலவர் சினந்துரைக்கின்றார்.

சோம்பல் மிகக் கெடுதியானதொன்று. தனது குடியை உயர்த்த வேண்டுமென எண்ணுபவன் மடியை முதலில் விட்டுவிட வேண்டும். அவ்விதம் அதனை விடாது தன்னுள்ளே கொண்டொழுகும் அறிவிலி பிறந்த குடி, அவனினும் முந்தி அழிவுறும் என்று கூறிச் சோம்பலையும் சோம்பலுடையோரையுங் கடுமையாக வள்ளுவர் தாக்குகிறார்.

இதுகாறும் மக்கட் கூட்டத்தாரைச் சினந்துரைத்த வள்ளுவரின் கோபம் உச்சமடையும் கட்டத்தையும் அவரது நூலிற் காண்கின்றோம். ஆதிபகவனை முதலாக உடையது உலகம் என்ற வாயால் அந்த ஆதிபகவானையே நிந்தித்துக் கூறவும் துணிந்துவிடுகிறார். பிழையைப் பிழையெனக் கூறுவதற்கு எந்தக் கவிஞனும் பின்னின்றதில்லை. ''நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றங் குற்றமே'' என்கிறார் நக்கீரர். ''தனியொருவனுக்கு உணவில்லையெனில், சகத்தினை அழித்திடுவோம்'' என்றார் பாரதியார். வள்ளுவர் என்ன கூறுகின்றார்.?

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக வுலகியற்றி யான்''

என்கிறார்.

அவரது கோபம் புதியதொரு திருப்பத்தை அடைகிறது. உலகுயிர்களைப் படைத்த இறைவன் அவ்வுயிர்கட்கு வேண்டிய தொழில்களையும் படைத்திருக்கின்றான். அவ்வித நியதிகளை விதிக்கும் இறைவன், உலகிற் பிறந்த ஒருவன் பிறரை இரந்து உயிர் வாழ வேண்டும் என விதிப்பின் அது பெரிய அநீதியன்றோ?

இனி, கருணை ரசம் ததும்புங் கவிகளைப் பற்றிக் கூறுதும். மனித உயிருக்கு இன்றியமையாத அணிகலன்களுள் முதன்மையானது கருணை. "கொடுமை மிக்க பருந்தினுக்குத் தப்பித் தன்னிடத்து அடைக்கலம் புகுந்த புறாவின் அழிவுக்கு அஞ்சித் தன் அழிவை அஞ்சாது, துலையுட்புக்க சிபிச்சக்கரவர்த்தி போன்ற கருணை வடிவினோர் புகழ் இன்றும் நின்று நிலவுகின்றது. அத்தகையோரைக் குறித்து வள்ளுவப் பெருந்தகை, "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு'' என்று கூறும் போது அத்தொடரில் கருணை ரசம் பீறிட்டுப்பாய்வதை நாம் உணருகின்றோம்.

தன்னகத்தே நின்று தன்னை அகழ்வார் வீழ்ந்து படாமல் தாங்கும் நிலத்தைப்போலத் தம்மை அவமதிப்போரைப் பொறுக்கும் தன்மை கருணை உடையார்க்கே சாலும். நமக்கு ஒருவன் தீமை செய்தால், பழிக்குப்பழி வாங்கவே நமது மனம் ஏவுகிறது, மேலும் மேலும் துன்பத்தையுந் தொல்லையையுந் தரும் வழி அது. அவனை ஒறுக்கவேண்டுமாயின் நாம் திருவள்ளுவர் கூறும் வழியைப் பின்பற்றல் வேண்டும். அவ்வழி விரைவில் நமது நோக்கத்தை நிறைவேற்றி வைக்கும்.

"இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.''

என்ற செய்யுளைப் படிக்கும்போது நம்மையறியாமலே நமது பகைவர்கள் மாட்டும் நமக்கு இரக்கமுண்டாகின்றது. உலகம் புரக்கும் வேந்தராயினும் அவர்க்குங் கருணை மிகமிக அவசியம். அவ்வாறு அவர்கள் கருணையுடையோராய் இருப்பாராயின், இவ்வுலகம் நிலைபெற்று நிற்கும் என்கிறார் வள்ளுவர்.

தன்னால் விரும்பப்பட்டாரை இயன்றவரை காப்பாற்றுதலே அன்புடையார் கடன். உறுப்புக்கள் யாவற்றிலும் பிரதானமானது கண். கண்ணைப்போலத்தான் தான் நேசித்தோரை நினைப்பவன் உண்மையிலே கருணை வடிவினனே. கண்ணிலும் பார்க்க மேலாகத் தான் காதலித்தோரை நேசிப்போர் உயர்ந்தோரன்றோ? தனது கண்மணியின் இடத்தில் தன் காதலியை வைத்துவிட விரும்பும் தலைமகனின் கருணையை நாம் என்னென்பது.

ஒரு தலைமகள் தனது காதலனை மறவாது நெஞ்சிடத்தே நினைத்திருந்தமையால் வெய்தான பொருள்களை உண்ணுதற்கு அஞ்சுகின்றாள். காரணம் உள்ளே உள்ள தலைமகன் வெந்துவிடுவானோ என்ற அச்சமே. குழந்தை உள்ளம் படைத்தோர் கருணை இவ்வாறு வஞ்சனையற்றதாகவேயிருக்கும்.

நான்காவதாக இழிவுச் சுவையைப் பற்றி ஆராய்வோம்: "இடுங்கிய கண்ணும், எயிறுபுறந்தெரிதலும், ஒடுங்கிய முகமும், உஞற்றாக்காலும் சேர்ந்த யாக்கையுஞ் சொன்னிரம்பாமையும்'' இச்சுவைக்குரிய மெய்ப்பாடுகளாகும். இம் மெய்ப்பாடுகளை எம்மிடையே தோற்றுவிக்கச் செய்யும் பாடல்கள் சுவையுடையனவாகும்.

அன்புள்ளவனை உலகம் விரும்பும். அன்பிலாரை எவரும் விரும்பார். அன்பில்லாத மனத்தோடு கூடி இல்லறம் நடத்துதல் வன்னிலத்தில் வற்றல் மரம் தளிர்ந்தாற் போன்றது. அன்பில்லாத உடம்பு என்பினைத் தோலாற் போர்த்தது போன்றதே. அவ்வுடம்பு உயிர் நிற்கத் தகுதியற்றது. இவற்றால் அன்பிலாரது இழிவு வெளிப்படையாகின்றதன்றோ!

பிறரது உடைமையை விரும்புதல் இழிவான செய்கை, பிறரது இல்லாளை விரும்புதல் இளிவானவற்றுள் எல்லாம் இழிவானது. பெரும் பாவங்களை எல்லாம் செய்து, அதனால் இழிவடைவாரினும் பார்க்கப் பிறன்மனை நயக்கும் பேதையர் பெரிதும் இழிவடைவர். அதனைச் செய்தல் தமக்கு எளிதென்ற காரணத்தால், தம்மை ஐயுறாதாரில்லாளிடத்து நெறிகடந்து சேர்வாரை நினைக்க, அத்தகையோர் எவ்வளவு இழிவானவரென்பதை மெய்ப்பாடுகளோடு விளக்கும்.

உலக நடையினையறிந்து அதற்கேற்ப வாழத் தெரியாதவனைச் செத்தாருள் ஒருவனாகவே வள்ளுவர் இழித்துரைக்கிறார். பொருட்குறை நிரம்ப

வேண்டாம் என்ற குறிக்கோளோடு இரப்பார்க்கீயாது தனித்துண்ணுதல் இரத்தலினும் இன்னாததென்று கூறும்போது அத்தகையார் செய்கை எவ்வளவு இழிவானதாக மதிக்கப்படுகின்றது.

வஞ்சம்பொருந்திய மனத்தோடு கூடி வெளிக்கு நல்லவர் போல நடப்பவரை மனிதர்கள் மட்டுமன்றிப் பஞ்சபூதங்களுமே இழித்து நகையாடும். அத்தகையோர் பசுந்தோல் போர்த்த புலிகளாவார். அவர்களது செய்கை புதிரின் மறைந்த புட்களைக் கொல்லும் வேடரது இழி தொழிலை ஒக்கும். இவற்றிலிருந்து பொய்யொழுக்கம் பூண்ட போலி வேடதாரிகளின் இழிவு புலனாகின்றதன்றோ!

விலங்கினங்களுக்கும் மனிதர்களுக்கும் உள்ள வேறுபாடு எத்தகையதோ, அத்தகைய வேறுபாட்டைக் கற்றவர்க்கும் மற்றவர்க்கும் இடையே நாம் காண்கின்றோம். மேலும், கல்வியறிவற்றாரது இழிவினைப் பின்வரும் பாக்கள் எடுத்துரைக்கின்றன.

"நுண்மாண் நுழைபுல மில்லான் எழினலம்
மண்மாண் புனைபாவை யற்று"

"விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

"கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி"

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்"

இப்பாக்கள் இழிச்சுவையின் மெய்ப்பாடுகளை எம்மிடத்துத் தோற்றுவிப்பதை உய்த்துணர முடியும்.

தாம் கற்ற ஒன்றினைப் பிறர்க்கு எடுத்துரைக்குந் தன்மையில்லார், வாள் கொண்ட பேடி போல்வர் என்றும், அத்தகையோர் கல்லாதவரினுங்கடையர் என்றும், உலகில் வாழ்ந்தாலும் இறந்தவர் போலவே எண்ணப்படுவர் என்றுங் கூறும்போது, "பல்லவை கற்றும் நல்லவையுள் நன்கு செலச்சொல்லா தார்" இழிவு தோன்றுகின்றது.

பெண்களின் சொற்கேட்டு அவர்க்கு ஏவல் செய்யும் ஆண்களினும் பார்க்க, "நாணுடைப் பெண்ணே பெருமையுடைத்து" என்று ஆண்மையிலாரது இழிவினை விளக்குகின்றார் வள்ளுவர். அத்தகைய ஆடவர் இம்மை மறுமைப் பயன்களை அளிக்குஞ் செயல்களைக் கூடச் செய்யத் தகுதியற்றவர் என்பது அவர் கருத்து.

மது உண்டல், சூதாடுதல் போன்ற கூடா ஒழுக்கமுடையாரை, யாது செய்யினும் உவக்குந் தாய்கூட வெறுப்பாள். இவ்விதம் தனது நிலையினின்றும் பிறழ்ந்த மனிதன் தலையினின்றிழிந்த மயிரைப்போல வெறுக்கப்பட்டு, இழிக்கப்பபடுவான்.

ஒருவனை விரும்பி அவனைப் பார்த்து ஒரு பெண் சிரிக்கும் போது அவனுக்கு ஏற்படும் மகிழ்ச்சியினும் பார்க்கப் பன்மடங்கு துன்பம், ஒருவனை வெறுத்து அவனைப் பார்த்து அவள் சிரிக்கும் போது ஏற்படுவது உலக இயல்பு. "யாம் வறியோம் எனக் கூறி மடிந்திருப்போரைக் கண்டால் நிலமடந்தை இழிவுபடுத்திச் சிரிக்கின்றாள்" கேவலம்! பொறுமைக்கு எல்லையாகிய ஒருத்தியே சிரிக்கக்கூடிய அளவு இழிநிலை அடைகின்றான் சோம்பேறி. அதைவிட இழிவு பிறிதில்லை. உழுதல் முதலிய தொழில் செய்வானைப்பார்த்து நிலமடந்தை மலர்முகங்காட்டி, மணிவாய்திறந்து குலுங்கக் குலுங்கச் சிரிக்கின்றாள். மடிந்திருப்பாரைக் கண்டு வெறுத்து மௌனமாகச் சிரிக்கின்றாள். இதனால் உலகுயிரனைத்தும் அவனைப்பார்த்துச் சிரிக்கின்றன.

அடுத்தபடியாக நடுவுநிலையெனப்படும் சாந்தரசம் பற்றி ஆராய்வோம்.

"கோட்பாடறியாக் கொள்கையுமாட்சியும், அறந்தரு நெஞ்சமும் ஆறிய விழியும், பிறழ்ந்த காட்சி நீங்கிய நிலையும், குறிப்பின்றாகலுந் துணுக்கமில்லாத் தகைமிகவுடைமையுந் தண்ணெனவுடைமையும், அளத்தற் கருமையும், அன்பொடு புணர்தலும், கலக்கமொடு புணர்ந்த நோக்குங் கதிப்பும்" நடுநிலைச் சுவையின் மெய்ப்பாடுகளாகும்.

பிறர்க்கு நீதி வழங்கும்போது காய்தல், உவத்தல் இன்றித் துலாக்கோல் போன்று பாகுபாடற்ற விதத்தில் நீதி வழங்கல் வேண்டும் என்பதை விளக்குமுகத்தால்,

"சமன்செய்து சீர்தூங்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி"

என்று வள்ளுவர் கூறுதலை நினைக்கும் போது நடுவுநிலை தவறாதாரது இலக்கணம் அப்படியே மனக்கண் முன் தோன்றுதலைக் காண்கின்றோம்.

தன்னை அகழ்வாரை வீழாமற்றாங்கும் நிலம்போல, ஒருவர் தம்மைத் தூற்றிய வழி அவர்மாட்டுப் பகை பாராட்டாது பொறுமையுடன் இருந்து, இகழ்வார்க்கு மேலும் நன்மை செய்ய வேண்டும் என்ற சாந்த நிலையினைச் சிறந்த உதாரணம் மூலம் திருவள்ளுவர் விளக்குகின்றார். மனச் செருக்கால் ஒருவன் தீயன செய்வானேல் நாம் அவனுக்குத் தீமை செய்யாமல் நம்முடைய பொறுமையால் அவனை வென்று விடவேண்டும். இத்திறமை சமநிலை உடையார்க்கே வாய்க்கும்.

எடுத்ததற்கெல்லாம் பிறரைக் குறை கூறுவோரை நாம் காண்கிறோம். தனக்குத் தன்னால் விளைந்த தீமைக்குக் கூடப் பிறரையே குறைகூறுவாருமுளர். அத்தகையார்க்கு, "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்ற பூங்குன்றனார் பொன்மொழியும், "பெருமையுஞ் சிறுமையுந் தாந்தரவருமே" என்ற வெற்றிவேற்கைச் சொற்றொடரும் அறிவுரை பகர்கின்றன. வள்ளுவர் வாய்மொழி ஒன்று இவற்றினுஞ் சிறப்பாக விளங்குகிறது. எந்த ஒரு சுவைக்கும் கட்டுப்படாது, சாந்த நிலையில் இருந்து கொண்டு,

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தங்
கருமமே கட்டளைக் கல்"

என்ற செய்யுளை நாம் உணர்ந்து பாடுவோமானால், சமநிலையின் மெய்ப்பாடுகள் நம்மிடையே தோன்றிநிற்றலை அறிவோம்.

'நாகரிகம்' என்ற சொல்லுக்குரிய சரியான இலக்கணத்தைத் திருக்குறளிலன்றி வேறெந்த நூலிலுமே காணல் முடியாது. "சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பதுன் கடனே" என்பது முதுமொழி. சிறுபிழைகளையல்ல, பெரும் பிழைகளையுமே பொறுக்கும் குணமுடையோரையும் நாம் காண்கிறோம். அத்தகையோர் தாம் சமநிலை உடையார். நமது உயிருக்கே இறுதி பயக்கக்கூடிய கொடுமையை ஒருவர் செய்தபோதும் அதைப் பொருட்படுத்தாது அவரோடு பழகுதல் வேண்டும்.

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

என்பது வள்ளுவர் கூற்று. ஆம், இதுவே தலையாய நாகரிகம். நிலையான நாகரிகமுங்கூட. மற்றவையெல்லாம் அவ்வப்போது தோன்றி மறையும் நவநாகரிகங்களே.

"முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சு முண்பர் நனிநாகரிகர்" என்பது நற்றிணை. இவற்றால், சமநிலை கொண்ட மக்கள் வாழ்ந்த இடம் தமிழகம் எனக் கூறிப்பெருமை கொள்ள நமக்கு உரிமையுண்டு.

தாம் இடுக்கப்பட நேர்ந்த போதும் பிறருக்கு இன்னாத வினைகளைச் செய்யாதிருத்தல் மெய்யறிவுடையார் கடன், தன்னைப்பெற்ற தாயினது பசி காணும் தன்மையனாயினும் அறிவுடையார் பழிக்கும் வினைகளை ஒருவன் செய்யாதொழிதல் வேண்டும். "கடல் கரையிகந்தாலும் தம் நிலை திரியாதிருக்குஞ் சான்றாண்மை" மிக்க பெரியார்களின் தன்மையை நினைக்கும் போது சமநிலை மெய்ப்பாடுகள் நம்மிடத்துக் கிளர்ந்தெழுவதை நாம் உணர்கின்றோம்.

ஆறாவதாகக் காமம் அல்லது இன்பம் என்னும் சுவைபற்றிய செய்திகளைக் காண்போம். "தூவுள்ளுறுத்த வடிவுந் தொழிலும், காரிகை கலந்த கடைக்கணுங்கவின் பெறு மூரன் முறுவல் சிறுநிலா வரும்பலும், மலர்ந்த முகனுமிரந்தமென் கிளவியும்" இச்சுவைக்குரிய மெய்ப்பாடுகளாகும்.

ஒருவன் பெறும் பேறுகளுள் தலையாய பேறு மக்கட் பேறு. மக்களால் எய்தும் இன்பமே தலையாய இன்பம். அமிழ்தம் அருந்துதலினும் பார்க்கச் சிறந்த இன்பம் ஒன்று உண்டு என்றால், அது தம்மக்களது சிறுகையான் அளாவப்பட்ட சோறு என்னும்போது அனுபவவாயிலாக அதை உணர்ந்தோர் அடையும் இன்பத்துக்கு எல்லையில்லை. நம்முடைய மக்களது உடம்பைத் தீண்டுதலால் மெய்க்கு இன்பங் கிடைக்கின்றது. அவர்களுடைய மழலை மொழியைக் கேட்கும்போது செவிக்கும் இன்பம் உண்டாகிறது. அறிவுடைய தம்மக்கள் அவையகத்து முந்தியிருப்பதைக் காண்பதாற் கண்கள் இன்பம் அடைகின்றன. எனவே, ஐம்புல இன்பங்களையும் ஒருங்கே அளிக்கவல்ல செம்பொருள் மக்கட் பேறென்னும்போது அச்செல்வத்தை எண்ணிஎண்ணி நாம் இன்பரசத்துள் மூழ்குகின்றோம். இன்மைப் பயன்களோடு மறுமைப் பயனையும் பண்புடைய மக்களாற் பெறமுடியும் என்று கூறும்போது முந்திய இன்பம் மேலும் உச்சநிலை அடைகின்றது.

ஒருவனது ஆக்கத்தைக் கண்டு பொறாமைப்படுதல் உலக இயல்பு. ஆனால், பிறர் ஆக்கம் பெறும்பொழுது அது தமக்குக் கிடைத்ததே போல இன்பமடையும் பெரியாரையும் நாம் காண்கின்றோம். இப்பெரியார் யார்? இவர்களே உலகநடையினை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினை உடையவர். இவர்கள், "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் கருத்துடையாராவர். இத்தகையோர் பெருஞ்செல்வம் பெறின், அதனை, "ஊருணி நீர் நிறைந்தாற்" போலவும் "பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தாற்" போலவும், "மருந்தாகித் தப்பாமரம்" கிடைத்தாற் போலவும் எண்ணி, மக்கள் மட்டற்ற மகிழ்வெய்துவர் எனக்கூறுகின்றார் வள்ளுவர்.

உலகில் நமக்கு இடையறாத இன்பத்தைக் கொடுக்கவல்ல நான்கு பொருள்களை வள்ளுவப் பெருந்தகையார் எடுத்துக்கூறியுள்ளார். அந்த நான்கினையும் நாம் நினைக்குந்தோறும், நமக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாகின்றன்றது.

அந்நான்கினுள் ஒன்று, முன்கூறப்பட்ட மக்கட் செல்வம், மற்றது அம்மக்கட் செல்வத்தோடு மற்றும் இன்பங்களைக் கொடுக்கவல்ல மகளிர். மூன்றாவது நூற்பொருள்.அடுத்தது பண்புடையாளர் தொடர்பு.

ஒரு கணக்கைச் செய்து, அதன் விடையைக் கண்டுபிடித்த மாணவன் எவ்வளவோ மகிழ்வெய்துவான்! பாடுபட்டுப் படித்துப் பரீட்சையிற் சித்தியெய்தியவன் முன்னிலும் பன்மடங்கு மகிழ்ச்சி கொள்வான். அளவிறந்த துன்பத்தை அனுபவித்து, அதன்பின் பெற்றெடுத்த மகனின் பெருமையைக் கேள்வியுற்ற தாய் அத்துன்பங்கள் எல்லாவற்றையும் மறந்து மகிழ்ச்சிக் கடலுள் மூழ்குவாள். சொந்த முயற்சியின் பயனை அனுபவிக்கும்போது எவர்க்கும் இன்பக்கிளர்ச்சி ஏற்படுவது இயல்பு. வயிற்றின் கொடுமையைத் தீர்க்க நாம் எத்துணைப் பாடுபடுகின்றோம்? எந்தவழியிலாவது வயிறு நிரம்பினாற் போதும் என வாழ்பவர் நடைப்பிணங்களே. தனது முயற்சியினாற் கிடைத்தது நீர்போன்ற பதார்த்தமே என்றாலும், அதை உண்ணும்போது உண்டாகும் இன்பம், பிறவழியாற் கிடைத்த அமிழ்தத்தின் சுவையினும் பார்க்க மேலானதன்றோ!

காமத்துக்குரிய இருவர், ஒருவரையொருவர் காமக்குறிப்போடு நோக்குங்கால் உள்ளத்தெழும் இன்ப உணர்ச்சி சொல்லுந்தரத்ததன்று.

தலைவியினிடத்து அதரபானமருந்திய தலைமகன் அதனை வியந்து "பாலொடு தேன்கலந் தற்றே பணி மொழி வாலெயிறூறிய நீர்" எனக் கூறுகின்றார். இப்படியே காமத்துப்பாலில் தலைவன் தலைவியர் மாட்டு நிகழும் இன்ப நிகழ்ச்சிகளைக் கூறும் பகுதிகள் நமக்கு எல்லையில்லா இன்பத்தைக் கொடுக்க வல்லன. அவை யனைத்தையும் இங்கு எடுத்தோதிற் பெருகும் என விடுத்தாம்.

அடுத்தது அச்சச் சுவை. "ஒடுங்கிய உடம்பும், நடுங்கிய நிலையும், மயங்கிய கண்ணும், கலங்கிய வுளனும், கரந்து வரலுடைமையும், கையெதிர் மறுத்தலும், பரந்த நோக்கமு மிசை பண்பினவே." இம்மெய்ப்பாடுகளைத் தோற்றுவிப்பன அச்சச் சுவையின் பாற்படும்.

சாதாரண மனிதருக்கே கோபம் வந்துவிட்டால் அதை ஆற்றுதல் இலகுவானதன்று.அவர்கள் அற்ப ஆற்றலையே உடையவர்களா யிருந்தாலும், கோபவெறியேறிவிட்டாற் பல கொடூரமான செயல்களைச் செய்து விடுகின்றனர். அ∴தவ்வாறாயின் துறவு, மெய்யுணர்வு, அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின் மேல் நின்றாரது கோபம் எத்தகையதாயிருக்கும்? அதை நினைக்கவே நமக்கு அச்சம் உண்டாகிறது.

அவர்களது கோபம் "கணமேனுங் காத்தலரிது!" ஏனெனில் அவர்கள் அருளியோ, வெகுண்டோ கூறினாலும் அவ்வப்பயன்களைப் பயந்துவிடும் சக்தி பெற்றவை அவர்களுடைய வார்த்தைகளாதலின் என்க.

"எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்"

எனக் கூறும்போது முந்திய பயம் மேலும் பன்மடங்காகின்றது. அத்தகைய "மாண்ட தக்காரது" சினம் வகைமாண்ட வாழ்க்கையினை அடைய வேந்தரையும் அழித்துவிடும் தன்மை பெற்றது.

ஒருவர் செய்த நன்றியை மறந்துவிடுதல் உலகியல்பாகிவிட்டது. அதன் பயனை அறியாமையே இதற்கு காரணம். திருக்குறளைப் படித்தோர் நன்றி மறத்தலைக் கனவிலுங் கருதார். இதனால் விளையுந் தீமைகளை நாம் திருக்குறளிற் காண்கின்றோம். அவற்றை நினைத்தாலே குலை நடுக்கம் ஏற்படுகிறது. "வேறு எத்தகைய குற்றத்தைச் செய்தார்க்கும் உய்வு உண்டு. ஆனால் நன்றி மறந்தாற்கு உண்டாம் குற்றத்தைத் தடுத்தற்கு எவ்வித பிராயச்சித்தமும் இல்லை" என்று அச்சுறுத்துகிறார் வள்ளுவர். தீமையான செய்கைகள் முதலில் இன்பம் பயப்பனபோலத் தோன்றினும், ஈற்றில் துன்பத்தையே விளைக்கும். அதனாற்றான் வள்ளுவர்,

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்" என்று நம்மை அச்சுறுத்துகிறார்.

ஒருவனோடு கூடி, உறவு கொண்டாடிக் கொண்டாடி அவனைக் கொல்லும் இயல்புடையோரும் உலகில் இருக்கின் றனரன்றோ! வெளிப்படையாகப் பகை பாராட்டுவானன்றிக் கேளிர்போல் மறைந்து நிற்கும் பகைவருக்கே நாம் அஞ்சவேண்டும். அவ்விதம் அஞ்சாது அலட்சியம் செய்தால் நமக்கு அழிவு உண்டாகும் என்று வள்ளுவர் கூறும்போது உட்பகையின் தீமையை எண்ணி அஞ்சவேண்டியவர்களாகின்றோம்.

ஒரு சிறு குடிசையிலே நம்மையும் ஒரு பாம்பையும் உடன் உறையச் செய்தால், நாம் எவ்வளவு நரக வேதனை அடைவோம்! அதனை நினைக்கவே மனம் பதறும். மனப்பொருத்தம் இல்லாதவரோடு கூடி வாழ்தல் மேற்போன்ற கொடிய அனுபவத்தை நமக்கு உணர்த்தும். எனவே, அத்தகைய வாழ்க்கையை அஞ்சாதார் யார்? “அவ்வாறு வாழ்தலினும் சாதலே மேல்” என்று கூறக்கூடிய அளவிற்கு நம்மிடையே அச்சம் குடிகொண்டு விடுகின்றது.

“கொடிது கொடிது! வறுமை கொடிது!” என்றார் ஔவையார். ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாது கொடிய வயிற்றொடு கூடிவாழும் நாம் வறுமையைக் கண்டு அஞ்சவேண்டியவர்களே. வறுமையில் உழலும்போது எதிர்காலம் வளமுடையதாக இருக்காதா என்று ஏங்குகின்றோம். மனித வாழ்வே எதிர்காலத்தை நம்பித்தான் நடந்துகொண்டிருக்கின்றது. வறியவர்களின் வாழ்க்கை எதிர்கால நம்பிக்கையிலே தான் பெரிதும் தங்கியிருக்கின்றதெனலாம். இன்றையிலும் பார்க்க நாளைக்கு ஏதோ கூடுதலாக நன்மை கிடைக்குமென நம்பியிருக்க, நேற்றிருந்த அதே வறுமை மீண்டும் வருமாயின் அப்பப்பா! அதன் கொடுமைதான் என்னே! “நெருப்பிலே கிடந்து நிம்மதியாகத் தூங்கினாலும் தூங்கலாம், ஆனால், இந்த வறுமை வந்தால் யாதொன்றானும் உறக்கமில்லை” என்று நல்கூர்ந்தான் ஒருவன் கூறுவதைக்கேட்டு நமக்கும் அத்தகைய வறுமை வந்து விட்டால் நாம் என்ன பாடுபடுவோம் என்று எண்ணும்போது பயத்தினால் இதயமே நின்றுவிடும்போல் இருக்கின்றது.

எட்டாவதாக நகைச்சுவை பற்றி ஆராய்வோம். “மிகைபடு நகையது, பிறர்நகையுடையது, கோட்டிய முகத்தது, விட்டுமுரிபுருவமொரு விலா அறுப்புடையது, செய்வது பிறிதாய் வேறு சேதித்தல்” என்பன நகைச்சுவைக்குரிய மெய்ப்பாடுகளாகும்.

“பேயோடு பழகினும் பிரிதல் அரிது” என்பது முதுமொழி. புகைவண்டியிற் கண்டு பழகியவர்களைக்கூடப் பிரிவதாயின் நமக்கு எவ்வளவு துன்பம் உண்டாகின்றது. ஆனால், பேதமையுடையார் இடையில் நட்புண்டாகில் அவரிடையே பிரிவு ஏற்படுவதாயின் அதுபற்றி கவலையடைய வேண்டியதில்லை. அவர்களின் பிரிவால் எவர்க்கும் எவ்வித தீமையோ துன்பமோ வந்துவிடாது. ஆகவே, பேதையர்க்கிடையிற் பிரிவு நன்கு உண்டாகலாம் என்கிறார் திருவள்ளுவர்.

அறிவில்லாத கயவர் நெல்லொடு சேர்ந்த பதரே போல்வர். வெளித்தோற்றத்தளவில் அவர்கள் மக்களைப் போலத்தான் இருப்பார்கள்.

அவர்களுக்கும் மக்களுக்கும் உள்ள வேறுபாட்டைப் பிரித்துணர்தல் இலகுவானதன்று. அத்தகைய கயவர் தமக்கு உறுதியான கருமங்களைச் சிறிதும் சிந்திக்கமாட்டார்கள். பழி பாவங்களைத் தவறாது செய்வார்கள். மனதிலே எள்ளளவேனும் கவலைகொள்ளமாட்டார்கள். எனவே, அத்தகையோர் போலத் திருவுடையோர் வேறு யார்? அவர்கள் எவரது ஆணைக்கும் அடங்காத தேவர்களைப் போன்றவர்கள். எதை நினைக்கிறார்களோ அதைச் செய்து முடிக்கும் தன்மையர். அவர்களைத்தான் வள்ளுவப் பெருந்தகையார், "தேவரனையர் கயவர் " என நகைச்சுவை ததும்ப உரைக்கிறார்.

கண்ணொடு கண்ணிணை நோக்கிக் காதல் கொண்ட பின், பிரிந்து போன தலைவனை எண்ணிக் கண்ணீர் வடிக்கினறாள் தலைவி. பின்பு சிறிது தேறுகிறாள். "பின்விளைவை நோக்காது காதலரைப் பார்த்துவிட்டு,அவர் பிரிந்த பின் ஏன் அழுகின்றாய்?" என்று கண்ணைத் தானே கேட்டுக்கொள்கிறாள்.

பிரிந்து சென்ற தலைமகன் தலைவியை நோக்கி வருகின்றான். தலைவி ஊடி நிற்கின்றாள். மட்டற்ற வேட்கையோடு தன்னை நெருங்கிய தலைவனை அணைய மறுக்கிறாள் தலைவி. தலைவனின் ஆற்றாமையையும், அவன்படும் பாட்டையும் பார்த்து நகையோடும் பொருட்டே இந்த நாடகத்தைத் தலைவியுடன் சேர்ந்து தோழி ஒழுங்கு செய்கிறாள்.

வெவ்வேறு இடங்களில் இருக்கும் நெருங்கிய உறவினர், ஒருவரையொருவர் நினைக்கும்போது தும்மல் உண்டாகும் என்பது நம் முன்னோர்கள் கொண்ட கருத்து. இக்காலத்திலும் இது நிலவிவருகிறது. சாதாரணமாகத் தும்மல் உண்டாகும் போது தும்மியவரை வாழ்த்துதலும் மரபு. ஊடியிருந்த தலைவியின் மனத்தைச் சிறிது மாற்ற, தலைவன் வேண்டுமென்றே தும்மினான். வாழ்த்துவாள். அதன் பின் அவளுடன் உரையாடல் தொடங்கலாம் என எண்ணினான் தலைவன். ஐயோ பாவம் அவனது செய்கை விபரீதமாக முடிந்துவிடுகிறது, "நீர் தும்முதற்குக் காரணமாய் இருந்த மகளிர் யாரோ?" எனக் கேட்டுவிடுகிறாள் தலைவி. சரி சரி, இனித் தும்மலால் இவளது மனத்தைமாற்ற முடியாது என நினைத்து, இயற்கையாகவே எழுந்த தும்மலையே அடக்க முயன்றான் தலைவன். "எந்தப் பெண்ணோடு என்னை ஒப்பிட்டுப் பார்க்கிறீர்?" என்று இன்னொரு வெடிகுண்டை தலைவி அவன் தலையில் போடுகிறாள். இத்தகைய காதற் கட்டத்தை நினைக்கும்போது நகைச்சுவை மிகைபடத் தோன்றுகின்றதன்றோ!

இறுதியாக, வீரச்சுவை பற்றிய செய்திகளை இங்குக் கூறுவோம். "முரிந்த புருவமுஞ் சிவந்த கண்ணும் பிடித்த வாளும் கடித்த எயிறும் மடித்தவுதடுஞ் சுருட்டிய நுதலும், திண்ணெனவுற்ற சொல்லும் பகைவரை எண்ணல் செல்லாவிகழ்ச்சியும்" என்பன இச்சுவைக்குரிய மெய்ப்பாடுகளாகும். இவ்வகை மெய்ப்பாடுகளை நம்மிடையே தோற்றுவிக்க வல்ல செய்திகளை இச்சுவையின் பாற்படுத்தலாம்.

பிற உயிர்களை வெல்லுதலினும் பார்க்கத் தன்னை வெல்லுவோனே உயர்ந்த வீரமுடையவன். புலன்களை அடக்கி, அப்புலன்களால் நுகர்தற்குரிய இன்பங்களை எவன் துறந்து விடுகிறானோ அவன் வீரருள் வீரன். "முடியாதது"

என்ற ஒரு வார்த்தை தனது அகராதியில் இல்லை என்றான் நெப்போலியன். வீரமுள்ள எவனுக்கும் இத்தகைய உணர்ச்சி ஏற்படவே செய்யும். "அருவினை என்ப உளவோ?" "ஞாலங்கருதினுங் கைகூடும்" என்பன போன்ற வள்ளுவர் வாய் மொழியைப் படிக்கும் போது எத்தகையோர்க்கும் வீர உணர்ச்சி தோன்றும்.

தனக்கொரு துன்பம் வந்தவிடத்து, அத்துன்பத்தைப் பார்த்துச் சிரிக்க வேண்டும். அத்தகைய வீரம் நம்மிடத்திலிருந்தால் எத்தகைய துன்பமும் நம்மை அணுகாது. மறக்குடியிற் பிறந்த வீரர்கள் துன்பத்தைக்கண்டு அஞ்சமாட்டார்கள். வேல் வீரன் ஒருவன் தன்னைத் தாக்க வந்த யானையது உயிரைப்போக்குதற்காக கையில் இருந்த வேலை அதன் மீது வீசுகின்றான். மறுகணம் அவனைப் பகைவர் பலர் சூழ்ந்து கொள்கின்றனர். கையில் வேல் இல்லை. மெய்யில் வேல் தைத்திருப்பதை அப்போதுதான் அவன் கவனிக்கின்றான். மட்டற்ற மகிழ்ச்சியோடு அவ்வேலைப் பிடுங்கி எடுக்கிறான்: வீராவேசத்தோடு எதிரிகளைப் பார்த்துச் சிரிக்கின்றான்: எதிரிகளின் வேல் வீச்சுக்கு அஞ்சிக் கண்களைக்கூட இமைத்தல் செய்யாது ஆண்மையோடு போர் புரிகின்றான். இவ்விதம் அஞ்சாது போர் செய்து, முகத்திலும் மார்பிலும் விழுப்புண் பெறாத நாள்களைப் பிறவாத நாள்களாகவே அத்தகைய வீரன் கருதுவான்.

பனைமுகத்துச் சாகும் வீரத்திலும் பார்க்க மேலான வீரச் செயலும் ஒன்று உண்டு. அதுதான் அவையகத்து நின்று அஞ்சாது சொற்போர் செய்தல். அத்தகைய வீரா் ஒரு சிலரைத்தான் நாம் காணக்கூடும். அவர்களை வெல்லுதல் எவர்க்கும் அரிது.

> "சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
> யிகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்று வள்ளுவர் கூறுகின்றார். அவரது வாய்மொழியைக் கேட்கும்போது ஏன் நாமும் அப்படி வீரர்களாக வரக்கூடாது? என்ற வீர உணர்வு கிளர்ந்தெழுகின்றதன்றோ!

இதுகாறுங் கூறியவற்றிலிருந்து திருக்குறளில் நவரசங்களுஞ் சிறந்த முறையில் எடுத்தாளப்பட்டிருக்கின்றன வென்பது தெற்றெனப் புலனாகும். ஒரு சுவைக்குரிய பாடல்களைப் படிக்கும்போது அச்சுவைக்குரிய மெய்ப்பாடல்கள் நம்மிடத்தே கிளர்ந்தெழுவதைக் காண்கின்றோம். அக்கிளர்ச்சி அக்குறிப்பிட்ட பாடல்களின் கருத்தை தம் மனத்திடையே ஆழப் பதியவைத்துவிடுகிறது. நம்முடைய அனுபவம் அக்கருத்துக்கு ஒத்துவரும்போது திருக்குறளின் பெருமை நம்மாற் போற்றப்படுகின்றது. எனவே, நவரசங்களுந் ததும்பி நிற்கும் திருக்குறள் மக்களைத் தன்வயப்படுத்துதலில் வியப்பொன்றுமில்லை.

## கொம்ப்புறமைஸ்

காலமும் கனவும்
*பின்னிய வலையில்*
காலை விரித்து
நடந்து வந்தேன்.

வாழ்க்கையை உணரும்
வயது வந்ததும்
வசமாய் நானும்
மாட்டிக் கொண்டேன்.

திரும்பவோ, தொடர்ந்து
செல்லவோ இயலாது
இருந்தது திகைத்தேன்
என்னுள் மலைத்தேன்.

உணரவும் கொஞ்சக்
காலம் பிடித்தது
உணர்ந்தேன் இதுதான்
வாழ்க்கை என்று.

பின்னர் என்ன!
நாளையோ வாழ்வின்
பிடித்தமான
கடைசிப் பகுதி.
மரணம் வந்திடும்
மடிவேன் நானும்
செய்தது ஒன்றும்
சீராய் இலைதான்.
என்பதை நோகவும்
இதயம் இல்லை.

போகிறேன் நாளையைத்
தேடிப் போகிறேன்.
புதுவழி என்பதில்
தானோர் புதுமை
என்பிழை என்பதில்
தானோர் இனிமை.

## அனுபவம்

நான் ஓடிவந்த பாதை
*ஒரு மூடன் சொன்ன காதை*
நான் உலவி வந்த பூங்கா
ஒரு மலரில்லாத மாலை

நான் பாடி வந்த ராஹம்
என் பாவம் செய்த சோகம்
நான் பழகிய வந்த கானம்
என் தனிமை போடும் ஓலம்

நான் தேடி வந்த செல்வம்
ஒரு தெய்வ நிந்தையாமோ
நான் தேர்ந்து வந்த பாடம்
மிகத் தூரமுள்ள ஞானம்

## உறுதி

காலச் சக்கரத்தின்
அடியில் நசுங்கி
நான்
முடமாய் எழுந்தேன்

இன்னும்
என் பாதை
வானத்தின் அடியில்
முட்டிநின்றது.

என் முடத்தோடு
நான்
நடந்தே ஆவேன்.

## கடைசி ஆசை

காணி நிலம் வேண்டாம்
ஒரு கட்டிடமோ
தளபாடமோ வேண்டாம்
கூடவே பூங்கா வேண்டாம்
இன்னும் கொள்ளை
கொள்ளையாய் பணமுமே
வேண்டாம் நாவினிக்கப்
பண்டம் ஒரு
நாளினில் ஆயினும் தந்திட
வேண்டாம் மாடாய்
உழைத்திடுவேன் மன
நிம்மதியோடு உறங்கிட
ஆறடி.........

\- வேதாந்தி

கரன் நகை வாணிபம்
50, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்
தொலைபேசி 222 6083

.......................................................................

திரு.சீ.கனேஸ்குமார்
81, முள்ளி வீதி
அரியாலை
தொலைபேசி: 077 628383

.......................................................................

வேல் முருகன் வணிக
நிலையம்
56/A, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.

அழகு சாதனப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள், பாடசாலை
உபகரணங்கள் மற்றும் அனைத்து
அழகு சாதனப் பொருட்களுக்கும்
இன்றே நாடுங்கள்

# உமா வண்ணச் சோலை

## 30,25, நவீன சந்தை
## யாழ்ப்பாணம்.

.................................................................

உங்கள் புகைப்படத் தேவைகள்
எதுவாயினும் டிஜிட்டல் தொழில்
நுட்பத்தில் உயிரோட்டமாக
வடிவமைத்திட ஒரு முறை விஜயம்
செய்து பாருங்கள்! பிரமித்துப்
போவீர்கள்!

# விஸ்ட்டாவிஷன்
# டிஜிட்டல் கலர்லாப்

## 52, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

பட்டாபி படமாடம்
இல. 64, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

கிளை:
இல. 226, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்.

....................................................................

நியூ பிரியங்கா
நகைமாளிகை
2G, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021-2225644

ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்
பலாலி வீதி
திருநெல்வேலி.

.......................................................

திருச்செல்வம் ஜெயக்குமார்
(சுதா)
79, குறுக்குத் தெரு
நல்லூர்
தொலைபேசி 222 2672

.......................................................

ராம் C.D வேல்ட் & எலக்ரோனிக்
220, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

புதிய நவீனா நகையகம்
இல. 189, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777-115625

சாருணியுவல் கட்டிங் வேக்
74, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

சுவிஸ் விருந்தகம்
352, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:

ப.இராசலிங்கம்

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்
சமூக நோக்கில் கல்வி உலகுக்கு
எமது சேவைகள்

நூல் நிலையம்
நூல் வெளியீடு
நூல் அறிமுகம்
நூல் கொள்வனவு
நூல் விமர்சனம்

சஞ்சிகைகள், நாளிதழ்கள் விற்பனை
புலமையாளர் கௌரவிப்பு
புலமைப்பரிசில் வழங்கல்
அனைத்துலக தினங்கள்
பெரியோர்கள் தினங்கள்
திரைப்பட விமர்சனம்

கட்டைவேலி
நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்
கரவெட்டி.